யாகோபு

வைத்தியம் - 300
செந்தூர சூஸ்திரம் - 150
சூஸ்திரம் - 55
சூஸ்திரச் சுருக்கம் - 155
சூஸ்திரச் சுருக்கம் - 57

தாமரை நூலகம், சென்னை - 26.

யாகோபு

வைத்தியம்-300, செந்தூரசூத்திரம்-150, செந்தூரம் 150க்கு எடைபாகம் சொல்லக்கூடிய சூத்திரம்-55

சுண்ணம் 300க்கு சூத்திரச்சுருக்கம் -155 சூத்திரச்சுருக்கம்-57

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 251
முதல் பதிப்பு : ஜனவரி 2000
இரண்டாம் பதிப்பு : மார்ச் 2004
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2014
நான்காம் பதிப்பு: ஏப்ரல் : 2022

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர் : யாகோபு வைத்தியம் 300 முதலிய ஐந்து நூல்கள்
பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்
வெளியிட்டோர் : தாமரை நூலகம் சென்னை-26
பதிப்பு ஆண்டு : ஏப்ரல் : 2022
உரிமை : பதிப்பகத்துக்கு
நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ
அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ
மொத்த பக்கங்கள் : 192
விலை : ரூ. 90
அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை-34

பதிப்புரை

அகஸ்தியரின் சீடரான இராமதேவரே மெக்காவில் சென்று இஸ்லாம் மதத்தில் சேர்ந்து யாகோபு என்ற பெயர் பூண்டு நெடுநாள் அங்கு வாழ்ந்திருந்தார் என்பதும், இஸ்லாமியர் மொழியில் பல வைத்திய நூல்களை இயற்றினார் என்பதும் சித்தர்கள் வரலாற்றில் கண்டோம்.

மெக்காவில் சமாதியில் அமர்ந்த யாகோபு தமிழ்நாட்டிற்கு வந்து சதுரகிரியில் தாம் தங்கியிருந்த இடத்திலேயே தங்கினார். அதற்கு யாகோபுவனம் என்று பெயர். அப்போது தாம் இஸ்லாமிய மொழியில் இயற்றிய நூல்களைத் தமிழிலும் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அதன் காரணமாகச் சிறிதும் பெரிதுமாகப் பதினேழு நூல்களைத் தமிழில் இயற்றினார்.

இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஐந்து நூல்களுடன் யாகோபு பெயரால் வெளிவந்துள்ள பதினேழு நூல்களும் பூர்த்தியாகின்றன.

யாகோபு கூறியுள்ள வைத்திய முறைகள் எளிதானவை. பாடல்கள் அற்புதமானவை. படிக்கப் படிக்கச் சுவை சேர்க்கும் இனிய தமிழில் கற்பனை நயம் மிக்க பாடல்களை யாகோபு பாடியிருக்கிறார். வியக்கத்தக்க உவமைகளும், அணிகளும் யாகோபின் பாடல்களை அணி செய்வன. தாம் இராமதேவராக இருந்ததையும் மெக்கா சென்றதையும் பின்வரும் பாடலால் உறுதிப் படுத்துகிறார்

வழங்கவே என்பேரு ராமதேவன்
வகையாகப் பெருநூல்கள் பாடினேன்பார்
தழங்கவே மறைவாக மறைத்துப் போட்டேன்
தாட்டிகமாய் மக்காவின் தேச மேகி
துளைக்கவே மகமதுவின் மார்க்கந் தன்னில்
சுகமாகக் கூடியே சுருக்க மெல்லாம்
விளங்கவே சொல்லிவிட்டேன் சத்து மார்க்கம்
விதமான செம்பெடுக்க வழி சென்னேனே.

செந்தூர சூஸ்திரம்—146

IV

வைத்தியம் செய்யவேண்டிய காலத்தில் செய்யவேண்டும். அதை விட்டு கவனமில்லாதிருந்தால் என்ன நடக்கும் என்பதைப் பின் வரும் பாடலில் மிக அழகாகக் கூறுகிறார்.

காலிலே முள்ளுத் தைத்தவுடனே தான்
கண்ட முள்ளை எடுத்து எறிந்திடில்
சோலியேது வியாதிகளுமில்லை
தோணாமல் அதை விட்டுமே வைத்திட்டால்
வேலிக்கு முள்ளிடக் காலில் பாய்ந்தாற்போல்
மிக்கச் சீயும் பிடித்துப் புரைவைத்து
மேலினிற் சுர சன்னியும் வந்திடும்
வேணுமென்று நீ தேடின தாகுமே.

வைத்தியம் 300/162

காலம் அறிந்து வைத்தியம் செய்யாதவன் தனக்குத்தானே நோயைத் தேடிக் கொள்கிறான். அவன் வருத்தப்பட்டுப் பயன் என்ன ?

யாகோபின் கவிதை நயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு.

வாசுகியின் எடை சமயாய்க் காரி சேர்த்து
வட்டமிட்டு உருக்கியிடு அன்னந் தன்னில்.

வாசுகி = பாம்பு = நாகம்
காரி= காரியம்
அன்னம் = சோற்றுக் கற்றாழை.

இப்படி இன்னும் எத்தனையோ எடுத்துக் காட்டலாம். படித்தவர் விடார். பயன் கண்டவர் என்றுமே மறக்கமாட்டார்

பதிப்பாசிரியர்
எஸ்.பி. இராமச்சந்திரன்

வைத்தியம் 300

பொருளடக்கம்

உ

கடவுள் துணை

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

வைத்தியம் 300

காப்பு

ஆரணத்து ளமர்ந்திடு சோதியை
தாரணத்துள் சதாதொழு தேத்தியே
காரணக்குரு வாகிய கர்த்தனை
பூரணத்திற் பொருந்தியே போற்றுவாம்

ஏகமான வெளிக்குள் வெளியதாய்
பாகமாகப் பரிந்திடு சோதியை
தாகமாகவே தான்தொழு தேத்தியே
யோகமாகவே யுள்நினைந் தோதுவாம்.

ஆதிநாத னமைத்த படைப்பினில்
பேதியாமற் பிறந்த வைத்தியம்
ஓதித்தேர உருக்குமா னுக்கிதை
நீதியாக நிறைப்படி சொல்லுவேன்.

நூல் வரலாறு

ஆதியிலே இராமனென்று பேரும்பெற்று
அன்புடனே சதுரகிரி தனிலிருந்து
நீதியுட னக்கனமாய் மக்கஞ்சென்று
நேர்மையுட னபிமாரைக் கண்டுபோற்றி
கோதில்லா தங்கிருக்கும் போதெனக்குக்
கொடுத்தார்கள் நபிமார்கள் யாக்கோபென்று
வாதியென்று உலகோர்கள் சொல்லவேதான்
மக்காவிற் றானிருந்து பின்புதானே. 1

தானென்ற மக்காவி லனேகநூல்கள்
தக்கபடி சொல்லிவைத்து அதைவிட்டேகித்
தேனென்ற சதுரகிரி மத்திவந்தேன்
திருமூலர் கண்டென்னை யிருக்கவைத்தார்
நானென்று அங்கிருக்கும் போதுசித்தர்
நலமாக வந்தென்னைக் கண்டுகொண்டு
கோனென்றே நானிருந்த இடந்தனக்குக்
கொடுத்தார்கள் துலுக்கன்மொட்டையென்றுபேரே. 2

பேரான துலுக்கன்மொட்டை தனிலிருந்து
பிரபலமாய் வகாரவித்தை யனேகஞ்செய்து
நேரான பள்ளியொன்று யிங்கமைத்து
நேர்மையுடன் றானிருக்கும் போதுதானும்
சீரான ருக்குமா னிவடந்தன்னில்
தேடியென் னிடம்வந்து இருந்துகொண்டு
கூராக வாதவைத் தியங்கள்கேட்கக்
குறிப்புடன் சொலக்கேட்டு மகிழ்வுற்றாரே. 3

மகிழ்வுற்று யென்னிடத்தி லருக்கு மாறும்
வகையாகத் தானிருந்து வருகும்போது
அகமகிழ்வாய் இதுகாருஞ் சொன்னதெல்லாம்
அன்புடனே தான்கேட்டேன் சரக்குச்சுத்தி
சுகமாக கைநாடி வைத்தியங்கள்
சூட்சமுள்ள மந்திரங்கள் சரசாஸ்திரங்கள்
புகழாக வியாதிவருங் குணங்கடன்னைப்
பூரணமாய் எந்தனுக்கு இயம்புவீரே. 4

இயம்பென்ற ருக்குமான் றனக்குத்தானும்
இனிமையுடன் யாக்கோப்பு இயம்புகின்றேன்
நயம்படவே வாதவைத் தியங்கள் சொன்னேன்
நல்லதொரு பஸ்பஞ்செந் தூரஞ்சொன்னேன்
சுயமாக சுண்ணத்தின்யோக குருசொன்னேன்
துய்யநல்ல நவலோகக் களங்குஞ்சொன்னேன்
மயமாகத் திராவகத்தின் மார்க்கஞ்சொன்னேன்
மந்திரஉச் சாடணத்தை வாகாய்க்கேளே. 5

வாகாக மந்திரஉச் சாடணங்கள்
மயமாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
ஆகமவிலா சமாயக் கோடுபோடு
அறுபத்து நாலுஅரை வீடுகீறு
ஏகவெளி சுத்தியே சூலம்போடு
எழுதுபிஸ் மில்லாகி ஹகமதா
யோக அசாத்து சய்யதப்துல்
உற்ற காதர்சயி லாணியென்றே. 6

என்ற அபூலணி பிதனில்லாஹீம்
எழுதுவீர் ரஹீம்ஹய ராஹீம்ரூஹீம்
நன்றா யல்லா யாராஹீம்
நாட்டுவாய் ரஹிமான் என்குருவை
இன்றே சூனியம் விஷங்களுக்கு
இதமாய் வகைப்படி குறித்தெழுதி
அன்றே ஓம்நம சிவாயாஓம்
ஹரிஓம் நமசிவாயசிவா நமசிவாயவென்றே. 7

சங்குசங் கென்றேயி ரண்டிடத்தில்
தவறாம லங்கே யெழுதவேணும்
சிங்குசிங் கென்றேயி ரண்டிடத்தில்
சேரவே யெழுதிக்கொள் ளதின்கீழே
வங்குவங் கென்றே இரண்டிடத்தில்
வகையா யெழுது அச்சரத்தை
பங்கமில் லாமல்வசி நசிமசியென
பார்த்துத் தான்கீழே யெழுதிவிடே. 8

போட்டுமே அச்சரமந் திரமுந்தானும்
புகழாக யெழுதியே கட்டவென்றால்
காட்டோலைத் தாம்பூரத் தகட்டிலேனுங்
காரியத் தகடடித்து யெழுதவேணும்
கூட்டிமடக் கியேநூல்கள் சுத்தவேணும்
கூறுடனே பத்துமுடித் தேமுடிந்து
நாட்டுச் சாம்பிராணித் தூபமிட்டு
நன்றாய் நசலுக்கு கட்டிவிடே. 9

விடமதுவும் போய்விடும் ஏவலோடு
வெடிபில்லி சூனியமும் பார்வைபோகும்
திடமுடனே யெவ்வேலைக் கெழுதினாலும்
தீரமுடனிப் படியே யெழுதிக்கட்டு
தடதடன எந்திரத்தில் மந்திரமோத
தடையிலா நசலெல்லாம் பறந்தேபோகும்
படமெடுத்தா டியபாம்பு மொடுங்கிப்போகும்
பரிவான சூனியமும் பறக்குந்தானே. 10

சூனியத்தா லாட்டிபயம் மனதில்திக்குச்
சொல்லாம லோடிவிடு மிதுகளெல்லாம்
ஆனிநல்ல எந்திரமந் திரங்கள்தன்னை
அடைவாகச் சொல்லிவிட்டே னருமையாக
ஊனியே மனதினா லுருத்தான்போட்டு
உண்மையுடன் வேம்பிலையுஞ் சாம்பலாலும்
பாணியிலும் ஓதிவிடும் மந்திரத்தைப்
பண்பாம்வஞ் சனைபேய்கள் பறக்குந்தானே 11

பறக்குமென்று சொன்னதெல்லாம் பொய்யாகாது
பண்புடனே அனுதினமும் உறுவேபோடு
சிறக்கவே சொல்லிவிட்டே னருமையாக
செய்தறிந்து பார்த்துக்கோ தீரமாக
நிறக்கவே நபிமாரைத் தொழுதுபோற்று
நிச்சயமாய்ச் சுண்ணச்செந் தூரஞ்செய்ய
இறக்கமுடன் பாஷாணச் சுத்தியெல்லாம்
இனிமையுட னுந்தனுக்கு இயம்புவேனே. 12

சுத்தி முறை

இயம்புவேன் சுத்திமுறை வீப்ரந்தன்னை
எல்லாமுஞ் சொல்லுகிறேன் விபரமாக
நயம்படவே வீரமது சுத்திகேளு
நல்லஇள நீரிற்கற் பூரம்போட்டு
சுயம்பான சட்டியிலே கலக்கிக்கொண்டு
தொளாந்திரமாய் வீரத்தைக் கட்டியேதான்
மயமாக அடுப்பேத்தி யெரித்துக்கொண்டால்
வலுவான வீரமுந்தான் சுத்தியாச்சே. 13

வீரத்தை வாங்கி ஒருஇளநீர் தண்ணீரை விட்டு ஒன்னே கால் விராகனிடை கற்பூரம் வாங்கிபோட்டுக் கலக்கி சட்டியிலூத்தி அடுப்பேத்தி மேற்படி வீரத்தை தொளாந்திரமாகக்கட்டி யெரித்து யெடுக்கச் சுத்தியாகும்.

பூரஞ்சுத்தி

சுத்திதான் பூரமதைச் செய்யுதற்கு
சுயமாம்வெற் றிலைமிளகுக் கியாழமிட்டுப்
புத்தியாய் பூரத்தைக் கிளிதான்கட்டி
புகழாக மூன்றுநா ளூறவைத்து
சித்தியுடன் றானெடுத்துப் பூரந்தன்னைத்
திறமாகக் காயவைத்து யெடுத்துக்கொண்டு
நத்தியே சுண்ணச்செந் தூரஞ்செய்ய
நலமாகும் வியாதிக்குக் கொடுத்துப்பாரே. 14

பூரத்தைவாங்கி வைத்துக்கொண்டு ஒருசட்டியில் வெற்றிலையைகுருக அரிந்து போட்டு மிளகும் ஒடைத்து அத்துடன் போட்டு அரைப்படிதண்ணீர்விட்டுக் கியாழமாக்கி அதில்பூரத்தை கிளிக்கட்டி மூன்றுநா ளூறவைத் தெடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

லிங்கசுத்தி

பாரேயோர் கட்டியாய் லிங்கம்வாங்கிப்
பகரொருநாள் தேனதிலே ஊறப்போட்டு
நேரேதா னதையெடுத்து அமுர்தப்பாலில்
நேர்மையுடன் றானொருநா ளூறப்போட்டு
சீரேதான் எலுமிச்சம் பழச்சாரோடு
சிறந்தகுப்பை மேனிச்சா ரமுதப்பாலும்
காரேதான் மூன்றையுமே சேர்த்துவைத்துக்
கருத்தாக அடுப்பிலே சட்டியேத்தி
தாரேலிங் கத்தைச்சட் டியிலேவைத்துத்
தடையன்றிப் புகையாமல் சுருக்குத்தாக்கே. 15

லிங்கத்தை யொருகட்டியாக வாங்கி ஒரு பாத்திரத்தில் லிங்கம் முங்கக்கூடிய தேன்விட்டு ஒருநாள் ஊறின்பின்னெடுத்து பின்பு அமுர்தப்பால் லிங்கம் முங்கவிட்டு ஒருநாள் ஊறவைத்து எடுத்து எலுமிச்சம்பழச்சாரும் குப்பைமேனிச்சாரும் அமுர்தப்பாலும்

மூன்றுஞ் சமமாய்க்கலந்து வைத்துக்கொண்டு ஒருசட்டியை அடுப்பேத்திக் காயவைத்து அந்தசட்டிக்குள் லிங்கத்தை வைத்து புகையாமல் கலந்து வைத்தச்சாரை சுருக்கு கொடுத்தெடுக்க சுத்தியாம்.

இரசசுத்தி

தாக்குகின்ற சூதத்தை யருக்கன்பாலில்
தானொருநா ளூறவைத்து யெடுத்துக்கொண்டு
நோக்கமுடன் செங்கலது தூளுங்கொஞ்சம்
நூண்ணிதமாய்ப் புகையீரற் றூளுங்கொஞ்சம்
ஆக்கமுடன் மஞ்சளது தூளுங்கொஞ்சம்
அடைவான சர்க்கரைதா னதற்குக்கொஞ்சம்
பாக்கியிலா நாலுடனே ரசத்தைவிட்டுப்
பண்புடனே அரைத்தெடுக்கச் சுத்தியாச்சே. 16

எருக்கப்பால் பிடித்துவந்து சூதத்தையும் அதற்குள்விட்டு ஒருநாள் ஊறியெடுத்த பின்பு மேற்படி சூதத்தைக் கல்வத்தில்விட்டு செங்கல் தூளும் புகையீரல் தூளும் மஞ்சள் தூளும் சர்க்கரையும் அத்துடன்போட்டு அரைத்தெடுக்கச் சுத்தியாகும்.

மற்றொருவித ரசசுத்தி

சுத்தித்த ரசமதனை யெடுத்துப்பின்பு
சுகமாகக் கல்வத்தி லிட்டுக்கொண்டு
சித்தியுள்ள வெள்ளைப்பூண் டதையுரித்துத்
திறமையுட னதைப்போட்டு அரைத்தெடுக்கப்
பத்தியுள ரசந்தானுஞ் சுத்தியாச்சு
பக்குவமாய்த் தானெடுத்து வைத்துக்கொண்டு
எத்திசையு மறியவே சூதந்தன்னை
இயல்பாகச் சூதச்செந் தூரஞ்செய்யே. 17

முன்சுத்தித்த சூதத்தைக் கல்வத்திலிட்டு அத்துடன் வெள்ளைப் பூண்டை யுரித்துப்போட்டு இரண்டுஞ் சேர்த்தரைத்து எடுக்க மிகுந்த சுத்தியாகும். இதைச் செந்தூரஞ் செய்யச் சகல காரியாதிகளுக்கும் உபயோகமாகும்.

வெள்ளைப்பாஷாணச் சுத்தி

செய்யப்பா வெள்ளைப்பா ஷாணச்சுத்தி
திறமாக வாங்கிவந்து வைத்துக்கொண்டு
உய்யவே சிறுவருட அமுரிவாங்கி
உயர்வான மிளகுதனை யரைத்துப்போட்டு
மெய்யான பாஷாணங் கிளிதான்காட்டி
விதமான அடுப்பேத்தி எரித்தெடுத்து
பையவே கழுவியதை உலர்த்திக்கொண்டால்
பக்குவமாஞ் சரியான சுத்தியாச்சே. 18

சுத்தமான வெள்ளைப் பாஷாணத்தை வாங்கி வைத்துக் கொண்டு சிறுவருடைய அமுரி ஒருபடி வாங்கி அதில் நல்ல மிளகு கொஞ்சம் அரைத்துப்போட்டுக்கலக்கி வெள்ளைப் பாஷாணத்தைக் கிளிக்கட்டி அதிற் போட்டு வத்தக் காய்ச்சியபின் கிளியையெடுத்துக் கழுவி யுலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

பாஷாணச்சுத்தி

சரியான பாஷாணந் தன்னைவாங்கி
தான்சுத்தி செய்யுதற்கு முறையைக்கேளு
பெரிதான மேனிச்சார் வெற்றிலைச்சார்
பெரியதொரு செம்பருத்திப் பழச்சாறோடு
உரியதொரு சிற்றமுரிக் கற்றாழம்பால்
ஒருபடிதான் வகைக்குவகை தானும்வாங்கி
சிரிதான அமுர்தப்பால் படிகால்வாங்கிச்
சிறப்பாகச் சட்டியிலே விட்டுக்கொள்ளே. 19

நல்ல பாஷாணமாய் வாங்கி வைத்துக்கொண்டு சட்டியில் குப்பைமேனிச்சார் வெற்றிலைச்சார் செம்பருத்திச்சார் எலுமிச்சம் பழச்சார் சோற்றுக் கற்றாழைச்சார் சிற்றமுரி வகைக்கொரு படி வாங்கி அத்துடனே அமுர்தப்பால் படி கால்விட்டுக் கலந்து அப்பால் மறுபாட்டு பார்க்கவும்.

விட்டபின்பு படிகாரம் பாரையுப்பும்
வெடிகாரம் நவச்சாரம் வகைக்குத்தானும்
சட்டமுடன் பலங்கால்தான் தூள்கள்செய்து
சட்டியிட்டு சரக்கதனை கிளிதான்கட்டித்

திட்டமுடன் காற்றில்லா நிழலிலேதான்
திறமாமூ வைந்துநாள் வைத்தெடுத்துக்
கட்டமிலாக் காடியினி லூறவைத்துக்
கருத்தாக எடுத்துப்பார் சுத்தியாமே. 20

முன்சொன்ன ஏழு சாமானுடன் படிகாரம் பாரையுப்பு வெடிக்காரம் நவச்சாரம் இந்த நாலு சரக்கிலும் வகைக்குப் பலன் கால்வாங்கித் தூள்செய்து முன்சொன்ன ஏழுசாமான் சாற்றிலும் போட்டுக்கலக்கி பாஷாணத்தைக் கிளிக்கட்டி காற்றில்லாதநிழலில் பதினைந்துநாள் வைத்தெடுத்து அப்பால் காடியி லூறவைத்து யெடுக்கச் சுத்தியாகும்.

64- பாஷாணச்சுத்தி

சுத்திசெய் பாஷாண மறுபத்தினாலும்
சுகமாக சுத்திக்கு முறைதான்கேளு
சுத்தியுள மேனிச்சார் தக்காளிச்சார்
தக்கஊ மத்தஞ்சார் பழச்சாரோடு
புத்தியுடன் சிறுநீறும் புளித்தகாடி
புகழ்சமனாய்க் கலந்ததனை வைத்துக்கொண்டு
சித்தியுடன் வெடியுப்பு உப்புச்சுண்ணம்
சீனம்நவச் சாரமுடன் வகைக்குத்தானே. 21

பாஷாணமென்று சொல்லக்கூடிய அறுபத்து நான்கு பாஷாணங்களில் எந்தப்பாஷாணஞ் சுத்திசெய்யவேண்டு மானாலும் அந்தப்பாஷாணத்தை வாங்கிக் கொண்டு குப்பைமேனி தக்காளி, ஊமத்தை இந்த மூன்றையுஞ் சாறு வாங்கி எலுமிச்சம் பழச்சாறும், சிறுநீரும், புளித்த காடியும் சமனாய்ச் சேர்த்து வைத்துக்கொண்டு வெடியுப்பு, உப்புச்சுண்ணம், சீனம், நவச்சாரமும் இனி மறு பாட்டைப் பார்க்கவும்

மேற்படி பாஷாணச்சுத்தி

தானென்ற வகைவகைக்குப் பலங்கால்வாங்கித்
தக்கபடி தூள்செய்து சாற்றிற்சேர்த்து
நானென்ற சரக்குகளைக் கிளியாய்க்கட்டி
நலமாமண்டலங்கழித்து எடுத்துத்தானும்

கோனென்ற சரக்குகளை உலர்த்திக்கொள்ளக்
கொடியபா ஷாணமெல்லாஞ் சுத்தியாச்சு
வேனென்ற யாக்கோபு மகிழ்வதாக
வெளியாகச் சொல்லிவிட்டேன் செய்துபாரே. 22

வகைக்குப் பலங்கால் வாங்கித் தூள் செய்து மேற்கண்ட சாற்றில் சேர்த்துச் சுத்திசெய்யவேண்டிய பாஷாணத்தைக் கிளியாய்க்கட்டி வைத்து ஒரு மண்டலங்கழித்து எடுத்து சரக்கை உலர்த்தி வைக்க நல்ல சுத்தியாகும்.

முதார்சிங்கிச்சுத்தி

செய்யுமுதார் சிங்கிசுத்தி சொல்லக்கேளு
திறமாமு தாரசிங்கிக் கட்டிவாங்கி
ஐயமிலா வெள்ளாட்டுக் கோமயத்தில்
அன்புடனே தான்போட்டு வேகவைத்துப்
பையவே ஆறவிட்டு அதையெடுத்துப்
பக்குவமாய்ச் சுண்ணச்செந் தூரஞ்செய்ய
மெய்யாக யாக்கோபு சொன்னேன்பாரு
மேதினியோர்க் கிதுநல்ல மார்க்கந்தானே. 23

முதார சிங்கியை வாங்கி ஒரு சட்டியில் வெள்ளாட்டுக் கோமயம் பிடித்து அதில் முதார் சிங்கியைப் போட்டுச் சட்டியை அடுப்பேற்றி ஒரு நாழிகைவரை கொதிக்க வைத்தெடுத்துக் காயவைக்கச் சுத்தியாகும்.

கௌரிசுத்தி

மார்க்கமுள்ள கௌரியைத்தான் வாங்கிவந்து
வடிவான சாணிப்பால் பசும்பாலோடு
ஏர்க்கையுள மிளகுக்கி யாழம்வாங்கி
இனிமைச்சுண் ணாம்புநீர் இவைநாலிற்றான்
தீர்க்கமுடன் தனித்தனியாய்ச் சட்டியிட்டுச்
செயகௌரி யைத்தானுந் தொளாந்திரங்கட்டிப்
பார்க்குள்ளே நாலுதரம் எரித்தெடுத்துப்
பன்றிப்பாலிற் போட்டு அவித்துக்கொள்ளே. 24

வெள்ளைக்கௌரியாய் வாங்கிவந்து பசும்பால் அல்லது சாணிப்பால், சுண்ணாம்புநீர், மிளகுக்கியாழம் இன்னான்கில் எதிலாவது சட்டியிலிட்டு மருந்தைத் தொளாந்திரமாகக்கட்டி அடுப்பேற்றி ஒருநாழிகை வரை யெரித்து யெடுத்த பிறகு பன்றிப்பால் ஙிளிக்கட்டி அவித்தெடுக்கச் சுத்தியாகும்

மனோசிலைசுத்தி

போட்டதொரு மனோசிலையை வாங்கிவந்து
புகழான காடிதனைச் சட்டியிட்டு
நாட்டமுடன் மனோசிலையைக் கிளிளதான்கட்டி
நன்மையுடன் றானெடுத்து வைத்துக்கொண்டு
தேட்டமுடன் வெள்ளாட்டு அமுரிதன்னில்
திரமாகத் தொளாந்திரமுங் கட்டியேதான்
தாட்டிகமா யெரித்தெடுக்கச் சுத்தியாச்சே
தான்சொன்னேன் யாகோபு இன்றுதானே. 25

மனோசிலையை நல்லதாய்ப் பார்த்து வாங்கிவந்து ஒருசட்டியில் புளித்தகாடிவிட்டு மனோசிலையைக் கிளிகட்டிப் போட்டுயெடுத்து அப்பால் வெள்ளாட்டு அமுரியை ஒரு சட்டியில் விட்டு அதில் மருந்தைத் தொளாந்திரங்கட்டி யெரித்து எடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

கெந்தகச்சுத்தி

இன்றுமே கெந்திதனை வாங்கிக்கொண்டு
இனிமையுடன் சட்டிக்குள் பாலைவிட்டு
அன்றுமே துணியாலே வேடுகட்டி
அதன்மேலே கெந்திதனைத் தான்பரப்பிச்
சென்றுமே அடுப்பேற்றித் தீயெரிக்கத்
திரமாக உறுகியது பாலில்வீழும்
நன்றுமே இப்படியேழ் தரமுஞ்செய்ய
நல்லதொரு யாக்கோபு சொன்னேன்நானே. 26

கெந்தகத்தை வாங்கிவைத்துக் கொண்டு ஒரு சட்டிக்குள் பசும்பாலைவிட்டுச் சட்டியின்மேலே துணியால் வேடுகட்டி அந்தத் துணியில் மேலே கெந்தகத்தைப் பரப்பி அதன்மேல் கவுசட்டி

போட்டுமூடி புட்டு அவித்ததுபோல அடுப்பேற்றி அவிக்க கெந்தகம் யாவும் உருகிப்பாலில்வீழும். இப்படி யேழுதரஞ் செய்ய நல்லசுத்தியாகும்.

தாளகச்சுத்தி

நானென்ற தாளகத்தின் சுத்திகேளு
நலமான தாளகத்தின் கட்டிவாங்கி
தானென்று சுண்ணாம்புக் கல்லைவாங்கி
தான்பரப்பித் தாளகத்தை யதன்மேல்வைத்துக்
கானென்ற சுண்ணாம்பை அதன்மேல்போட்டுக்
கமுதைமூத் திரம்விட்டு சுண்ணம்நீத்து
கோனென்று இப்படியேழ் தரமேநீத்திக்
கொண்டெடுக்கத் தாளகமுஞ் சுத்தியாச்சே. 27

நீத்தாத சுண்ணாம்புக் கல்கொண்டுவந்து கொஞ்சங்கீழே பரப்பி அதன்மேலே தாளகக்கட்டிகளை வைத்துப் பின்பும் அதன் மேலே சுண்ணாம்புக் கல்லுகளைப் போட்டு நிரப்பி கமுதை அமுரிவிட்டு சுண்ணாம்பை நீத்தவும். இப்படி யேழுதரம் நீத்தி தாளகத்தையெடுத்து நீரிற் கமுவி யெடுக்கச் சுத்தியாகும்.

மேற்படி தாளகச்சுத்தி

சுத்தித்த தாளகத்தைப் பின்பெடுத்துச்
சுருக்கதுவுங் கொடுப்பதற்கு முறையைக்கேளு
பத்தியுடன் தயிர்பூச ணிக்காய்நீரும்
பாங்கான காடிநீர் சுண்ணநீரும்
புத்தியுடன் கொள்ளுக் கியாழநீரும்
புரிவகத்திக் கீரைவிரைத் தயிலங்கூட்டி
நத்தியே சாமம்ரெண்டு சுருக்குத்தாக்க
நன்மையுள்ள சுத்தியென்று சொன்னோம்பாரே. 28

முன்பு சுத்தி செய்த தாளகத்தை யெடுத்து வைத்துக் கொண்டு பூசிணிப்பழத்தை மேலேகீறி மூன்று விராகனிடை இந்துப்பூ அதற்குள் போட்டு அடியில் சிறுதுவாரம் போட்டு உரியில்வைத்துக் கீழே பீங்கான்வைக்க பூசணி நீர் இறங்கும் அந்த நீரும் தயிரும் காடியுட் சுண்ணநீரும் கொள்ளுக்கியாழமும் இவ்வைந்தும் [illegible]றாக

ஒரு சட்டியிலூற்றி அகத்திக்கீரை விரைத்தயிலம் வாங்கி ஒன்றுசேர்த்து இரண்டு சாமம் சுருக்குக் கொடுத்து எடுக்கச் சுத்தியாகும்.

அயத்தொட்டிப் பாஷாணசுத்தி

பாரேநீ அயத்தொட்டி தன்னைவாங்கிப்
பசும்பாலில் நாற்சாம மூறவைத்து
நேரேதா னதையெடுத்து வைத்துகொண்டு
நெய்தேனில் எட்டுநா ளூறப்போட்டு
சீரேதா னதையெடுத்துக் கழுவிக்கொள்ள
சிறப்பான அயத்தொட்டி சுத்தியாச்சு
தேரேதா னென்றுசொல்லி யாக்கோப்தானும்
தெளிவாகச் சொன்னதிந்த முறைதான்பாரே. 29

அயத்தொட்டி சுத்தமானதாக வாங்கிவந்து பசும்பாலை யொரு பாத்திரத்திலூற்றி அயத்தொட்டியைப் போட்டு நான்கு சாமம் ஊறவைத்தெடுத்து பின்பு நெய் தேன் இவை இரண்டிலும் எட்டு நாளூறவிட்டு யெடுக்கச் சுத்தியாச்சே.

தொட்டிப்பாஷாணசுத்தி

முறைப்படியே தொட்டிப்பா ஷாணந்தன்னை
முன்பின்னாய் நறுக்கியே வைத்துக்கொண்டு
நிறைப்படியே துணியிலே கிளிதான்கட்டி
நெல்லுக்குள் வைத்தவித்து யெடுத்துக்கொண்டு
குறையில்லா நெல்லத்னைக் குப்பைதன்னில்
கொட்டிவிட்டுக் கிளியவித்து உலர்த்திவைக்க
மறைபுகழும் யாக்கோபு உரைத்தமார்க்கம்
மகிழ்வாகச் செய்து நீ யெடுத்துக்கொள்ளே. 30

தொட்டிப் பாஷாணத்தை, வாங்கி அமுதப்பாலில் ஒரு தடவையும் வெள்ளாட்டுப்பாலில் ஒரு தடவையும் பத்து நாழிகை ஊறவைத்தெடுத்து துண்டுதுண்டாய் நறுக்கிக் கிளிக்கட்டி நெல்லுக்குள் வைத்து அவித்து யெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும் நெல்லைக் குப்பையிற் கொட்டிவிடவும்.

பொன்னிமிளைச்சுத்தி

எடுத்துமே பொன்னிமிளை தன்னைவாங்கி
இயல்பாகக் காடியினி லூறப்போட்டு
விடுத்தபிறபி ரேக்குஒரு படிதூள்தன்னை
மிக்கபசுங் கோமயத்திற் போட்டுஇன்னும்
அடுத்ததொரு பொன்னிமிளை தன்னைச்சேர்த்து
அடைவாக வேகவைத் தெடுத்துலர்த்திக்
கடுத்ததொரு காடியினி லூறப்போட்டுக்
காயவைத்து யெடுத்துப்பார் சுத்தியாச்சே.

பொன்னிமிளையை வாங்கி மூன்றுநாள் காடியினி லூறப்போட்டெடுத்துப் பின்பு அபிரேக்கு ஒருபடி வாங்கி தூள்செய்து பசுங்கோமயத்திற் போட்டுக் கலக்கி அதில் பொன்னிமிளையைப் போட்டு வேகவைத்தெடுத்து காடியி லூறப்போட்டு யெடுத்துக் காயவைத்துக்கொள்ள சுத்தியாகும.

கெருடபச்சைச்சுத்தி

பாரப்பா கெருடபச்சை தன்னைவாங்கிப்
பண்பாகப் பயறுபோல் நறுக்கிக்கொண்டு
சீரப்பா அதைத்தானுங் கிளியேகட்டிச்
செயமான குமரிச்சார் தன்னைவாங்கி
நேரப்பா குமரியுட சாற்றினுள்ளே
நிறையாக ஒருநாள்நீ ஊறப்போட்டு
சேரப்பா அதையெடுத்துக் காயவைத்தால்
தேடினதோர் பொருளாச்சு சித்தியாச்சே. 32

கெருட பச்சையை வாங்கி பயறுபோல் நறுக்கிக் கிளிக்கட்டி வைத்துச் சோற்றுக் கற்றாழைப் பாலு வாங்கி அதனுள்ளே கிளிக்கட்டி இருக்கிற கெருடப் பச்சையைப் போட்டு ஒரு நாளூறவைத் தெடுத்துக் காயவைத்து சட்டியில் வைத்துக் கொள்ளச்சுத்தியாகும்.

சிலாசத்தின்சுத்தி

சித்தித்த சிலாசத்தை வாங்கிவந்து
சிறப்பாகப் பழரசத்திற் கொதிக்கவைத்து
மத்தித்த பிற்பாடு எருக்கம்பாலில்
மயமாக ஊறினபின் கழுவிப்பின்பு

பத்தியுடன் அல்லிப்பூ ரசத்திற்றானும்
பண்பாக ஊறவைத்து தெடுத்துக்கொண்டு
துத்தியமாயா வின்பால் தன்னிலேதான்
தொளாந்திரங் கட்டியெரித் தெடுத்துக்கொள்ளே. 33

சிலாசத்தை வாங்கி வந்து எலுமிச்சம்பழச் சாற்றிற் போட்டுக் கொதிக்கவைத்துப் பின்பு எருக்கம்பாலில் மூன்றுநாழிகை ஊறவைத்தெடுத்தப் பின்பு அல்லிப் பூ ரசத்தில் ஊறவைத்து எடுத்து ஒரு சட்டியில் ஆவின்பால்விட்டுச் சிலாசத்தைத் தொளாந் திரங் கட்டியெரித்து எடுக்கச்சுத்தியாகும்.

கல்நார்சுத்தி- சீனஞ்சுத்தி

ளரித்துவிட்டுக் கல்நாரை வாங்கிவந்து
இயல்பாகக் கழுதை மூத்திரத்திலேதான்
துரிதமுடன் ஊறவைத் தெடுத்துக்கொண்டு
சுகமாகக் கழுவியதை வைத்துக்கொள்ளு
அரிதான சீனமதின் சுத்திகேளு
அன்பாகச் சீனமதை பசும்பால் தன்னிற்
பெரிதாக முச்சாமம் ஊறவைக்கப்
பேணியே நல்லசுத்தி யாச்சுபாரே. 34

கல்நாரைக் கொண்டுவந்து ஒருசட்டியிலிட்டு கழுதை யமுரியைவிட்டு மூன்று நாழிகை ஊறினபின் எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். சீனத்தை வாங்கிவந்து பசும்பாலிற் போட்டு மூன்று சாமம் ஊறிய பின்னெடுத் துலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

படிக்காரஞ்சுத்தி

ஆச்சப்பா சட்டியிலே சாணந்தன்னை
. அன்பாக வேகரைத்து வைத்துக்கொண்டு
நீச்சப்பா படிக்காரந் தன்னைத்தானும்
நேர்மையுடன் கிளிக் கட்டிவைத்தெடுத்துப்
பாச்சலுளி சிறுநீரில் மூன்றுநாளும்
பக்குவமா யூறவைத்தெடுத்துப் பின்பு
மாச்சலிலா மற்காயவைத் தெடுத்து
வகையோடு மருந்துகளிற் சேர்த்துப்பாரே. 35

படிக்காரத்தை வாங்கிவந்து ஒரு சட்டியிலே எருமைச்சாணத்தைக் கரைத்துவைத்து படிக்காரத்தை கிளிக்கட்டி வைத்தெடுத்துப்பின்பு சிறு நீரில் மூன்றுநாளூற வைத்தெடுத்துக் காயவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

வெண்காரச்சுத்தி-முடிதாரச்சுத்தி

சேர்த்ததொரு வெண்காரச் சுத்திகேளு
திறமையுடன் பழரசத்தி லரைத்துக்கொண்டு
நேர்த்தியுடன் வில்லைதட்டி உலர்த்திக்கொண்டால்
நேரான சுத்தியீ தாகும்பாரு
ஆர்த்தியுடன் முடிதாரந் தன்னைவாங்கி
அன்பான பனங்கள்ளு படிதான்நாலிற்
சீர்த்தியுடன் கிளிக்கட்டி எரித்தெடுக்க
சிறப்பான சுத்தியிது தெரிந்துகொள்ளே. 36

வெண்காரத்தை வாங்கிவந்து காடியிலாவது எமிச்சம்பழச் சாற்றிலாவது குழியம்மியிற்போட்டு அரைத்து வில்லைதட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

முடிதாரத்தை வாங்கிவந்து பனங்கள்ளு நாலுபடி சட்டியிலிட்டு முடிதாரத்தைக் கிளிக்கட்டி அதிற்போட்டு அடுப்பேற்றி எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

பாலதுத்தஞ்சுத்தி

கொள்ளப்பா பால்துத்தங் கிளிதான்கட்டிக்
குணமான சிறுநீரிற்குள்ளே போட்டு
கள்ளமில்லா மல்லொழுங்கா யேழுநாளுங்
கணக்காக ஊறியபின் னெடுத்துக்கொண்டு
மெள்ளவே பசும்பாலி லிரண்டுசாமம்
மெதுவாக ஊறவைத்து எடுத்துப்பின்பு
உள்ளபடி உலரவைத்த மருந்துசெய்ய
உண்மையுடன் யாக்கோபு சொன்னார்பாரே. 37

பாலத்துத்தத்தை வாங்கி கிளிக்கட்டி சிறுநீரிற் போட்டு ஏழுநாளூறவைத்தெடுத்துப் பசும்பாலிலிரண்டு சாமம் ஊறவைத்து பின்பு உலர்த்திவைக்கச் சுத்தியாம்.

துருசுச் சுத்தி

சொல்லுகிற துருசுதனை வாங்கிவந்து
சுகமுடனே தயிரதனி லூறப்போட்டு
நல்லதொரு தயிரினாற் பின்பரைத்து
நன்றாக வில்லைதட்டி யெடுத்துக்கொண்டு
செல்லமுள்ள ஓடதனை அடுப்பிலேற்றித்
திரமாகப் புரட்டியதை எடுத்துக்கொண்டால்
இல்லமதி லிதைப்போல் சுத்திவேறு
இல்லையென்று யாக்கோபு இயம்பினாரே. 38

துருசைவாங்கி தயிரிலூறப் போட்டு எடுத்துகொஞ்சந் தயிர் விட்டரைத்து வில்லைதட்டி வைத்துக் கொண்டு ஓட்டை அடுப்பிலேற்றி அந்த ஓட்டில் துருசுவில்லையைப் போட்டுப்புரட்டி எடுத்து வைக்கச் சுத்தியாகும்.

பச்சைத்துருசுச் சுத்தி மடல்துத்தஞ் சுத்தி

இயம்பினபச் சைத்துருசை னாங்கிவந்து
இயல்பாக பசுங்கோம யத்திற்போட்டு
நயம்படவே யெரித்தெடுக்கச் சுத்தியாச்சு
நல்லதொரு மடல்துத்தஞ் சுத்திகேளு
பயன்படவே சோற்றுக்கற் றாழைச்சாற்றிற்
பண்பாக ஊறவைத் தெடுத்துக்கொண்டு
செயம்பெறவே தான்கழுவி யுலர்த்திவைத்தாற்
செகமெல்லா மாடலாந் திறமைதானே. 39

பச்சைத்துருசை வாங்கி பசுங்கோமயத்தில் போட்டு அடுப்பேற்றி யெரித்தெடுக்கச் சுத்தியாகும்.

மடல்துத்தத்தைவாங்கி எருமைத் தயிரிலாவது அல்லதுகற்றாழஞ் சாற்றிலாவதுக் கிளிக்கட்டி ஊறவைத்தெடுக்கச் சுத்தியாகும்.

பவளப்புத்து சுத்தி அஞ்சனக்கல் சுத்தி

திரமுள்ள பவளப்புத்தை பசுமோர்தன்னிற்
செவ்வையாய்க் கிளிக்கட்டி அதிலேவைத்து
வரமுடனே நாலுநா ழிகையெரித்து
வகையாகத தானெடுத்க்கச் சத்தியாச்சு

நிரமுடனே அஞ்சனக்கல் வாங்கிவந்து
நிலையான புளியாரைச் சாறுதன்னில்
தாமுடனே நீபோட்டு ஊறவைத்துத்
தானெடுத்துக் கழுவிவைக்கச் சுத்தியாச்சே. 40

பவளப்புத்துவாங்கி கிளிக்கட்டிப் பசுமோரிற்போட்டு அடுப்பேற்றி நாலுநாழிகை எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

அஞ்சனக்கல் கொண்டுவந்து புளியாரைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாகும்.

கல்மதஞ் சுத்தி சகஸ்திரபேதி சுத்தி

ஆச்சே தான் கல்மதத்தை வாங்கிவந்து
அன்பாகச் சிறுநீரி லூறப்போட்டு
தாச்சிலிலா ததையெடுத்துக் கழுவச்சுத்தி
சகஸ்திரபே தியின்சுத்தி தன்மைகேளு
மாச்சலிலா நார்த்தங்காய் ரசத்தைவாங்கி
மயமாக அதிற்தானும் ஊறவைத்து
பேச்சில்லா தேயெடுக்கச் சுத்தியாச்சு
பெலமாக விருப்பமுடன் செய்துபாரே. 41

கல்மதத்தைக் கொண்டுவந்து சிறுநீரிற் போட்டு ஊறவைத் தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். சகஸ்திரபேதியை வாங்கிவந்து நாரத்தங்காய் ரசமெடுத்து அதில் ஊறவைத் தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

வங்கச் சுத்தி

விருப்பமுடன் வங்கசுத்தி சொல்லக்கேளு
மேலான நவச்சாரத் தூள்கள்செய்து
மருவில்லா யிலுப்பைநெய் தேங்காய்நெய்யில்
வடிவான நவச்சாரத் தூளைத்தூவி
திருவாக ஏழுதரம் வங்கந்தன்னைத்
திறமாக உருக்கியேழு தரமுஞ்சாய்த்து
தருவான வங்கத்தை யெடுத்துப்பார்க்கச்
சரியான சுத்தியா யிருக்கும்பாரே. 42

வங்கத்தை வாங்கி வைத்துக்கொண்டு இலுப்பைநெய்யிலாகிலும் தேங்காய்நெய்யிலாகிலும் நவச்சாரத்தூளைத்தூவி ஏழுதரம் அதில் உருக்கி சாய்த்தெடுக்கச் சுத்தியாகும்.

கருவங்கச்சுத்தி

பாரேநீ கருவங்கந் தன்னைவாங்கிப்
பண்புடனே வெள்ளாட்டு அமுரிதன்னில்
நேரேதான் பிரண்டைவேர் அரைத்துப்போட்டு
நேர்மையுடன் நல்லெண்ணெய் தன்னைவிட்டு
சீரேதான் மூன்றையுமே கலக்கிக்கொண்டு
சிறப்பா யீரைந்துதரங் கருவங்கத்தை
வேரேதான் காய்ச்சியே யுருக்கிச்சாய்க்க
மெத்தநல்ல சுத்தியாம் மிகவும்பாரே. 43

கருவங்கத்தை வெள்ளாட்டு அமுரியில் பிரண்டைவேர் அரைத்துப் போட்டு நல்லெண்ணெய்விட்டு கலக்கிவைத்து கருவங்கத்தைப் பத்துத்தரம் உருக்கி சாய்த்தெடுக்கச் சுத்தியாகும்.

நாகசுத்தி

மிகவுமே நாகசுத்தி சொல்லக்கேளு
மேலான ஆட்டுநெய் யுடனேதானும்
திகழான சாரங்கற் சுண்ணமிட்டு
சிறுநீரும் பழச்சாறுஞ் சேர்த்துக்கொண்டு
நிகராகப் பத்துதரம் நாகந்தன்னை
நேர்மையுடன் றானுருக்கிச் சாய்த்தெடுக்கச்
சுகமான சுத்தியா மிதுதான்பாரு
சுந்தரம்போல் யாகோபு சொன்னசீரே. 44

நாகத்தை வாங்கிவந்து ஆட்டுநெய்யில் சாரமும் கற்சுண்ணமுஞ் சிறுநீறும் பழச்சாறும் இவைஐந்தும் ஒன்றாகக்கலக்கிவைத்துக்கொண்டு நாகத்தைப் பத்துதரம் உருக்கிச் சாய்த்தெடுக்கச் சுத்தியாகும்.

இரும்பு சுத்தி

சொன்னதொரு இரும்புதனைப் பொடிதான்செய்து
சுகமாகப் பழரசத்தில் ஊறவைத்து
நன்னயமாய் தானெடுத்து எள்ளெண்ணெயில்
நலமாக மூன்றுநாள் ஊறவைத்து
முன்னமுள்ள அயச்சட்டி தனிவறுத்து
முக்கியமாய்க் காடிதனிற் கழுவியேதான்
இன்னமும் வேலம்பட்டைக் கியாழந்தன்னில்
இதமாக வேகவைத் தெடுத்துக்கொள்ளே. 45

நல்ல இரும்பை வாங்கி அரத்தால் ராவிப் பொடிசெய்து எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்தெடுத்து நல்லெண்ணெயில் மூன்றுநா ளூறவைத் தெடுத்து இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்து அரபொடித்தூளைக் கொட்டி நன்றாய் வறுத்து காடியிற்கழுவி வேலம்பட்டைக் கியாழத்திற் போட்டு வேகவைத் தெடுக்கச் சுத்தியாகும்.

காந்த சுத்தி

எடுத்துமே காந்தத்தின் சுத்திகேளு
இதமான எலுமிச்சம் பழரசத்தின்
அடுத்துமே காடியிலும் மோரிலுந்தான்
அன்பாக மூன்றுதரங் கொதிக்கவைத்து
விடுத்துமே எடுத்துப்பின் சாணிநீரில்
வேகவைத்து ஏழுதர காய்ச்சிக்காய்ச்சி
தொடுத்துமே எடுத்தாக்கால் காய்ச்சிக்காய்ச்சி
சுகமா யாகோபுசொன்ன பாகமாமே. 46

காந்தத்தைக் கொண்டுவந்து எலுமிச்சம்பழச் சாற்றிலும் காடியிலும் மோரிலும் தனித்தனியாக கொதிக்கவைத் தெடுத்தபின் சாணிநீரில் ஏழுதரங்காய்ச்சி எடுத்துக் கழுவிக் காயவைத்தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

நாபிக்கிழங்கின் சுத்தி

ஆமேதான் நாபியுட கிழங்குவாங்கி
அதைப்பருத்தி யிலைச்சாற்றி லூறப்போட்டு
நாமேதான் முத்திலைக்குள் ளதனைவைத்து
நலமான குப்பிக்குள்ளே செலுத்தி
தோமேதான் சீந்திக்கி யாழந்தன்னிற்
தொளாந்திரமாய்க் கட்டியே வேகவைத்து
தாமேதா னதையெடுத்து எருக்கம்பாலில்
தானூறிக் கோமயத்திற் கழுவிப்போடு. 47

நாபிக்கிழங்கைக் கொண்டுவந்து பருத்தியிலைச் சாற்றிலூறப் போட்டெடுத்து ஆமணக்கு முத்திலைக்குள்வைத்துச் சுற்றிக் குப்பிக்குள் வைத்துக்கொண்டு சீந்தியைக் கியாழம்வைத்து அதில் கிழங்கின் குப்பியைத் தொளாந் திரங்கட்டி வேகவைத்து எடுத்து எருக்கன் பாலி லூறவைத்துக் .கோமயத்தாற் கழுவியெடுக்கச் சுத்தியாகும்.

தாமிர சுத்தி

போடவே தாமிரத்தின் சுத்திகேளு
புத்தியுடன் தாளகமுஞ் சாரம்வாங்கி
கூடவே பழச்சாறும் அமுரிவாங்கி
கூறாக நான்கையு மொன்றாகச்சேர்த்து
தேடவே தாமிரத்தை யதனிற்போட்டுத்
திறமாகப் பத்துநாள் வெயிலில் வைத்து
நாடவே அதையெடுத்துக் கழுவிப்போட்டு
நன்றாகச் சுண்ணச் செந்தூரஞ்செய்யே. 48

தாமிரத்தை தகடடித்துத் தாளகமுஞ் சாரமும் பழச்சாறும் அமுரியும் ஒன்றாகச்சேர்த்துக் கலக்கி மேற்படி தாமிரத்தகட்டை அதிற்போட்டுப். பத்துநாள் வெயிலில் வைத்து எடுத்துக் கழுவிப்பார்க்கச் சுத்தியாகும்.

குதிரைப்பல் பாஷாணசுத்தி

செய்யவே குதிரைப்பற் பாஷாணத்தைச்
சிறப்புடனே சுத்திசெய்ய முறைதான்கேளு
மெய்யதாய் உமிழ்நீரை வாங்கிவந்து
மிகவுமே அந்நீரி லூறப்போட்டு

ஐயமிலாததை யெடுத்துக் கழுவிவிட்டு
அன்புடனே வெயில்தனிலே காயவைத்து
பையவே எடுத்துப்பார் சுத்தியாச்சு
பக்குவமா யெடுத்துநீ பதனம்பண்ணே. 49

குதிரைப்பற் பாஷாணத்தைக் கொண்டு வந்து உமிழ் நீர்வாங்கி அதிலூறப்போட்டுச் சுத்ததண்ணீர் விட்டுக்கழுவி வெயிலிற் காயவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

குக்கில்சுத்தி குந்தரிக்கஞ்சுத்தி

பதமான குக்கிலது வாங்கிவந்து
பக்குவமாய் எருமையுட மோருதன்னிற்
சதமாக ஊறைவத் தெடுத்துப்பாரு
சரியாக சுத்தியதா யிருக்குமப்பா
விதமான குந்திரிக்கங் கொண்டுவந்து
வேலம்பட்டைச் சாராயந் தன்னிற்போட்டு
நிதமாக ஒருநாளும் ஊறவைத்து
நேர்த்தியுடன் றானெடுத்து மார்க்கங்கேளே. 50

குக்கில் வாங்கி வந்து எருமைமோரி லூறவைத் தெடுக்கச் சுத்தியாகும். குந்தரிக்கம் வாங்கி வந்து வேலாம் பட்டைச் சாராயத்திற்போட்டு ஒருநாளூறவைத் தெடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

நேர்வாளசுத்தி

மார்க்கமுள்ள நேர்வாளந் தன்னைவாங்கி
வகையாக எருமைச்சா ணத்திற்போட்டு
ஏர்க்கையுடன் காடிவிட்டுக் கரைத்துக்கொண்டு
இதமாகக் கொதிக்கவைத்து நஞ்சுநீக்கி
பார்க்கவே பருப்புடைத்து முளையைப்போக்கிப்
பண்புடனே காடிமோர் பழரசத்தில்
தீர்க்கமுடன் கொதிக்கவைத்து யெடுத்துக்கொள்ளத்
திரமாகப் பேசினேன் யாக்கோபுதானே. 51

நேர்வாளத்தைக் கொண்டு வந்து எருமைச் சாணத்திற் காடிவிட்டுக் கரைத்து அதிற்போட்டு அடுப்பேற்றிக் கொதிக்க

வைத்தெடுத்துப் பருப்புடைத்து முளையைப் போக்கி எடுத்துக்காடி மோர் பழச்சாரில் மூன்றையுஞ் சேர்த்து அதிற்போட்டு கொதிக் கவைத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

சேங்கொட்டைசுத்தி

பேசியே சேங்கொட்டை தன்னைவாங்கி
பிசகாம லதன்மூக்கை வெட்டிவிட்டு
வாசியுடன் சாணிப்பால் தனைக்கரைத்து
வகையாகச் சேங்கொட்டை தன்னைப்போட்டு
நேசமுடன் அடுப்பேற்றி கொதிக்கவைத்து
நேர்மையுடன் றான்கழுவி எடுத்துக்கொண்டு
வாசமுட னிப்படியேழ் தரமேகாய்ச்சு
வழுவில்லாச் சுத்தியிது செப்பினேனே. 52

சேங்கொட்டையைக் கொண்டுவந்து அதன்மூக்கை வெட்டி விட்டு சாணிப்பாலைக் கரைத்து அதனுட்போட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து எடுக்கவும். இப்படியே ஏழுதரங் கொதிக்கவைத் தெடுத்துக் கழுவிவைக்கச் சுத்தியாகும்.

எட்டிக்கொட்டை சுத்தி

செப்பின எட்டிக்கொட்டை தன்னைவாங்கித்
திறமாக நெல்லில்வைத் தவித்தெடுத்துத்
தப்பிதமில் லாமல்சிறு கீரைச்சாற்றில்
தானூற வைத்தெடுத்துப் பின்புதானும்
ஒப்பிதேற் றாவிரையின் சாற்றிலேதான்
உரிமையுடன் வேகவைத் தெடுத்துக்கொண்டு
எப்பவுமே உபயோகஞ் செய்துகொள்ள
இதமாக யாக்கோபு சொன்னவாறே. 53

எட்டிக் கொட்டையைக் கொண்டுவந்து நெல்லில் வைத்தவித் தெடுத்துப்பின்பு சிறுகீரைச்சாற்றில் போட்டூறவைத் தெடுத்துப் பின்பு தேற்றாவிரைச்சாற்றில் வேகவைத் தெடுக்கச்சுத்தியாகும்.

ஊமத்தைவிரைச் சுத்தி அமுக்கிராக்கிழங்கு சுத்தி

சொன்னவூ மத்தைவிரை தன்னைவாங்கிச்
சுகமாக ஜலத்திலொரு சாமந்தானும்
நன்னயமா யூறவைக்கச் சுத்தியாச்சு
நல்லமுக்கி ராக்கிழங்கின் சுத்திகேளு
தன்மையாய்க் கிழங்கதனை ஆவின்பாலில்
தானவித்து எடுத்ததனை காயவைத்துச்
சின்னமிலா தேபெரிதாய் யெடுத்துவைக்கத்
தேடியே யாக்கோபு திறஞ்சொன்னேனே. 54

ஊமத்தை விரையெடுத்துத் தண்ணீரில் ஒருசாமம் ஊறப்போட் டெடுக்கச் சுத்தியாகும். அமுக்கிராக் கிழங்கை கொண்டு வந்து ஆவின்பாலில் போட்டு அவித்தெடுத்துக் காயவைத்துக்கொள்ள சுத்தியாகும்.

சிவதைசுத்தி அமுக்குராசுத்தி சுக்குசுத்தி

திறமான சிவத்ததனைப் பசும்பால்தன்னில்
தீரமுடன் அவித்தெடுக்கச் சுத்தியாகும்
உறமான அமுக்கிரா இதுபோற்செய்ய
உற்றசுத்தி யாகிவிடும் சுக்குதன்னை
நிறமாக மேற்றோடு போக்கிவிட்டு
நேர்மையுடன் சுண்ணாம்பு தடவித்தானும்
தரமாகக் காயவைத்து யெடுத்துக் கொள்ளச்
சாற்றினார் யாக்கோபு தன்மைதானே. 55

சிவதையைக் கொண்டு வந்து பசும்பாலில் அவித்தெடுக்கச் சுத்தியாகும்

அமுக்கிராவைப் பசும்பாலில் அவித்தெடுக்கச் சுத்தியாகும் சுக்கை மேல்தோல் போக்கி விட்டுச் சுண்ணாம்பைத் தடவிக்காயவைத் தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

மிளகு சுத்தி திப்பிலிசுத்தி எள்ளெண்ணெய் சுத்தி

தன்மையுள்ள மிளகதனைப் புளித்தமோரில்
தானதையு மூன்றுநா ளூறவைத்து
நன்மைபெற அம்மிளகை யோட்டிற் போட்டு
நலமாக வறுத்தெடுத்து வைத்துக்கொள்ளு
உண்மையுள்ள திப்பிலியைப் பழரசத்தில்
ஊறிவிட்ட பின்பெடுக்கச் சுத்தியாச்சு
வண்மையிலா எள்ளெண்ணெய் ஜலத்தில்விட்டு
வகையுடனே யெடுத்துவைக்கச் சுத்தியாச்சே. 56

மிளகைப் புளித்தமோரிற் மூன்றுநாள் ஊறவைத் தெடுத்து அம்மிளகை ஓட்டிற்போட்டு வறுத்தெடுத்து வைத்துக் கொள்ளச் சுத்தியாகும். திப்பிலியை பழச்சாற்றில் ஊறவைத்தெடுத்து கழுவி வைத்துக் கொள்ளச் சுத்தியாகும். நல்லெண்ணெயை தண்ணீரில் விட்டுப் பிசைந்துகழுவி மேற்படி எண்ணெயை வேறாகயெடுத்துக் காயவைத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

ஓமம்,சீரகம்,கொம்பரக்குச் சுத்தி

ஆச்சென்ற சுண்ணாம்பு நீரிலோமம்
அருமையுடன் ஒருசாமம் ஊறவைத்து
வாச்சுதென் றேயெடுக்கச் சுத்தியாச்சு
மகத்தான சீரகத்தின் சுத்திகேளு
நீச்சென்ற ஓமம்போற் சுத்திசெய்வாய்
நிரையான கொம்பரக்குச் சுத்திகேளு
பாச்சென்ற சலத்திலே அரக்கைப்போட்டுப்
பரிவுடனே எரித்தெடுக்கச் சுத்திதானே. 57

ஓமத்தைச் சுண்ணாம்புநீரில் ஒருசாமம் ஊறவைத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.சீரகத்தைச் சுண்ணாம்பு நீரில் ஒருசாமம் ஊறவைத்து எடுத்துக் காயவைத்துக் கொள்ளச் சுத்தியாகும். கொம்பரக்கை வாங்கித் தண்ணீரிற் போட்டு அடுப்பேற்றி எரித்தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

பவளத்துத்தி சுத்தி

தானென்ற பவளதுத்தி கொண்டுவந்து
சரியான பசுமோரைச் சட்டியிட்டு
வானென்ற பவளதுத்தி கிளியாய்க்கட்டி
மகிழ்வாகக் கடிகைமூன்று வைத்தெடுத்து
ஏனென்றே அதையுலர்த்தி யெடுத்துக்கொள்ளு
இனிமையுடன் நல்லசுத்தி யிதுவேயாகும்
கோனென்ற யாக்கோபு சொன்னநீதி
குறிப்பான நாடியுட விபரங்கேளே. 58

பவளத்துத்தியைக்கொண்டுவந்து பசுமோரைவிட்டு மேற்படிபவளத் துத்தியைக் கிளிக்கட்டி அதனுட்போட்டு மூன்றுகடிகை வைத்தெடுத்து உலர்த்தி யெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

நாடிவிபரம் வேறுசந்தம்

நாடிபி றந்திடும் வகைசொல்வேன்
நம்ம சடத்து ளறிந்துபாரு
பாடிய யீரலுந்தொப்புள் சார்பும்
பல்லைச் சுத்திடும் விசுமலுடன்
கூடிய பித்த வகையாஞ்சுக்குங்
கொடிபோ லோடிடும் நரம்புபத்தும்
ஓடியநரம்பு பன்னிரெண்டும்
ஒன்றாய்த் திரண்டுதான் பத்தாச்சே. 59

பத்துநரம்பும் பிரியும் ரெண்டாய்
பாருகழுத்தின் கீழ்மார்மேலின்
சுத்து நரம்பஞ்சும் முறுக்கினாப்போல்
சுழன்று கரம்ரெண்டில் வந்துநிற்கும்
கொத்து முறுக்கான நரம்பஞ்சுங்
கூழையு நீளமு மாகநிற்கும்
தொத்துங் குலையீரல் வாதநாடி
தொப்புள் பித்திற் பித்தநாடியே. 60

தொப்புட் சார்பினில் சிலேற்பனமாய்
துதிக்கும் விசுமனி லையநாடி
தப்பிதமில்லையே பல்லுக் குத்தி
தன்னி லெழும்பிடும் பூதநாடி
செப்பிடு நல்ல முழங்கைக்கிடஞ்
சேர விலகியே புறங்கையோடி
தப்பிதமாக மணிக்கட்டில்
தாவிப் பின்புறந் துடித்துநிற்கும். 61

நிற்கும் வாதமும் பித்தநாடி
நிறைந்த சிலேற்பனம் ஐயநாடி
பக்குவத் துடனே நாலுபிரிவாய்
பணிந்து முறுக்கியே முன்கைவந்து
தக்குல முள்ளதோர் வாதநாடி
தானே மணிக்கட்டு நெற்கடைதான்
சிக்கும் பித்தமும் அதற்குமுன்னே
சிலேற்பனம் பித்தந் தனக்குப்பின்னே. 62

பின்னே அதற்கப்பா லையநாடி
பிரண்டு பதுங்கிடு முசும்பிடாது
சொன்ன நாடியுமங் கங்கே
துளிரு முன்பின்னாய் நின்றுபோகும்
முன்னம் பின்னாய் நரம்புநாலும்
முறுக்கு விலகியே துளிர்ந்துநிற்கும்
அன்னே நீரு அடியிலூற
அப்போ நரம்புக ளாடிடுமே. 63

ஆடுமணிக் கட்டுநெற் கிடைதான்
அசையும் வாத்தது நரம்புவந்து
ஓடுமதுக் கப்பால் நெற்கடைதான்
உயர்ந்த பித்தமும் ஆடிநிற்கும்
சாடுஞ் சிலேற்பனம் பித்தத்துக்கு
தடிக்க ஒருநெல்லுக் கப்பால்நிற்கும்
பாடும் ஐயமதுர் கப்பாலே
பருநெல்லுக் கடைபடுத் திருக்குமப்பா. 64

அப்படி நாடி பிடித்துப்பார்க்க,
அரிய பெருவிரல் பூதமாகும்
ஒப்படியாக முதல் விரலும்
ஓடும் நாடிதான் வாதமாச்சு
தப்படி யில்லா மறுவிரலும்
சார்ந்து ஓடினாற் பித்தமாச்சு
இப்படி மூன்று விரலுமோடில்
இசைந்த சிலேற்பன மாச்சுதென்றே. 65

ஆச்சு சிறுவிர லையமென்று
அறிந்து பாருங்கள் தாதுமுறை
சாக்குக் கைமுறை விரல்நாலுஞ்
சரியாய் பாலகடை விரித்துப்பிடி
பாச்சும் புஷ்டியாய்த் தாதிருந்தாற்
பாதி நெற்கடை யமுத்திப்பாரு
ஏச்சு மெல்லின மானதால்
இருத்தி நெற்கடை யமுத்திப்பாரு. 66

பாரே மணிக்கட்டுக் கீழ்புரந்தான்
பதிவாய் நெற்கடை தள்ளியேநீ
சேரே உடம்பினிற் சிரசுமுதற்
சிறந்த உடல்கரம் பாதமட்டும்
நீரே விலக்கிய நரம்பெல்லாம்
நிகழ்த்தி வரும் நாடிபத்தாகும்
ஆரே அருவிபோல் வியாதிகளும்
அடுத்து வரும்வகை யோதுவனே. 67

ஓது முதல்விரல் வாதத்தாலே
ஒடுங்கும் நோயென்று அறிந்துகொள்ளு
பேத மில்லாமல் மறுவிரலும்
பித்தக்கூா லென்று பேசிவிடு
சேத மில்லாமல் மூவிரலாற்
சிலேற்பனத் துள்ள நோய்களென்றும்
வீதப் படியின்ன தாலேவந்த
வியாதி யிதுவென் றறிந்துசொல்லே. 68

அறிந்து குதித்திடும் நாடிமூன்றும்
அப்பனே சன்னி யென்றுசொல்லு
சொறிந்து மூன்றும் பதுங்கியோட
தோஷ குணமென்று சொல்லிவிடு
சரிந்து யெழும்பியே பதுங்குமாகில்
சன்னி தோஷமென் றறிந்துகொள்ளு
விரிந்து அய்யமே யெழுந்துதென்றால்
விளம்புஞ் சாத்தியந் தப்பாதே. 69

மரணக்குறி

தப்பும் பித்தஞ் சுழித்தோடில்
தாமே சிரமூளை பாய்ந்துதென்றால்
இப்போ மூன்று சாமத்துள்ளே
எடுத்துப் போடுமென் றறிந்துசொல்லு
அப்போ பித்தம் வயற்றிலோடி
அமுக்கிக் குலையிற் பாய்ந்துதென்றால்
ஒப்பும்நாலு சாமத்துள்ளே
உயிரு மரணமென் றறிந்துகொள்ளே. 70

சாத்யம் அசாத்தியம்

கொள்ளும் நாடியிற் சாத்திபங்கள்
கூடி விடுமே யாமாகில்
வில்லும் வாதமே அம்புபோல
விசையா யுதைந்து யிருந்தாலும்
எள்ளும் பித்தம் போய்விடினும்
எழுந்து ஐயமே ஆடிடினும்
தள்ளு மிதுவெலாஞ் சாத்தியங்கள்
தப்பா தொருநாளும் நீபாரே. 71

பாரும் பெருநாடி மூன்றுமோடி
பண்பு நிலைதப்பிப் பின்னிக்கொண்டால்
ஆரு மதினுட நிலைவிபரம்
அறிவா லறியவே சொல்லுகிறேன்
பேரு மெவ்வித நடந்தாலும்
பெலமாந் தாதுவின் நிலைமைகேளு
கூறும் வாதமு முன்னுதையும்
கொடி பித்தமே யெழும்பிடுமே. 72

எழும்புஞ் சிலேற்பனங் கீழேகுத்தும்
இதுவு மறிந்துபார் தலைமாறி
தழும்பித் தமுமில் லாதொழிந்து
தாதுபின் வெட்டும் நிலைமைகேளு
வழும்பில் லாமலே மூன்றுவிரல்
வாதம் விழுந்தோடிப் படர்ந்துநிற்கும்
கழுப்பில் லாமலே மூவிரலும்
கவிந்து துடிகொண்டால் வெட்டிடுமே. 73

வெட்டும் வகையிது சாத்தியங்கள்
விபரம் வியாதி தெரியச்சொல்வேன்
கட்டும் வியாதி யின்னதெனக்
கைபிடி தாது உரைக்கலாச்சு
அட்டும் உன்மன மெழுகாச்சு
அழுத்தி மனத்திற் குறித்துபாரு
தட்டுப் படுமே வியாதியெல்லாம்
சமத்தா யறிந்து முறைதெரியே. 74

வேறுசந்தம்

முறையிது மார்க்கமென்று மொழிந்திடும் வகைகட்கெல்லாம்
நறையும்நா லாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டு
குறைவிலா தறியவென்றே கொள்கையை விபரமாகத்
தறையினி லுரைப்பேன்நாடி சமர்த்தினால் வாதம்பாரே.75

வாதநாடியின்குணம்

வாதமே குதிரைபோல் வருகிடில் வயிற்றில் நோவு
போதமாய்க் கால்கடுக்கும் பிடரியில் வலியுண்டாகும்
மீதமா யிடுப்பு வெட்டும் மேல்வலி யதிகமாகுங்
கோதிலா விழியில் நோவு குதித்தோடும் வாதவாய்வே. 76

குதித்திடும் வாதம் நாய்போற் கூடிடில் வாத சூலை
கதித்திடு மப்பாலேதான் கடுப்பொடு வலியுண்டாகும்
சதித்திடுங் கரணைகட்டுந் தலையினில் வலியுண்டாகும்
பதித்திடும் வாதசூலை படுத்திடும் ஆமை தானே. 77

ஆமைபோல் வாதம்வந்தால் அனைத்துமே ளெளுப்புண்டாகும்
ஊமைபோ லரிப்புண்டாகும் உச்சியுந் தடித்துக்காணும்
சாமைபோல் முகப்பருவு சாடிடும சதியுங்காணும்
வாமைபோல் வாதவேகம் வந்திடும் வகையதாமே. 78

எலியைப்போல் வாதம்வந்தால் எண்ணிய சிங்குவாய்வு
பெலிதமாய் வயிறுநோகும் பின்னையும் பொருமல்காணும்
பலிதமாய் மலமுங்கட்டும் பளிச்சென்று குத்தும்மேலிற்
சலிதிமே லசதிகாணுந் தானிது சிங்குவாய்வே. 79

பூனைபோல் வாதம்வந்தால் பொருந்திய அட்டகுன்மஞ்
சேனைபோல் வயிற்வலிக்கு செனத்தினிற் குடல்விக்கும்
ஆனைபோல் வீரங்குன்றும் அசதியுங் களைப்புண்டாகும்
வானைபோ லட்டகுன்மம் வந்திடும் வகையதாமே. 80

உடும்புபோல் வாதம்வந்தால் ஓதிய வயிர்வலிக்கும்
கடுக்குமே கைகால்நெற்றி கழுத்தொடு இடுப்புச்சந்து
விடுத்திடுங் குரலுமங்கும் விரைந்திடும் அசதிசோபத்
தொடுவிழி கம்மும்வாத சூலையின் வாயுவாமே. 81

அன்னம்போல் வாதம்வந்தால் அசதியுங் கோபமுண்டு
சொன்னதோர் வயிற்பொருமுஞ் சுழித்திடும் வலியிடுப்பிற்
கண்ணது யெரிவுண்டாகும் காலுகை யசதியுண்டு
மின்னல்போற் கண்ணிற்றோணும் மேகத்தின் சூலைதானே.82

காகம்போல் வாதம்வந்தால் கால்களும் வீக்கமுண்டு
வேகமாய்க் கடுக்குங்குத்தும் விழிரெண்டுங் கம்மலாகும்
தாகமுஞ் சோபமுண்ட சந்துட னிடுப்புநோகும்
பாகமாம் வாதமென்று பார்த்துநீ யறிவாய்தானே. 83

தவளைப்போல் வாதம்வந்தால் சந்துகள் கடுப்புண்டாகும்
துவளவே காலுங்கையும் துடுக்கென அசதியுண்டு
கவளவே வயிறுநோகுந் தண்ணுநெஞ் செரிவுகாணும்
இவளவில் விந்துமைந்து இருப்பது சூலையாமே. 84

போத்துப்போற் குதிக்கும்வாதம் பொக்கென வயிற்வலிக்கும்
சேர்த்துக்கண் மினுமினுப்பு தெரிந்திடுங் காந்தலுண்டு
வேர்த்துடல் வயிற்பொருமும் மிகத்தலை யிடியுமுண்டாம்
பார்த்துநீ வாதமேக சுரமெனப் பகரலாமே. 85

பாம்புபோல் வாதம்வந்து படுத்துமே புரளுமாகில்
வீம்புபோல் வாயுங்கோணும் வெருண்டுமேல் நடுக்கமுண்டு
தரம்புடன் பிடித்துத்தள்ளும் தக்கநா வறட்சியுண்டாம்
வீம்புட னடுக்குவாத சன்னியாய் விளம்புவாயே. 86

குளிருடன் வாதம்வந்து கோழிபோல் நடக்குமாகில்
கழுந்திடும் வயிற்வலிக்கும் கடுப்புட னெரிப்புண்டாகும்
அழுந்திய அசதிகால்கை அடிவயிற் வலியுண்டாகும்
வழுந்திடுங் கிராணிமூலம் வந்திடும் வகையிதாமே. 87

மயிலது போலவாதம் மருவியே நடக்குமாகில்
ஒயிலுடன் வாய்நீரே [illegible]டும் ஒக்காளங் குடல்பிரட்டும்
துயிலுடன் கையுங்காலும் சோர்ந்துமே வயிற்வலிக்கும்
அயிலுட னிடுப்புவெட்டும் அரோசிக் குன்மமாமே. 88

வாதமுங் குயில்போல்வந்தால் வயிற்வலி பொருமலுண்டாம்
போதமா யிடுப்புநெஞ்சும் பிடரியும் வலியு[illegible]ம்
நீதமாய்க் காலயர்ந்து நெடியவிந் துடைந்திருக்குஞ்
சூதமாம் வாதகுன்மம் சொல்லிய வாயுவாமே. 89

தேரைபோல் வாதம்வந்தால் சினந்துமேற் றடிப்புண்டாகும்
கூரைபோல் பெருகுமூச்சு குரல்நெரி கபமுங்கட்டும்
பாரைபோற் காலுங்கையும் பருவலி கடுப்புண்டாகும்
ஆரைபோல் வடியுந்தண்ணீர் அதுரண குஷ்டமாமே. 90

நரிபோல வாதம்வந்தால் நடுக்கமேல் வலியுண்டாகுஞ்
சிறியகை யுள்ளங்கால்புண் செவிமூக்குத் தடிப்புண்டாகும்
அரியமேல் மறையாய்வீழும் அசதியாங் குரல்நெருங்குஞ்
சரியிது [illegible] தப்[illegible]து சொன்னேன்பாரே. 91

நாய்போல வருகில்வாதம் நடக்கையில் அசதிகாணும்
பாய்ந்திடும் வயிற்றிற்குத்து பளிச்சென்று இடுப்புவெட்டும்
வாய்ந்துபின் நெஞ்சிற்குத்தும் வயிறுதா னிரைச்சலாகுஞ்
சாய்ந்துகண் ணெரிச்சலுண்டு சாற்றிடும்வாயுவென்றே. 92

அட்டைபோல் வருகில்வாதம் அசதிமே லெரிவுண்டாகும்
கட்டைபோல் மதத்துங் கால்கை கண்கள் நெஞ் செரிவுமாகு
இட்டதோர் வயிற்கனக்கும் இடுப்பினில் வலியுண்டாகும்
விட்டதோர் திமிருவாய்வு விளைந்திடு மம்மைதானே. 93

புலிபம்மிப் பாயில்வாதம் பொருமலும் வயிற்றுநோவாம்
சலித்துடல் மெலிவுண்டாகும் தாகமுஞ் சோகமுண்டு
வலிக்குமேல் கால்கைசந்து வாய்நீருங் குடல்பிரட்டும்
பலித்திடும் வயிறுபோகும் பாரிது மூலவாய்வே. 94

கீரிபோல் வாதம்வந்து கிடக்குங்கால் கையும்நோகும்
சாரியே மேல்களெல்லாந் தானது குடைச்சல்காணும்
ஊரியே எரியுங்கண்ணும் உள்ளங்கால் வயிறுநெஞ்சு
சூரிவிந் துடைந்திருக்கும் குடல்வாத வாயுவாமே. 95

விதமதா லெடுத்தவாத மிகரெண்டா யிரத்துநூறு
இதமுடன் தாதுவாலே இருபது வியாதிகாண்பாய்
பதமுடன் மற்றநோய்கள் பாங்கினா லறியவேணும்
மதமுடன் பித்தத்தாலே வந்திடும் வியாதிகேளே. 96

பித்தநாடியின் குணம்

குதிரைபோற் பித்தம்வந்து கூடியே நடக்குமாகில்
சதிருள பெலங்குறைந்து தலைவலி கனமுண்டாகும்
அதிரவே பேச்சுமுண்டு அபையமும் அழுகையுண்டு
பிதிரவே முழிக்குங்கண்ணும் பித்தமென்று ரைக்கலாமே.97

அம்புபோல் பித்தம்வந்தால் அசதியு மயக்கமுண்டு
பம்பமாய் முழிமுழிக்கும் பருங்குர ளழுஞ்சிரிக்கும்
வம்புகள் மிகவுஞ்செய்யும் வயிர்வலி தலைகனக்கும்
வெம்புகள் பைத்தியமென்ன விளம்பலாம் வைத்தியர்தானே.98

பித்தமும் நாய்போலோடில் பெருவயிற் வீக்கமுண்டு
சித்தடு மிளைத்துப்போகும் தேரைபோல் மெலியலாகும்
மத்ததோர் கண்ணெரிச்சல் மலசலம் வாய்வுங்கட்டும்
வத்தவே பித்தப்பாண்டு வகையிதுவென்று சொல்லே. 99

ஆமைபோல் வருகும்பித்தம் அசதியு மயக்கமுண்டு
ஊமைபோ லிருக்கும் நாவும் ஒருத்தலை வலியுமுண்டு
சாமைபோ லிருட்டுங் கண்ணும் தக்கதோர் மேலும்நோகும்
வாமைபோல் பித்தச்சூடும் வறட்சியுங் கபாலவாய்வே. 100

எலிபோலே பித்தம்வந்தால் இளைப்பொடு தகையுண்டாகும்
கலிதமா யிடுப்புவெட்டுங் காலுங்கை யசதிகாணும்
பலிதமாய்க் கண்ணெரிச்சல் பளிச்சென்று நெஞ்சிற்குத்தும்
மெலிவுண்டாய் விந்துடைந்தால் மிகுபித்தச் சூடிதாமே. 101

பூனைபோல் வருகும்பித்தம் புள்ளிபோல் மரைதான்வீழும்
தானைபோற் கையெரிந்து தலைவலி வயிறிரைச்சல்
ஆனைபோல் வயிறுவீங்கும் அடிவயிற் வலியுண்டாகும்
சேனைபோற் பித்தமேகந் திரண்டிடும் வகையிதாமே. 102

உடும்புபோற் பித்தம்வந்தால் உளறிடும் நாவுங்காயும்
கடுகவே தலையில்வேர்க்கும் காந்தலுந் தலையிடிக்கும்
வெடுக்கெனபிடரி வெட்டும் வெருண்டுகண் விழித்துப்பார்க்கும்
தொடுக்குமுன் பித்தசன்னி சொல்லிய விதியிதாமே. 103

அன்னம்போற் பித்தம்வந்தால் அசதியு மயக்கமுண்டு
சொன்னதோ ரெரிச்சல்கால்கைதுடுக்கென வலியுமுண்டாம்
கன்னமே குளிருங்காணும் காந்தலு மிகவுண்டாகும்
பின்னமே வாந்தியாகும் பித்தமாஞ் சுரமதென்னே. 104

காகம்போற் பித்தம்வந்தாற் கால்கர மசதிகாணும்
கவகமா யெரியுங்கண்ணும் மேலினிற் சுரமுண்டாகும்
தாகமாய் மேல்வலிக்கும் தலையிடி யிடுப்பு வெட்டும்
சோகமாய் வயிறுமூதும் சோகையாம் பித்தமாமே. 105

தவளைபோற் பித்தம்வந்தால் தலைவலி கனமு முண்டாம்
கவளமாய் வயிற்பெருக்கும் கைகாலு மசதியாகும்
துவளவே அசதியுண்டாம் சொருகுங்கண் மஞ்சளாகும்
இவளவு மிருக்குமாகில் இயல்புகா மாலையாமே. 106

போத்துப்போல் வந்தால்பித்தம் பொக்கென வூதல்காணும்
வாத்துப்போல் வயிற்பெருக்கும் வகையுட னசதியுண்டு
பார்த்துமேல் வெளுப்புண்டாகும் பளிச்சென்று யிடுப்புவெட்டும்
ஆர்த்துங்கண் மினுமினுப்புண்டாம் பித்தசோகையாமே.107

பாம்புபோற் பிரண்டாற்பித்தம் பளிச்சென்று யிடுப்பிற்கு
வேம்புபோல் வாய்கசக்கும் மேனியும் வெளுப்புக்காணும்
வாம்புடன் கண்ணுமங்கும் வயிற்றினிற் குத்துண்டாகும்
வீம்புள பெரும்பாடாகும் மேகமும் வெள்ளையாமே. 108

கோழிபோற் பித்தம்வந்தால் குரல்கம்மு மசதிகாணும்
ஆழிபோல் மேல்வெளுக்கும் அசதிகண் ணெரிவுண்டாகும்
தேழிய கைகால்புண்ணாம் செவிமூக்குத் தடிப்புநெற்றி
பேழிபோற் பெருக்குமூச்சு பித்தகுஷ் டங்களாமே. 109

மயிலதுபோலே பித்தம் வந்துமே நடக்குமாகில்
ஒயிலுடன் தேகமெல்லாம் உயர்வீக்க மதிகமுண்டு
கயிலுடன் மேலுநோகும் கண்ணுநெஞ் செரிவுகாணும்
வெயில்தனி லிருக்கச் சொல்லும் மெய்மகோ தரந்தான்பாரே.110

பித்தமுங் குயில்போல் வந்தாற் பெருவயி றாகும்பின்னும்
மெத்தக்கண் ணெரிவுண்டாகும் மேலது வெளுப்புமாகும்
சுத்தமாங் கண்ணுமங்கல் சுழற்றியே வயிற்வலிக்கும்
மத்ததோர் பித்தத்தாலே வருமகோ தரமுந்தானே. 111

வரையுள தேரைபோல மயக்கிடும் பித்தம்வந்தால்
அரைந்துமே லெரிவுநோகும் அடிவயிற் வலியுண்டாகும்
நிறைவயிற் பொருமிக்காணும் நேர்மையில் லாதுதோணும்
விரைவுடனிடுப்பிலேதான் வெட்டைவாய் வென்னலாமே.112

நரிபோலப் பித்தம்நின்றால் நாவுலர் பயமுண்டாகும்
அரியகண் கம்மலாகும் அசதியு மயக்கமாகும்
தெரியவே வெருண்டுபார்க்கும் சிரசினிற் கனமுண்டாகும்
சரியிலாப் பித்தவாய்வு தானிதுசொன்னோம் பாரே. 113

பித்தமுங் கீரிபோலே பிரண்டுமேல் வருகுமாகில்
சித்தமும் வெவ்வேறாகும் தேகமும் உளைச்சலாகும்
நித்தமும் வயிறுபோகும் நேர்மையா சனங்கடுக்கும்
இத்தகை பித்தக்கிராணி யெனுமிது மூலந்தானே. 114

நடந்திடும் நாய்போற்பித்தம் நடுக்கிடில் தலைசுழற்றும்
உடம்பெலாம் வலியுண்டாகும் உள்ளங்கால்கண்ணுங்காந்தும்
திடமிலாக் கிறுகிறுப்புந் தேகத்தி லசதிகாணும்
படர்ந்திடு நெஞ்சுகுத்தும் பார்பித்தச் சூலைதானே. 115

அட்டைபோல் நெளியிற்பித்தம் அதிகமா யுடம்பிளைக்கும்
கட்டைபோற் படுக்கச்செய்யும் காலுகை யசதிகாணும்
விட்டிடுங் காச்சலோடு வெடுவெடென் றெழுந்திருக்கும்
இட்டதோர் கண்ணுமங்கும் எலும்புருக்கியதாம் நோயே.116

வந்திடும் புலிபோற்பித்தம் வாயினி லெச்சியூறும்
தந்திடும் வாந்தியாகும் தலைவலி குடல்பிரட்டும்
கந்திடும் வயிற்வலிக்கும் கண்ணது யெரிச்சலாகும்
சிந்திடும் வாய்நீர்பித்தச் சேட்டையென் றுரைக்கலாமே. 117

ஓந்திபோல் நடக்குமாகில் உள்ளங்கா லெரிச்சலாகும்
வாந்தியு மிருமல்கோழை வரும்வயி றெரிச்சலாகும்
சாந்தமு மயக்கமும்பல் தலைக்கன மிடுப்புவெட்டும்
காந்தல்வந்தெய்து பித்தகாசமென்றி தனைச்சொல்லே. 118

எறும்புபோ லூரிற்பித்தம் இளைப்பொடு தகையுண்டாகும்
இருமலிற் சளிதான்வீழும் ஏங்கலும் புகைச்சலுண்டும்
பொருமலு மிகவுண்டாகும் போசன மகற்றுஞ்சோகை
தருகியே அசதிகாணும் சளிகாசு மிதுதான்பாரே. 119

கதுவாலி நடைபோற்பித்தங் காணிடி லசதியாகும்
முதுகினில் வலியுண்டாகும் மூக்கடைத் திருமலாகும்
மெதுவான தகையுண்டாகும் மிக்கநல் வயிறுநோகும்
சதுரான பெலனும்போகும் சயகாசக் குணமிதாமே. 120

காடைபோல் வந்தாற்பித்தம் கண்ணுநெஞ் செரிவுகாணும்
ஆடைபோற் கபந்தான்வீழும் அசதிமென் மேலுண்டாகும்
சாடையா யிடுப்புவெட்டும் தக்கநல் லசனந்தள்ளும்
வாடையா லுடல்மெலிந்தால் வறகாச மாகுந்தானே. 121

கழுதைபோல் நடந்தாற்பித்தம் கடுகவே யிளைப்புண்டாகும்
பழுதுமே யில்லைகால்கை படுத்திடு முகமும்வாயும்
அழுதுகண் மங்கலாகும் அடிவயிற் கனமுமாகும்
மழுவுபோற் சுரமுண்டாகும் மந்தார காசமாமே. 122

எருமைபோல் நடந்தாற்பித்தம் இளைப்பொடு சுவாசமே
அருமையா யிருமலுண்டு அசதியும் வறட்சியுண்டு
வருமையாய் மண்டைகுத்தும் வயிற்வலி யிடுப்புவெட்டும்
உருமையாய்ச் சுவாசகாச முற்றிடும் வகையிதாமே. 123

பசுவைப்போற் பித்தம்வந்தால் பருவயிற் குடல்பிரட்டும்
சிசுவைப்போ லுடம்பிளைக்கும் தேகத்தி லசதிதோணும்
கொசுக்கடி போலேவாய்வு குத்திடு மிருமலாகும்
பசியிலா திருக்குஞ்சாலப் பாரதி காசமாமே. 124

மானாடு போலேபித்தம் வந்திடு மிடுப்புவெட்டும்
தானாக யிருமும்போது சலுக்கென்று ரத்தம்வீழும்
வீணாக அசதிகால்கை மேல்வலி அதிகமாகும்
காணாத தெல்லாந்தோணும் கடுரெத்த காசந்தானே. 125

கரடிபோல் நடந்தாற்பித்தம் கண்ணெரி மிகவுண்டாகும்
நிரமுள முகமும் வேர்க்கும் நெஞ்சுநோ யதிகமாகும்
தரமுள பெலன்குறைந்து தகையுடன் வலியுண்டாகும்
சிரசினிற் கனமுண்டாகும் சீக்காச காசமாமே. 126

இந்தந்தப் பித்தநோய்க ளிரண்டுமா யிரத்திநூறு
முந்தந்தத் தாதுவாலே முப்பது வியாதிகாண்பாய்
குந்தந்த வியாதியெல்லாங் குணத்தினா லறியவேணும்
சிந்தந்தச் சிலேற்பனத்தாற் றெரிந்திடும் வியாதிகேளே. 127

சிலேற்பனநாடியின் குணம்

குதிரைபோற் சிலேற்பனந்தான் கூடியே வருகுமாகில்
கதியதாய் சுரமுங்காயும் கண்செவி வாயடைக்கும்
முதிரவே பெலன்குறைக்கும் முகங்கண்ணு மஞ்சளாகும்
சதிருள மூன்றாஞ்சாமந் தானெழு சிலேற்பமாமே. 128

அம்புபோற் சிலேற்பனந்தான் அதிர்ந்துமே வருகுமாகில்
தெம்புள்ள பெலன்குறைந்து செவிரெண்டு மடைத்துக்கொள்ளும்
வம்புட னிருமலுண்டு வாயிற்நீர் வடியும்பின்பு
வெம்பிடுஞ் சேத்மகாச விதமெனச் சொல்லலாமே. 129

செலமுள ஆமைபோலச் சிலேற்பனம் நழுவுமாகில்
அலமுள யிருமல்தேமல் அசதியுஞ் சோபமாகும்
வல்முள வெள்ளைக்கோழை வந்திடு மிருமலுண்டு
பெலமுள நெஞ்செரிந்து பெருகும்வெண் காசமாமே. 130

பூனைபோற் சிலேற்பனந்தான் புடைத்துமே வருகுமாகில்
ஆனைபோல் வீரங்குன்றும் அசனமும் வெறுக்கும்பின்பு
பானைபோல் வயிறுமூதும் பத்தியே யெரிவுண்டாகும்
வானையே நோக்கும்பின்பு வருமெரி காசந்தானே. 131

அன்னம்போற் சிலேற்பனந்தான் அலரியே வருகுமாகில்
சொன்னதோ ரசதிகாணும் சுளித்துமேல் வலியுண்டாகும்
மின்னல்போல் தேகந்தோணும் வெருங்கோழை வந்துவீழும்
கன்னம்வாய் கருக்குமின்னுங் கருங்காசமென்று சொல்லே. 132

நல்லதோர் சிலேற்பனத்தால் நலியும்நோய் நூற்றிப்பத்து
கல்லதோர் தாதுவாலே காணலாகும் வியாதியைந்து
வல்லப மாகநீயும் வருங்குண மறியவேணும்
மெல்லவே பூதநாடி வீறிடும் வியாதிகேளே. 133

பூதநாடியின் குணம்

அம்புபோல் பூதம்வந்தால் அசதியுஞ் சோகமாகும்
தெம்புள்ள மதிமயங்கும் சிரஞ்சுத்துங் கண்ணிருட்டும்
வம்புகள் பேசுமப்பால் மனதுலா கிரியிற்பாயும்
வெம்பியே எழும்படுக்கும் விலகாத நோயிதாமே. 134

அன்னம்போல் பூதம்வந்தால் அசதியுங் காந்தல்காணும்
சின்னமா யிடுப்புவெட்டும் சிறிதுகொப் பளங்கள்தோணும்
சொன்னகொப் பளங்களெல்லாம் சொடிந்துமே யிறங்கிக்கொள்ளும்
நன்னய அம்மையாகும் நாடிய வகையீதாமே. 135

பூதத்தா லெடுத்தநோய்கள் பொருத்தமாய் முப்பதாகும்
வீதமாய்த் தாதுவாலே வியாதியை மூன்றுகாண்பாய்
மீதமுங் குணத்தினாலே மேவியே தெரிந்துகொள்ளும்
ஆதமாய்த் தாதில்லாமல் அபாயத்தில் வருகும்நோயே. 136

ஐயநாடியின் குணம்

நரம்பது சுருக்கினாலும் நடந்திடு மூச்சினாலும்
திரமான காயத்தாலும் சீரரை யாப்பினாலும்
வரமான பவுத்திரத்தாலும் வருதுடை வாளையாலும்
தரமுள அசாத்தியதாது தரித்திடிற் கெடுவுகேளே. 137

ஐயமே ஆமைபோலே அசந்துமே நடக்குமாகில்
மெய்யதா யாறுமாத மவர்தானு மரணமாகும்
பையவே எறும்புபோலே பரிந்தையம் வருகுமாகில்
பொய்யில்லை மாதமைந்து போனபின் மடிவான்பாரே. 138

என்றிடு மையந்தானும் எருமைபோல் வருகுமாகில்
சென்றிடு மாதம்நாலில் சீவனும் மடியும்பாரு
உண்டிடும் பாம்புபோலே ஊரியே வருகிலையம்
கன்னடிடு மாதமூன்றிற் கடுகென மடிவான்பாரே. 139

மடித்திடும் நரிபோலையம் வந்துமே நடக்குமாகில்
துடிக்கவே மாதம்ரெண்டில் சொல்லுநீ மடிவாரென்றே
கடித்திடும் நாய்போலையம் கடிந்துமே வருகுமாகில்
இடித்திடு மெண்ணைந்தேநா ளிவர்களு மடிவார்பாரே. 140

பூனைபோல் நடந்துஐயம் பொருந்தியே வருகுமாகில்
வானைநாள் முப்பத்தைந்தில் மடிவது திண்ணமாகும்
ஆனைபோ லையம்வந்து அசந்துமே நடக்குமாகில்
தானைபோல் மாதமொன்றிற் சாவது நிசமதாமே. 141

குதிரைபோ லையம்வந்து கூடியே நடக்குமாகில்
அதிருநா ளிருபத்தேழில் அவர்களு மடிவார்பின்னும்
சதிருள குரங்குபோலத் தாண்டியே வருகிலையம்
நிதியும்நா ளிருபத்தைந்தில் நிச்சயஞ் சாவார்பாரே. 142

அன்னம்போல் வருகுமையம் அதட்டியாய் நடைநடந்தால்
சொன்னநா ளிருபத்தொன்றிற் சுருக்குடன் மடிவான்வீணாய்
இன்னமுங் காகம்போலே யெழுந்துமே வருகிலையம்
முன்னமே யிருபதாம்நாள் முடிவது திண்ணந்தானே. 143

தானெனக் கோழிபோலே தானையம் நடக்குமாகில்
தேனெனப் பதினெட்டாநாள் சென்றுமே மடிவான்பாரு
கோனெனும் யானைபோலக் குதித்தையம் நடக்குமாகில்
வானெனும் பதினைந்தாம்நாள் மாள்வதுதிண்ணந்தானே.144

கீரிபோல் நடந்துஐயம் கிட்டியே வருகுமாகில்
வீரியம் பதினாறாநாள் விரைவுடன் மடிவானென்று
கூறிய வுடும்புபோலக் கூடிய ஐயம்வந்தால்
சாரிய பதிமூன்றாநாள் சாவது திண்ணந்தானே. 145

ஒந்திபோ லையம்வந்து உன்னியே நடக்குமாகில்
சாந்தம்போற் பனிரெண்டாநாள் தானது ம்ரணமாகும்
பாந்தமா மட்டைபோலப் படுக்கென அய்யம்வந்தால்
காந்தலாம் பதினொன்றாநாள் கடிதினில் மடிவார்பாரே. 146

என்றதோ ரையந்தானும் எலியென நடக்குமாகில்
கன்றிடும் பத்துநாளிற் கடுகென மடிவார்பாரு
நன்றுள சுண்டான்போல நாடியே ஐயமாகில்
சென்றிடும் ஒன்பதாம்நாள் திரமாய் மடிவார்பாரே 147

பெருச்சாளி போலவையம் பிரண்டுமே வருகுமாகில்
குறித்திடு மெட்டுநாளிற் கொன்றிடு மென்றுசொல்லு
வரித்திடு முசல்போலையம் வந்துடன் நடக்குமாகில்
தரித்திடு மேழுநாளிற் றானிவன் மடிவான்பாரே. 148

தானேகே சரியைப்போலத் தாண்டியே வருகிலையம்
வானேகே ளாறுநாளில் மடிவரென் றுரைக்கலாகும்
மானேபோ லையமோடி மருண்டுமே வருகுமாகில்
கோனேதா னைந்துநாளிற் குறிப்புடன் மடிவார்பாரே. 149

பண்டுள தவளைபோலப் பண்புடன் குதிக்குமாகில்
கண்டுபார் நாலுநாளிற் கணக்குடன் மடிவான்பாரு
நண்டுபோ லையம்வந்து நடந்துமே யோடுமாகில்
வண்டுபோல் மூன்றுநாளில் மடிவது திண்ணந்தானே. 150

மயிலைப்போ லையமோடி வந்துமே கடக்குமாகில்
ஒயிலுடன் ரெண்டுநாளில் உயிரது மரணமாகும்
குயிலைப்போ லையம்வந்து கூடியே நடக்குமானால்
பயிலுடன் சாமமெட்டில் பரிவுடன் மாளுவானே. 151

நாரைபோ லையம்வந்து நடந்துமே வருகுமாகில்
சாரைபோற் சாமமேழிற் றானிவன் மடிவான்பின்பு
தேரைபோ லையந்தானும் திடீரென வருகுமாகில்
பாரைமேற் படுத்தாற்போலே பகர்சாம மாறிற்போமே. 152

முசல்போல ஐயமோடி முடுக்குடன் நடக்குமாகில்
வசமுள சாமமைந்தில் மாளுவர் திண்ணந்திண்ணம்
பசமுள கரடிபோலப் பண்புடன் வருகுமாகிற்
குசமுள சாமம்நாலிற் கூடியே மடிவான்பாரே. 153

சிங்கம்போ லெழுந்துஐயம் சினந்துமே வருகுமாகில்
தங்கம்போற் சாமமூன்றிற் றானிவன் மடிவான்பாரு
பங்கஞ்செய் வேங்கைபோலப் பாய்ந்துமே ஐயம்வந்தால்
திங்கள்போற் சாமம்ரெண்டிற் றிரமுட னிறப்பான்பாரே. 154

வண்டுபோற் பரந்துஐயம் வந்துமே நடக்குமாகில்
பண்டுபோ லிதுவுந்தானும் பத்துநா ழிகையில்மாளும்
கண்டுபா ராந்தைபோலே கனத்தையம் வருகுமாகில்
தண்டுபோற் சாமம்ரெண்டிற் சாவது திண்ணந்தானே. 155

தந்திடு கயிறுபோலத் தானைய மோடிப்பின்பு
நைந்திடு மாகிலைந்து நாழிகை மரணஞ்சொல்லு
வந்திடும் அம்புபோல வருகிடி லையந்தானும்
பிந்திடா தரைச்சாமத்திற் பேச்சில்லை மடிவார்பாரே. 156

ஐயத்தா லெடுத்தநோய்கள் அறுமூன்று நான்குமாகும்
மெய்யதா யிரண்டுகொண்பாய் மிச்சமுங் காணமாட்டாய்
செய்யவே குறிப்பினாலும் செய்கையின் பாகத்தாலும்
உய்யவேதெரிந்து கொண்டு உண்மைகள் சொல்வாய்நீயே.157

வேறுசந்தம்-வியாதிவரும் விபரம்

கட்டளைக் கலிப்பா

பெரிய தானவி யாதிக ளுக்கெலாம்
பேணிச் செய்ய மருந்துகள் முன்னமே
அரிய தானசெந் தூரமுஞ் சுண்ணமும்
அன்பாய்ச் சொன்னத றிந்துநீ செய்திடு
சிரிய தானவி யாதிக ளுக்கெலாஞ்
செய்பா கத்தொடு கைபாக மாகவே
சரிய தானகி யாழத்தாற் போக்கிடு
தக்க கர்மவி யாதிக்குக் கேளுமே. 158

கர்மத் தாலேவி யாதிகள் வந்திடிற்
கண்ட றிந்துசெந் தூரமுஞ் சுண்ணமும்
மர்ம மாகவே யுள்ளேகொ டுத்திடு
வகையில் லாமற்செய் விளையாட்டி னாலேதான்
வர்ம மாகவி யாதியு டம்பினில்
வந்திடும் விபரங்கள் தெரிந்திடு
தர்ம மாக மணஞ்செய்து வந்திடுந்
தன்மனைவியை விட்டுப்பின் நீங்கியே. 159

தன்ம னையாளுந் தானுமிருக்கையில்
　　தரவி வேர்மனை தேடிப்புகுந்தாலும்
நன்ம னைவியின் போக மிகுந்தாலும்
　　நல்லுணவென் றதிகம் புசித்தாலும்
வன்மை யாகக் குறைத்துப் புசித்தாலும்
　　மாலையி லெண்ணெய்முழுகிக் குளித்தாலும்
சின்ன மாமலச்சிக்க லிருந்தாலும்
　　தேடிப் பாரில் வியாதிகள்வருகுமே. 160

பாரி லிந்த விஷயத்தி னாலேதான்
　　பாரும் லேசாய் வியாதிகள் வந்திடும்
சாரி யாக வியாதிகள் வந்திடில்
　　தரு மருந்துக்கள் தன்னைக் கொடுத்துப்பின்
கோரி யபடி லேசாய்க் கஷாயமுங்
　　கொடுத்துச் சாந்தமுஞ் செய்துவி லக்கிடு
மீறி யந்த வியாதியை விட்டிடில்
　　மேலும் மேலும் வியாதிகள் மேவுமே. 161

காலி லேமுள்ளுத் தைத்த வுடனேதான்
　　கண்ட முள்ளை யெடுத்து யெறிந்திடில்
சோலி யேதுவியாதிக ளுமில்லை
　　தோணா மல்அதை விட்டுமே வைத்திட்டால்
வேலிக்கு முள்ளிடக் காலினிற் பாய்ந்தாப்போல்
　　மிக்கச் சீயும் பிடித்துப் புரைவைத்து
மேலி னிற்சுர சன்னியும் வந்திடும்
　　வேணு மென்றுநீ தேடின தாகுமே. 162

ஆகு மிந்த விதமிது போலவே
　　அறியா மற்சுரங் கிட்டியே வந்திடிற்
பாகு டனேகி யாழங்கள் செய்துமே
　　பண்புடனே கொடுத்து விடுத்திட்டால்
வாகு டனேசு ரமும்ப றந்திடும்
　　வகையுட னேநீ பாராமல் விட்டிடில்
ஏது மிந்தச் சுரமும் வலுத்துப்பின்
　　எல்லாச் சன்னியும் வந்துவி ளையுமே. 163

வந்த பின்பு கியாழத்தா லாகுமோ
மாறி மாறியே செந்தூரஞ் சுண்ணமும்
விந்தை யாகக் கொடுத்து யிறக்கிடு
மேலு மேலு மதிகம தாகினால்
பந்த மானபா ஷாணம்ருந்தினால்
பக்குவங் கண்டு பார்த்துநீ செய்திடு
மந்த மாகயி ருந்துவி டாமலே
வந்த வாதசு ரத்தைத் தெரிந்திடே. 164

வாதசுரத்துக்கு வேறு சந்தம் நோட்டு

வாத சுரமென்றாற் சுக்குடனே
வாத மடக்கி பேராமுட்டி
சீத மடக்கிய செருப்படையும்
சித்திர மூலமா மணக்கிலையும்
வேதப் படியலோ யிவைகொஞ்சம்
விதமாய்ச் சேர்த்துச் சட்டியிட்டு
நாத னுரைப்படி யிருபடிநீர்
நன்றா யூற்றிக் காய்ச்சிடுமே. 165

காச்சிக் காற்படி வற்றியபின்
கடின மாகவே இறக்கிவைத்து
மாச்சி மையாக இரண்டுவேளை
வகையாய்க் கொடுத்து வசதியாக
ஆச்சர்ய மாக மூன்றுநாளும்
அருந்திய பின்பு புளியகற்று
போச்சுது வாத சுரந்தானும்
புகலும் பித்தமாஞ் சுரங்களுக்கே. 166

பித்த சுரமது வந்து தானாற்
பெலமாஞ் செவ்விய மிளகுக்க்கு
சித்திர மூலம் நிலவேம்பு
சீந்தித் தண்டு கொழுஞ்சியுடன்
சத்தாம் விஷ்ணு கரந்தையொடு
சரியாய் வகைக்கு விராகன்ரெண்டு
சுத்து மிருபடி தண்ணீர்விட்டுச்
சொல்லிய படியே நீகாய்ச்சே. 167

சொல்லி அரைக்காற் படியிருந்து
சுருக்காய்க் கியாழங் கொடுத்துவிடு
நல்ல தாகவே இருவேளே
நாளு மூன்றது தவறாமல்
வல்லப மாகத் தான்கொடுத்து
வாகாய்ப் புளியுப்புத் தள்ளிவிடு
எல்லாம் வல்லதாம் பித்தசுரம்
ஏகும் திரும்பவ ராதுசொன்னேன். 168

சிலேற்பன சுரத்துக்கு

வாராய்ச் சிலேற்பன சுரங்கண்டால்
வாத மடக்கியுங் கரிப்பானும்
சீராய்ச் சுக்கு பற்படாகஞ்
சித்திர மூலஞ் செந்தட்டியும்
பேராஞ் செவ்விய முடன் தக்க
பெலமாய் மூன்றுவி ராகனிட்டு
நேராய் நீர்படி ரெண்டுவிட்டு
நேருங் காற்படி காய்ச்சின்றே. 169

இன்றே காற்படிக் கியாழமதை
இயல்பா யிரண்டு வேளையது
சென்று காலை மாலையுந்தான்
சிறப்பாய் மூன்று நாளிதுபோல்
நன்றாய்ச் சாப்பிடு புளித்தள்ளி
நல்ல பாக்கிலை புகையிலையும்
அன்றே சுரம்விடும் வரைதானும்
அறிந்து செய்யிந்த விதந்தானே. 170

இந்தச் சிலேற்பன சுரத்தாலே
இரும லதுதான் வருமாகில்
சொந்தத் துளசி ஆடாதோடை
தூதுளை சங்கு ஆதண்டையும்
விந்தச் செம்முள்ளி கண்டங்கத்திரி
மிளகுதக் காளிகோழி யாவரையும்
அந்த வகைக்கொரு பிடிபிடிங்கி
அவித்திடு பிட்டுப்போ லிவைகளையே. 171

அவித்த யிலைப்பிட்டை சார்பிழிந்து
அதனை யெடுத்துமே வைத்துக்கொண்டு
மெவித்த கஸ்தூரி மஞ்சளதும்
வெளிச்சிப் பிசின்திப் பிலிமூலம்
கூவி மிளகுடன் திப்பிலியும்
கூட்டரத் தைகருஞ் சீரகமும்
தாவி வகைக்கொரு விராகனிடை
சரியாய்ச் சேர்த்து இடித்துக்கொள்ளே. 172

இடித்த மருந்தொரு காசிடைதான்
இதமாய் வடிகட்டி வைத்துக்கொண்டு
பிடித்த தேனொரு காசளவு
பெலமாய்ப் பிழிந்த சாற்றிலிட்டு
அடுத்துப் பொடியை யதிற்போட்டு
ஆறு வேளைதா ன்ருந்திவிடு
தடித்த சிலேற்பன சுரத்தினாலே
சார்ந்த விருமலு மோடிடுமே. 173

சுரம் இளைப்பு அசதிக்கு

ஓடு மேல்வகைச் சுரம்பிடித்து
உலர்ந்தே யிளையுப்புடன சதிகண்டாற்
றேடு திப்பிலி மிளகு சுக்கு
சீரக முடனே ஓமமுடன்
போடு வகைக்கஞ்சு விராகனிடை
பூராய் வாங்கிக் கலந்தேதான்
ஆடும்ஆறு பங்குசெய்து
ஆறு துணிமுடிந் தேபாரே. 174

பாரும் நீலிவேர் கண்டங்கத்திரி
பதமாஞ் சித்தா முட்டியுடன்
சேருஞ் சீந்திக் கொடிசுக்கு
திப்பிலி விஷ்ணுகிரந்தியுடன்
நேரும் பேய்ப்புடல் துளசிநொச்சி
நிலவேம் புடன் பிடி கொண்டுவந்து
ஆரும் இஞ்சி சித்தரத்தை
அக்கிராக் காரஞ் சொன்னேனே. 175

சொன்ன வகைக்கொரு காசிடைதான்
சுக்மாய் வாங்கி வைத்துப்பின்பு
யின்னுந் தும்பை யுடவேரும்
பேர்நில வாகை யதன்வேரும்
நன்னும் வெள்ளுள்ளி கொஞ்சங்கொஞ்சம்
நலமாய் வாங்கி வைத்தேதான்
சின்ன மிலாதே தானிடித்துச்
சீரா யொருசட்டி தனிற்போட்டே. 176

போட்டுப் பதக்குநீ ரதில்விட்டுப்
புகழாய்த் துணிமுடி யாறுமிட்டு
நாட்டும் அடுப்பிற் றானேற்றி
நன்றா யெட்டொன்றாய் வற்றவைத்து
தேட்ட முடனே துணியாறிற்
சிறப்பா யெடுத்து ஒருமுடியை
காட்ட முடனே தானரைத்துக்
காற்படி நீரிற் றான்கலக்கே. 177

கலக்கி அரைக்காற் படிநீரையும்
கணக்கா யொருவேளை தானருந்து
துலக்க மாகவே ஆறுவேளை
துணிந்து சாப்பிடச் சுரமுடனே
நலக்க மானதோ ரிளைப்பசதி
நன்றா யோடும் நில்லாமல்
சலக்க மாகவே புளியதிகம்
தான்சே ராமற் சாப்பிடவே. 178

சுரவீக்கத்திற்கு

வாதம் பித்தசி லேற்பனத்தில்
வலுவாய் வீக்க முண்டாகில்
வீத இலந்தைவே ராவரைவேர்
வீழி வேருடன் கொடுவேலிவேர்
நீதம் சிறுகீரை வேருடனே
நீலிவே ருஞ்சா ரணைவேரும்
சேத மில்லாமல் வகைவகைக்குத்
திறமாய்ப் பலங்கால் கொண்டுவந்தே. 179

கொண்டு வந்துபூ சணித்தண்டும்
கோவைத் தண்டுடன் நீர்முள்ளி
தண்டு கருமுள்ளி சுரைத்தண்டுந்
தக்க வகைக்குக் காற்பலமாய்க்
கண்ட கொளுமிச்சை பிரமியுடன்
காட்டா மணக்குவா தமடக்கி
விண்ட இவைகளி னிலைபிடிதான்
மிகவும் அடுக்கடுக் காகவைத்தே. 180

கடுக்காய்த் திப்பிலி மல்லிமுத்தக்
காசு திப்பிலி மூலமஞ்சள்
அடுக்காய் வகைக்கு விராகனிடை
அன்பாய் வாங்கியி டித்துமேதான்
துடுக்காய்ப் பாண்டந் தனிலிட்டுச்
சுகமாய் நீர்படி யாறுவிட்டு
முடுக்கா யடுப்பினிற் றானேற்றி
முடிவா யெட்டொன் றாய்க்காச்சே. 181

காய்ச்சி யெடுத்த கியாழமதிற்
கணக்கா யரைக்காற் படியெடுத்து
தாழ்ச்சியி லாமற் சீரகமுந்
தக்க சுக்கரைக் காற்பலமும்
வாய்ச்சி யுடனே தானரைத்து
வடித்த கியாழ மதிற் கலக்கி
மாட்சி யுடனே யிம்மருந்தை
வகையா யிப்படித் தானருந்தே. 182

இப்படி யாக மூன்றேநாள்
இயல்பாய்க் காலை மாலையுமே
செப்ப முடனே தானருந்து
திறமாம் புகையிலே புளிதள்ளு
ஒப்ப முடனே அசதிசுரம்
ஓடிப் படர்ந்திடும் வீக்கமெல்லாந்
தப்பித மில்லாமற் றானருந்து
சரியாய்ப் போனபின் பேப்பரே. 183

பழையசுரத்துக்கு

போன சுரமது பழையபடி
புகழாய்ப் பின்பு வருமானால்
ஆன வுடலுந் தந்தமுமே
அன்பாய் வலியுடன் விட்டுவரும்
கா்ண வேயிந்தப் பழையசுரம்
கடினப்படுத்துமே யிதுதனக்கு
ஏன முடனே கியாழமுறை
இயல்பாய் நூலின் படிசெய்யே. 184

நல்ல மூக்குத்திப் பூடுடனே
நவில்சீரா செங் கழனிவேரும்
வல்ல விஷ்ணு கிரந்தியுடன்
வாகாய்ப் பற்ப டாகமுமே
செல்லத் துளசிவோ் தும்பைவேருஞ்
சீரார் முக்கொழுஞ் சியின்வேரும்
எல்லாம் வகைக்குக் காற்பலமாய்
இனிமையுடனே கொண்டு வந்தே. 185

வந்த மருந்துடன் திரிகடுகும்
வகையாய் மூன்று விராகனிடை
சிந்திப் போகா மலேயிடித்து
சீரா யாவுமே சட்டியிட்டு
பந்த மில்லாம லிருபடிநீர்
பாங்கா யூற்றி அடுப்பேற்றி
விந்தையுடனே யெட்டொன்றாய்
மிகவுங் காலை காய்ச்சிவிடே. 186

காலை அரைக்காற் படிவீதம்
கணக்கு மூன்றுநா ளாறுவேளை
சீல முடன் தான் நீயருந்த
சென்று பறக்குமே பழையசுரஞ்
சால முடனே புளிபொடியுந்
தள்ளு வெற்றிலை பாக்குடனே
கோலப் புகையிலை தள்ளிவிட்டாற்
கூராய்ப் பழஞ்சுர மதுபோச்சே. 187

போச்சு பழைய சுரமதற்கு
புகழக் கேளு நெய்தன்னை
வாச்சு பொன்னாங் காணிவேர்
வகையாம் நெல்லி முள்ளியுமே
பாச்சும் அதிமது ரத்தோடு
பண்பாய்ப் பூசணி விரையுடனே
தோச்சில் லாவெள் ளரிவிரையும்
சொன்ன விராக னிடைகொணர்ந்தே. 188

சொன்ன அமுதப் பால்படிகாற்
சுகமாய் வாங்கி மேற்கண்ட
நன்னய மான சரக்குகளை
நலமாய்ப் பால்விட் டரைத்தெடுத்து
சின்னமி லாத ஆவின்நெய்யைச்
சீராய்க் காற்படி சட்டியிட்டு
முன்ன மரைத்த சரக்குகளை
முடியப் போட்டுக் கரைத்துவிட்டே. 189

கரைத்த மருந்தை அடுப்பேற்றிக்
கணக்காய் மெழுகு பதங்காய்ச்சி
உரைத்த படியிரு வேளையுமே
உண்பாய்க் கழஞ்சி ரெண்டுவீதம்
நிரைத்த படியந் நெய்யதனை
நேரா யுடம்பினிற் பூசிவிடு
சிரத்தைப் படியே மூன்றாநாள்
சீராய்ச் சாப்பிட டறிவாயே. 190

அறிவாய் சுரங்க ளகன்றுவிடும்
அன்பாய்ப் புளிபுகை யிலையுடனே
தெரிவாய் பாக்கிலை பால்மோருஞ்
சிறப்பாய்த் தள்ளி விடவேணும்
பரிவா யிதுபோற் செய்துவரில்
படிப்படி யாக விலகிவிடும்
சரியாய்த் தெரிந்து செய்வாயேல்
தக்க காந்தலும் பறந்திடுமே. 191

குளிர்சுரம் வாந்திக்கு

காந்தல் குளிருடன் வாந்தியுமே
கண்டிடிற் கால்கை யசதிதரும்
பாந்த மாகவே வயிறுளைச்சற்
பாகுபோற் சீதக் கழிச்சலுறும்
சாந்தமா யிடுப்புங் கடுத்திருக்கும்
தக்க வாயதும் வறண்டிருக்கும்
ஆர்ந்தகண் பச்சை யாகிவிடும்
அன்பாய்ச் சீத சுரமதற்கே. 192

இதற்குக் காத்தொட்டி மொசுமொசுக்கை
இலையுடன் விஷ்ணுகி ரந்தியுமே
சதிராய்ப் பற்ப டாகமுடன்
சம்பங்கிக் கிழங்குடன் வெள்ளறுகும்
விதியா யிலைவகை காற்பலந்தான்
வேண்டி யுரலிற் போட்டிடித்துப்
பதியாஞ் சுக்கு மிளகரைக்காற்
பலமு மிடித்துப் பாண்டமிட்டே. 193

பாண்ட மிட்டுப் படிதண்ணீர்
பண்பாய் விட்டு அடுப்பேற்றி
வேண்டும் படியே தீயெரித்து
மிகவரைக் காற்படி யாகவிட்டு
நீண்ட கியாழம் வடிகட்டி
நேரரைக் காற்படி தானருந்த
ஆண்டவ ருடைய உதவியினால்
அப்பா சீதசு ரம்போமே. 194

போமே குளிர்சுரம் வாந்தியும்போம்
போக்காய் மூன்றுநா ளாறுவேளை
நாமே யருந்திட வாந்தியும்போம்
நாடும் புளியுப்புப் புகையிலையும்
ஆமே பாக்கிலை மோர்பாலும்
அகலத் தள்ளியே விடவேண்டும்
தாமே சீதசு ரம்போகும்.
தக்காது மாந்த சுரம்பாரே. 195

மாந்த சுரமது வந்திடிலோ
வயிறு ஊதியே மந்தப்படுங்
காந்த லாகியே வாந்திவருங்
கண்ணுஞ் சிவந்திடும் வறட்சியுண்டாம்
பாந்த முடன்கே ளிதுதனக்கு
பக்குவ மானகி யாழமது
சாந்த முடனே சொல்லுகிறேன்
சரியாய் நல்ல படிசெய்யே. 196

நல்ல தும்பை பேய்ப்புடலும்
நலமாந் துளசி கண்டங்கத்திரி
வல்ல சுக்குடன் திப்பிலியும்
வாகாம் நெல்லிப் பருப்புடனே
செல்லும் வேம்பின் புண்ணாக்குந்
திறமா மிளகும் வகைவகைக்கு
மெல்ல வைந்து விராகனிடை
மெதுவாய் வாங்கி யிடித்துவையே. 197

இடித்த பொடியைச் சட்டியிட்டு
இதமாய் நீர்படி நாலுவிட்டுப்
பிடித்த பிடியா யடுப்பேற்றிப்
பெரிதா யரைப்படி யாய்க்காய்ச்சி
வடித்துக் காலை மாலையுமே
வாகா யரைக்காற் படியருந்திக்
குடித்து நீயு மிதுபோலக்
கூடியே மூன்று நாளருந்தே. 198

அருந்தும் போது புளியுப்பை
யகற்றிக் கஞ்சி யாய்க்கொடுத்துத்
திருந்தும் பொடிபுகை யிலையோடு
சேர்ந்த பாக்கிலை தள்ளிவிடு
மருந்தா மிந்தக் கியாழமதை
வகையோ டுண்டு வருவாயேற்
பொருந்தும் மாந்தசு ரந்தானும்
பூராய்ப் பாரும் பறந்திடுமே. 199

கணைச் சுரத்திற்கு

பாருங் கணைச்சுரம் வருமானாற்
பருத்த நாசியும் வறண்டுவிடுங்
கூருந் தேகமுந் தான்மெலியுங்
கொடிதாய் நாவும் வறட்சியுறுஞ்
சேருங் காந்தல் குறைவாகுந்
திக்கென நெஞ்சு தானடைக்குந்
தேருங் கால்கை யசதிதருந்
தீரும் வகைதனை யுரைப்பேனே. 200

உரைக்கும் வில்வம் ஆத்தியிலை
உற்ற கருவே லிலந்தையிலை
நிரைக்குங் கண்டு வணங்கியிலை
நேரா யைந்து பிடிகொணர்ந்து
வரைக்குஞ் சம்பங் கிழங்குடனே
வாகாய்ச் சீரகங் காற்பலமுங்
குரைத்தி டாமலே புளித்ததண்ணீர்
கூறா யிருபடி: சட்டியிட்டே. 201

இட்டுச் சட்டியை யடுப்பேற்றி
எட்டி லொன்றாய் வற்றவைத்துக்
கட்டுட னேதான் காலைமாலை
கணக்கா யரைக்காற் படியருந்து
திட்ட முடனே மூன்றுநாள்தான்
திறமாய்க் கொடுத்து வந்திடவே
விட்டுக் கணைச்சுர மோடிவிடும்
வேண்டும் பத்தியந் தான்கேளே. 202

பத்தியங் கேளு புளியுப்பும்
பண்பாய்ப் பொடிபுகை யிலைதள்ளு
நத்தியே தான் பால்மோரும்
நலமாய்த் தள்ளி விடவேண்டும்
சுத்தி வந்த தோஷமெல்லாஞ்
சொல்லா தோடிப் பறந்துவிடும்
புத்திய தோடு பிழைத்திடவே
புகழாய்ச் சொன்னேன் யாக்கோபே. 203

மாந்தக் கழிச்சலுக்கு

சொன்ன மாந்தக் கழிச்சல்வரிற்
சுகமா மருந்து தனைக்கேளு
கன்ன லான அகத்தியிலை
கணக்கா யொருபிடி கொண்டுவந்து
முன்ன மாகச் சட்டியிட்டு
முருகக் கருக வறுத்தபின்பு
நன்னய மாக இருபடிமோர்
நன்றா யூற்றிக் காய்ச்சிவிட்டே. 204

காய்ச்சிக் காற்படி யாகவிட்டுக்
கணக்கா யரைக்காற் படியெடுத்து
தாட்சியில் லாம லொருவேளை
தானே யருந்தக் கொடுத்துவிடு
மாட்சி மையாக மூன்றுநாளும்
வகையாய்த் தானுங் கொடுப்பீரேல்
ஏச்சிலா மாந்தக் கழிச்சலது
இல்லா தோடு மினிக்கேளே. 205

இனிமை யுடனே யிதில்வீக்க
மியல்பாய்க் கண்டிடில் வகைகேளு
கனிவா யுகாவேர் சாரணைவேர்
காணு மேனிவேர் மாதுளைவேர்
பணிவா யாவரை வேர்வசம்பு
பாங்காஞ் சுக்கு முதலாகத்
தணியா வகைவகை காற்பலமாய்
தக்க படிக்கதை வாங்கிவைத்தே. 206

வாங்கிடு வெள்ளைப் பூண்டையுமே
வகையா யரைக்காற் பலமெடுத்துத்
தாங்குந் துணியதி லேமுடிந்து
தக்க சட்டியி லேபோட்டுப்
பாங்கா யிரண்டு படித்தண்ணீர்
பலமாய் விட்டு அடுப்பேற்றி
ஓங்கும் படியாய்த் தீயெரித்து
உடன்காற் படியா வற்றவையே. 207

வத்த வைத்துப் பார்த்திறக்கி
வகையா யரைக்காற் படிநீரைச்
சித்த முடனே தானருந்தத்
தீரு மாந்தக் கழிச்சலுந்தான்
பத்த முடனே யிருவேளைப்
பாங்காய்ச் சாப்பிடச்சுரம் போகும்
மத்த பொடிபுகை யிலைதள்ளி
வந்தால் வியாதி தீர்ந்திடுமே. 208

மூன்றா முறைக்காய்ச்சலுக்கு

தீர்ந்திடு மூன்றா முறைக்காய்ச்சல்
சீரில் லாமல் வந்தாக்கால்
ஆர்ந்த புங்கங் கொழுந்துடனே
அன்பாய் வெள்ளுள்ளி மிளகுசுக்கைச்
சேர்ந்து அரைத்துக் கனியளவு
திரட்டி உண்டிடக் காய்ச்சல்விடும்
வார்ந்த மூன்றா முறைபோகும்
வாந்த லாகும் நசியமொன்றே. 209

நசியம்

ஆகும் ஓம மிளகுடனே
அன்பாய்ப் பூத்த தைவேளை
ஏகு மிலுப்பைக் கட்டியுடன்
இதமாய் வெள்ளுள்ளி பற்படாகம்
வாகு டனேநீ தான்வாங்கி
வளமாய்க் கழற்சிக் காயளவு
மோக முடனே தானரைத்து
மூக்கிற் பிழிந்திட வோடிடுமே. 210

ஆக்கிராணம்

ஓடு மின்னொரு ஆக்கிராணம்
உயர்வாய்ச் சொல்வேன் கேளுமினி
வேடு மிளகு வசம்போமம்
வெற்றிலைக் காம்புடன் வெள்ளுள்ளி
காடுங் கச்சாந் தகரையுடன்
கச்சக் கருவாட்டு மண்டையுமே
கூடிய தெல்லாந் தான்நசுக்கி
கூராய்த் துணியிற் சுட்டிவிட்டே. 211

கட்டுட னேமேற் காந்தல்வரிற்
கடிதாய் நாசியி லுறுஞ்சிவிட
ஒட்டிடு மூன்றா முறைக்காய்ச்சல்
ஓடி வாடிப் பறந்துவிடும்
கெட்டி யிரண்டா முறைக்காய்ச்சல்
கேட்ட வுடனே ஓடிவிடும்
அட்டி நாலா முறைக்காய்ச்சல்
அகல மருந்து தனைக்கேளே. 212

மருந்தின் விபர மதுகேளு
வகையா யரைப்படி மோர்வாங்கி
திருந்தும் நல்லெண்ணெய் படிவாங்கி
திரிகடு குடன்கோஷ் டந்தானும்
அருந்தும் நன்னா ரியின்வேரும்
அழகாங் குருந்தொட்டி யின்வேரும்
பொருந்துஞ் சந்தனக் கட்டையின்வேர்
புகழா கியமர மஞ்சள்வாங்கே. 213

வாங்குஞ் செவ்வள் ளிக்கொடியும்
வளமா முத்த மரிதாரந்
தாங்குங் கடல் நுரை செவ்வியமுந்
தக்க வாக்கு அதிமதுரம்
பாங்கு மிவைகள் வகைவகைக்குப்
பரிவாய் மூன்றுவி ராகனிடை
ஓங்கும் படியாய்த் தான்வாங்கி
உடனே மோர்விட் டரைத்துவிட்டே. 214

அரைத்தே மோரிற் றான்கலக்கி
அன்பாய்ச்சட்டி தனில்விட்டு
நிரைத்தெள் ளெண்ணெய் தானுமிட்டு
நேராய்க் கலக்கி அடுப்பேற்றிக்
கரைத்துக் காய்ச்சி மெழுகுபதம்
கண்டு வடித்துத் தைலமதை
மறைத்து நெற்புடம் மூன்றேநாள்
வைத்தெடுத் திடுவாய் தைலமிதே. 215

தயிலந் தனையும் வெயிலில்வைத்து
தயவா யெடுத்துக் கொண்டபின்பு
ஓயிலாய் வார மிருமுறைநீ
உதகத் தைலந் தான்தேய்த்து
பயிலா திலுப்பைக் கட்டியினாற்
பாங்காய்த் தோய்த்து வெந்நீரில்
வெயிலிற் குளித்து உடம்பதனை
மிகவும் உலர்ந்திடச் சுரம்போமே. 216

சுரமே தாபச் சுரமாகிற்
சொல்லுந் தாகமும் விக்கலுறும்
வரமாங் குளிரு முண்டாகும்
வாய்நா வறண்டு தாகமுறுந்
திரமாய் வயிறு தான் கழியுஞ்
சிவப்ப தாகிடும் கண்விழியும்
நிரமாந் தாக சுரமாகும்
நேர்மை யுடன் சொல்லக் கேள்மருந்தே. 216

சொல்லக் கேளும் ருக்மானே
சுரநீர் தாகம் போவதற்கு
கொல்லன் கோவைக் கிழங்குடனே
கூடும் ஆடா தோடைசுக்கு
நல்ல அதிமது ரம்வகைக்கு
நலமாய்க் காற்பலந் தான்வாங்கி
எல்லாஞ் சட்டி யினிற்போட்டு
இதமா யறுபடி நீர்விட்டிடே. 218

விட்ட பின்பு அடுப்பேற்றி
வியப்பாய்த் தீயுந் தானெரித்து
எட்டி லொன்றாய் வற்றவைத்து
இதமாய்க் காய்ச்சி இறக்கியபின்
சட்ட முடனே தாகத்திற்குச்
சரியா யரைக்காற் படிவீதம்
திட்ட முடனே தான்கொடுக்கத்,
தீருந் தாகசு ரந்தானே. 219

தாகம் நீங்கிச் சுரமட்டுந்
தானே யிருக்கில் மருந்துசொல்வேன்
போகுஞ் சுக்கு வெள்ளுள்ளி
போரா மல்லி திப்பிலியும்
ஏகு மிளகு அதிமதுரம்
- இவையா வுந்தான் பொடிசெய்து
வாகா யிஞ்சிச் சாற்றிலேதான்
வகையாய்க் கொடுத்த பின்கேளே. 220

கொடுத்துப் பின்னு மறுவேளை
குடிக்கச் சுரமு மோடிவிடும்
விடுத்துப் புளிபுகை யிலைதள்ளு
மிகவே கஞ்சி யருந்திவிடு
தடுத்து யிந்தச் சுரந்தானும்
தலையு மெடுக்கா தோடிவிடும்
அடுத்தே யாகோப் சொன்னபடி
அண்ட வாத முறைகேளே. 221

அண்டவாதத்திற்கு

அண்ட வாத மிகவந்தால்
அதற்கு மருந்து தான்கேளு
கண்ட முருங்கைப் பூவைத்தான்
கனியள வாக வேயரைத்துக்
கொண்ட ஆவின் பாலதனிற்
கொடுத்து அருந்தச் செய்தாக்காற்
தெண்டஞ் செய்து ஓடிவிடுந்
திறமா மிதுதான் தப்பாதே. 222

தப்பா தின்னுஞ் சொல்லுகிறேன்
சரியா யொருபக்கம் வீக்கம்வரில்
அப்பா தப்பா தைவேளை
அருமை யாகத் தான்கசக்கி
நப்பா மருகாற் பெருவிரலின்
நகத்திற் பச்சிலை வைத்தேதான்
செப்பி மூன்றுநாள் கட்டிவிடத்
திரண்ட வீக்கமும் பறந்திடுமே. 223

பறக்கும் வாத மின்னமுங்கேள்
பாரு மதிலே போகாட்டாற்
சிறக்கு முருங்கை வேர்ப்பட்டை
திறமாய் வாங்கி யரைத்துப்பின்பு
நிறக்கும் விளாங்கா யளவாக
நேரா யுருட்டி வைத்துக்கொண்டு
மறக்குங் கருங்கு ருவையரிசி
வகையா யரைப்படி மாவுசெய்யே. 224

மாவுடனேவேர்ப் பட்டைதனை
வகையாய்ச் சேர்த்துக் களிக்கிண்டி
மேவும் படிசர்க் கரைதொட்டு
விரைவாய்ச் சுடச்சுட அருந்திவிடு
தாவு மூன்றுநா ளிந்தப்படி
சரியாய்க் கிண்டித் தின்பாயேல்
நோவும் பறந்திடும் புளியுமுப்பும்
நுண்மை யாகவே தள்ளிவிடே. 225

ஏரண்ட வாதம்

விட்டே ரண்ட வாதம்வந்தால்
விதமாய் முழுகத் தைலஞ் சொல்வேன்
கட்டுஞ் செம்முள்ளி வேருடனே
கார்த்திகைக் கிழங்குங் கொண்டுவந்து
திட்ட முடனே ரண்டமெனுஞ்
செடியின் வேர்முருங் கைவேருஞ்
சட்ட முடனே வகைவகைக்குத்
தனித்தனிப் பத்துப் பலங்கொணர்ந்தே. 226

பலமா யிடித்துப் பாண்டமிட்டும்
பாணி தூணிநீர் விட்டேநீ
நலமாய்க் காய்ச்சி யெட்டொன்றாய்
நன்றாய்க் கியாழந் தன்னில்நல்ல
குலமா வின்பால் படிரெண்டு
கூடநல் லெண்ணெ யொருபடியும்
பெலமாய் விட்டுப் பின்சரக்கைப்
பேணிச் சொல்வேன் ருக்மானே. 227

சொல்லும் ஓம மகிற்கட்டை
சுக்கிந் துப்பு திப்பிலியும்
வெல்லுஞ் சதகுப்பை கோஷ்டமுடன்
விதமா மஞ்சிட்டி கல்மதமும்
நல்லும் அரத்தை அதிமதுரம்
நலமாந் தேவ தாரமுடன்
செல்லுஞ் சாரணை வேருடனே
சேருங் கொடுவேலி வேருடனே. 228

வேருடன் சங்க வேரையுமே
விதமாய் வகைவகை தன்மையுடன்
சேரு மிரண்டு கழஞ்சுவீதம்
திற'மா யெடுத்து அரைத்துடனே
பாரு முன்வைத்த கியாழமதிற்
பாலுட னிதனைக் கரைத்தொன்றாய்க்
கோரு அயத்தின் கரண்டிகொண்டு
குறிப்பாய்க் கிண்டிக் காய்ச்சிவிடே. 229

காய்ச்சி மெழுகு பதம்வந்தாற்
கருணை யுடனே மிகவடித்துத்
தாட்சி யில்லா மற்றேய்த்துத்
தலையது முழுகி வரவேதான்
மூச்சிமை யாக யிப்படியே
மூன்று நாளைக் கொருதடவை
மாட்சிமை யாக முழுகிவர
வாத மெல்லாம் பறந்திடுமே. 230

பறக்கும் படிநீ காலையினிற்
பார்த்துத் தைலத்தைத் தான்றேய்த்துச்
சிறக்கும் படியா யரப்பதனைத்
தேய்த்து வெந்நீர் விட்டினிதாய்
நிறக்கும் படியாய்த் தலையுலர்த்தி
நேராய்ப் பத்தியங் கொடுத்துவிடு
சுரக்கு மேரண்ட வாதமது
சொல்லாம லோடி விடும்பாரே. 231

விரைவாதத்திற்கு கம்பளிக்கட்டு

ஓடிப் பறக்கா விடிலோதான்
உடனே யின்னொரு வகைகேளு
தேடிக் கம்பளிக் கயிர்முறுக்கித்
திறமாய்ச் சேங்கொட்டைப் பால்தடவி
நாடி யேரண்ட வாதத்திற்கு
நலமாய்க் காலை நீமாறி
சாடிக் கெண்டயிற் கட்டிவிடத்
தணலாய் வெந்து புண்ணாமே. 232

வெந்த புண்ணா றும்போது
மிகவே வீக்கமும் வற்றிவிடும்
பந்தம தாக யிருவிரையும்
பருத்து வீக்க முண்டானாற்
சிந்தவே ரெண்டு காலினிலுஞ்
சிறப்பாய்க் கெண்டையிற் கட்டிவிடில்
வந்த யிருகால் புண்ணாகும்
வாகாய் விரைவா தம்போமே. 233

சகலவாதத்திற்கு

சகல வாதமும் வந்தாக்காற்
றானே யெருக்கிலை காய்பூவு
அகல முடன்வாத மடக்கி
அரிய நொச்சியுங் கருநொச்சியும்
புகழும் வேலிப் பருத்திஐந்தும்
பூரா வகைக்குக் காற்படியாய்
இகலாச் சாறு தான்வாங்கி
இதமாய்ச் சட்டி யிட்டுவையே. 234

வையே ரண்ட முத்துதனை
வாகா யிடித்துத் தானெடுத்து
பைய வேமுன் சாற்றிலிட்டுப்
பாங்காய்த் தீபம் போலெரித்து
மெய்யாய்க் காய்ச்சி யெண்ணெய்தனை
மிகவு மொருபடி யிறுத்துவைத்துச்
செய்யுங் கடுகு பூராவுஞ்
சீராய்த் தள்ளிப் பின்கேளே. 235

தள்ளிப் பின்பு சரக்குவகை
சாற்றக் கேளும் ருக்மானே
உள்ளி கடுகஸ் தூரிமஞ்சன்
உரிய கருஞ்சீ ரகமஞ்சள்
தெள்ளி மிளகு வெளிச்சிப்பிசின்
சேரும் வசம்பு வாய்விளங்கம்
புள்ளி மூன்று வராகனிடை
புகழா யிடித்துத் தூள்சேரே. 236

சேருமுன் வைத்த யெண்ணெயினிற்
றிறமாய்த் தூள்களை லாம்போட்டு
பாரு மருந்தெல் லாங்கிண்டிப்
பதமாய்க் காய்ச்சி யிறுத்தெடுத்துத்
தேரும் படிநீ நெற்புடத்திற்
சிறக்க வைந்துநாள் வைத்தெடுத்து
நேரும் படியாய் வெயிற்புடத்தில்
நேரொரு சாமம் வைத்துவிடே. 237

சாமம் வைத்த தைலமதைத்
தக்க படியாய் மேல்முழுதும்
சேம மடையத் துவாலையிட்டுத்
திறமா யிலுப்பைப் பிண்ணாக்கை
வாம முடனே தானரைத்து
மகிழ்வாய் வெந்நீர் முழுகிவர
நேம முடனே வாதமெல்லாம்
நில்லா தோடிடும் வகைபாரே. 238

முழங்கால் வாதத்திற்கு

வகையாய் முழங்கால் வாதம்வரில்
மகிழ்வாய் வெள்ளைப் பூண்டுடனே
திகையாம் புத்தாஞ் சோறுதனைத்
திறமா யொருபலந் தானெடுத்துத்
துகையா யிலைக்கள்ளி திருகுகள்ளி
சொல்லுமெ ருக்கிலை மூன்றினிலும்
பகையில் லாத பாலதனைப்
பாங்காய்த் தனியா யெடுத்துவைத்தே. 239

எடுத்த பால்கள் மூன்றையுமே
இதமாய்ச் சேர்த்து முன்சரக்கைத்
தடுத்த கல்வந் தனிற்போட்டுத்
தானரைத் துடனே வழித்தெடுத்து
விடுத்த முழங்கால் தனிற்பூச
மிகவே வாதம் விட்டோடும்
அடுத்த மூன்றுநா ளிதுபோல
அடைவாய்ப் பூசிடத் தீர்ந்திடுமே. 240

முன்வாதத்துக்குக் கட்டுமருந்து

தீரு முழங்கால் தனிற்கட்டத்
திறமாம் நொச்சி யிலையோடு
நேரு கின்ற கல்வாழை
நிகழ்த்தும் வாத மடக்கியிலை
பாரும் வேலிப் பருத்தியிலை
பாங்கா யிடித்து முழங்காலிற்
றேரும் படிக்குக் கட்டிவிடத்
தெளிவாய் முழங்கால் வழிபோமே. 241

வாதத்திற்குப் பூச்சுமருந்து

போமே முழங்கால் வலியெடுத்தாற்
புகழாய் மருந்து தனைக்கேளும்
வாமே யிலைக்கள்ளிப் பாலுதனை
வகையாய் முழங்கால் தனிற்பூசி
தாமே தூர்மண்ணைக் கொண்டுவந்து
தயவாய் முழங்கால் தனிற்போடு
ஆமே மூன்றுநா ளிப்படியே
அடைவாய்ச் செய்ய வலிபோமே. 242

முகவாதத்திற்கு

செய்யக் கேளு முகவாதந்
தீர மருந்து தானுரைப்பேன்
உய்யும் நல்லெண்ணெய் புங்கெண்ணெய்
உரமிகு வேப்பெண்ணெய் மூன்றினிலும்
நய்யும் வகைக்குக் காற்படியாய்
நலமாய் வாங்கி மூன்றினையும்
மெய்யாய்ச் சட்டி தனில்விட்டு
வேண்டு மருந்தை நீகேளே. 243

மருந்து நிலவாகை அசுவகெந்தி
வாகாய் வேலிப் பருத்தியிலை
தெரிந்தே மூன்றும் வகைவகையாய்
திருந்த விடித்தரைப் படிவாங்கி
பொருந்தும் வசம்பு கருஞ்சீரகம்
பூராய்க் கெந்தம் வெள்ளுள்ளியுந்
திருந்த மூன்று வராகனிடை
சேரும் வகைவகை வாங்கிவிடே. 244

வாங்கிப் பச்சிலைச் சாறுவிட்டு
வகையா யரைத்துத் தானெடுத்து
ஓங்கி யாவுஞ் சட்டியிட்டு
ஒழுங்காய்க் கரைத்து அடுப்பேற்றி
பாங்காய்த் தீபம் போலெரித்துப்
பதமாய்க் காய்ச்சி யிறக்கியேதான்
சாங்க முடனே பூசிவரத்
தாங்கா முகவா தமும்போமே. 245

முகமாம் நடுக்கு வாதம்வந்தால்
முடிக்கு மருந்தைச் சொல்லுகிறேன்
நகமாம் அழிஞ்சிப் பட்டைதனை
நலமாய்ப் பலமொன்று மாவாக்கிச்
சுகமாய்க் கருங்குரு வையரிசி
சூழும் படிகால் மாவாக்கி
இகமா யிரண்டுந் தான்சேர்த்து
இதமாய்ச் செய்ய வகைகேளே. 246

செய்யுஞ் சட்டியிற் பால்விட்டுத்
திறமா யடுப்பிற் காயவைத்து
உய்யும் படியாய் மாவிட்டு
உருளக் கிண்டி யாறுமுன்னே
நெய்யும் பனை வெல் லமுங்கூட்டி
நேரா யுண்ணக் கொடுத்துவிடு
வைய மதிக்க நடுக்குவாதம்
மாறி யோடிப் பறந்திடுமே. 247

பறக்கும் மூன்றுநா ளாறுவேளை
பத்திய மாகவே உண்டுவரில்
சிறக்கும் புளியுப்புப் புகையிலையுஞ்
சீராய்ப் பத்திய மாயிருந்து
நிறக்கும் படியொன் பதுநாளில்
நேராய்ச் சகலமுந் தான்சேரு
மறக்க வேண்டா மென்றேதான்
வாகா யாகோபு சொன்னேனே. 248

சுளுக்குவாதம்

சொன்னதோர் சுளுக்கு வாதம்வரிற்
சுகந்தநன் னாரிவே ரொருபலமும்
நன்னு மளிஞ்சிவே ரொருபலமும்
நன்றா யிடித்து மாவாக்கி
அன்ன கருங்குருவையரிசி
அரைப்படி தன்னைத் தான்திரித்துச்
சின்னமில் லாமற் பாலைவிட்டுத்
திறமாங் களியாய்க் கிண்டிவிடே. 249

கிண்டுங் களியைத் தானெடுத்துக்
கொடியாய்த் தின்றிடும் ஆறிடாமல்
கண்டொரு நாளைக் கிருவேளை
களியைத் தின்று பத்தியமாய்
விண்டே மூநாள் தலைமுழுகு
விளங்கும் புளியுப்பைத் தான்சேரு
பண்டு வந்திடுஞ் சுளுக்குவாதம்
பாருநில் லாமற் பறந்திடுமே. 250

கடுப்புவாதம்

பறந்து வருகிற கடுப்புவாதம்
பாங்காய் வந்திடிற் றேகமெலாஞ்
சிறந்த கடுப்புண் டாவதற்குச்
சீராய் மருந்து தனைக்கேளு
நிறந்த நொச்சிலை பலமைந்து
நேராஞ் சதகுப்பை பலமொன்று
சுறந்த உளுந்திற் பத்துப்பலம்
சுகமா யெடுத்து வைத்துவிடே. 251

எடுத்துக் கார்த்திகைக் கிழங்குதனை
இதமாய் மூன்று பலம்வாங்கி
விடுத்து இதுவெலாந் தானிடித்து
மிகவே நல்ல பாண்டமிட்டு
அடுத்து அதிலே தூணிநீரு
அன்பா யூற்றி யடுப்பேற்றி
கடுத்து யெட்டொன்றாய்க் காய்ச்சிக்
கடுக யிறுத்து எடுத்துவிடே. 252

இறுத்து நல்லெண்ணெ யொருபடியும்
இதமா யாவின்பால் நாலுபடி
திருத்தும் உத்தா மணிச்சாறைத்
திறமா யிரண்டு படிகூட்டி
கருத்துப் போலொன் றாய்ச்சேர்த்து
கலக்கிப் பாண்டத் தில்வைத்து
பொறுத்த சதகுப்பை யதிமதுரம்
புகழாந் திரிகடு கதுதானே. 253

தானே அசுவ கெந்தியின்வேர்
சாரணை வேருடன் வகைவகைக்குக்
கோனே காற்பலந் தான்வாங்கிக்
குறியா யரைத்துக் கூடவிட்டு
வானே யொன்றாய்த் தான்கலக்கி
மகிழ்வா யடுப்பு தனிலேற்றிக்
காணே ஒருசாதி விறகாலே
காய்ச்சு தீபம்போற் றீயெரித்தே. 254

தீபம் போலே காய்ச்சியேதான்
சிறப்பாய் மெழுகு பதம்பார்த்து
தாபப் படாதே நீயிறக்கித்
தனியே மறுசட்டி தானிறுத்து
பாப கர்மங்கள் துலைந்துவிடப்
பதமா யுடம்பெலாந் துவாலையிட
கோப மில்லாத கடுப்புகளும்
குணமாய் வாதமும் போய்விடுமே. 255

கடுப்பு வாதத்திற்கு

வாதம் போய்விடக் கியாழமது
வகையாய்க் கேளும் ருக்மானே
சேதம் வராமற் சதகுப்பை
சிறந்த சுக்கொடு வாய்விளங்கம்
பேதமில் லாத மிளகுமல்லி
பிறங்குங் கடுகு நொச்சியிலை
நாத னருளால் வகைக்கிரண்டு
நன்றாய் விராக னிடைவாங்கே. 256

வாங்குஞ் சரக்கை வறுத்துடனே
மகிழ்வாய்ப் பானை தனிலிட்டுத்
தாங்கும் நாலு படிதண்ணீர்
தக்க படியாய் விட்டுப்பின்
ஓங்கும் யெட்டொன் றாய்க்காய்ச்சி
ஒழுங்கா யரைக்காற் படிவீதம்
பாங்காய் மூன்று நாளருந்த
பாரா தோடும் வாதமுமே. 257

ஓடுங் குடல்வாதம் வந்து தானால்
உற்ற குணங்களைத் தான்கேளு
ஆடுங் குடலுங் குமுறிநிற்கும்
அப்பாற் புரண்டு இரைச்சல்தரும்
கூடும் வயிறுமந்த மாய்க்காணும்
கொடிய வலியுண்டு வாந்திவரும்
நாடுங் குடல்வாத மிக்குணமாம்
நன்றா யறிந்துநீ மருந்துசெய்யே. 258

அறிந்த குடல்வா தந்தீர
அப்பா பிட்டொன் றைக்கேளு
தெரிந்தவெள் ளாட்டுப் புழுக்கைதனை
திறமாய் நர்லு படிகொணர்ந்து
செறிந்த ஆறு படிதண்ணீர்
திறமாய் விட்டு வேடுகட்டி
விரிந்த கருங்குரு வையரிசி
மிகவே அரைப்படி திரித்தெடுத்தே. 259

எடுத்த மாவதை வேடில்வைத்து
இதமா யெரித்துப் புட்டவித்து
கடுத்த மாகச் சுடச்சுடவே
காராட் டின்நெய் யைக்கலந்து
விடுத்த சருக்கரை யுஞ்சேர்த்து
மிகவு மூன்றுநா ளாறுவேளை
அடுத்துச் சாப்பிடு உப்புப்புளி
ஆகஏ ழாம்நாள் தலைமுழுகே. 260

குடல் வாதத் தைலம்

தலைதான் முழுகத் தைலமதைச்
சாற்றக் கேளு ருக்மானே
மலையா நல்லெண்ணெய் காற்படியும்
வகையாம் வேப்பண்ணெய் காற்படியும்
நிலையா மணக்கெண்ணெய் காற்படியும்
நேராய் வாங்கி வைத்தேதான்
கலையா மூன்று மொன்றாக்கிக்
கருத்தாய்ச் சட்டியிற் றானுமிடே. 261

சட்டி தன்னில் விட்டபின்பு
சரிபாய்க் கிளாச்சி யிலையோடு
விட்டுப் பின்பு பிரமியிலை
வேணும் வாத மடக்கியிலை
சிட்ட முடனே வகைக்குவகை
திடமாய்க் காற்படி சாறெடுத்து
மட்டம தான எண்ணெயுடன்
வகையாய் விட்டுப் பின்கேளே. 262

கேளே வசம்பு வெள்ளுள்ளி
கிருபையுடனே வகைக்குவகை
நாளே மூன்று விராகனிடை
நலமாய் வாங்கித் தானரைத்து
கோளே யொன்று மில்லாமற்
குறிப்பா யெண்ணெ யுடன்கரைத்து
வாளே தானும் அடுப்பேற்றி
வகையாய் மெழுகு பதங்காய்ச்சே. 263

காய்ச்சி யெடுத்துத் தைலமதை
கணக்காய்த் தேய்த்து முழுகிவர
ஆச்சி யுடனே குடல்வாதம்
அகன்று போகு மிதுபோல
மாட்சி யுடனே ஒருவாரம்
வகையாய் முழுகத் தீர்ந்துவிடும்
தாட்சி யில்லா ருக்மானே
சகலரு மறியச் சொன்னேனே. 264

சொன்ன வாதச் சொறிசூலை
சுகமாய்த் தானும் வருமாகிற்
சின்ன மான சொறியுடனே
தினவுந் தடிப்பு முண்டாகுங்
கன்ன லான சட்டியினிற்
கருணை யுடனே பதக்குநீர்
மின்ன லாகத் தான்விட்டு
மிகவும் வைத்துக் கொண்டேதான். 265

கொண்ட வுடனே கொடிவேலிவேர்
கூறாய்ப் பத்துப் பலம்போட்டு
பண்ட மான அடுப்பேற்றி
பரிவா யெட்டிலொன் றாய்க்காய்ச்சி
கண்ட படியாய்த் தான்நிறுத்துக்
கணக்காய் வேரைச் சட்டியிட்டு
விண்ட எள்ளெண்ணெ யொருபடியை
மிகவும் ஊற்றி யடுப்பேற்றே. 266

ஊற்றி யொருபலஞ் சீரகத்தை
உண்மை யுடனே தானரைத்து
நேர்த்தி யுடன்காற் பலவெண்ணெய்
நேரா யிரண்டுந் தான்போட்டு
மாத்தில்'லாம லடுப்பெரித்து
வாகாய் மெழுகு பதத்திறக்கி
தேத்தி முழுகிக் கொண்டுவர
தினவுஞ் சொறிசூலை போய்விடுமே. 267

மண்டைச்சூலைக்கு

போமே மண்டைச் சூலைவரிற்
புண்ணும் புழுவுந் தலையில்வரும்
தாமே அதற்கு மருந்துதனைச்
சாற்றக் கேளும் ருக்மானே
நாமே சூரிய காந்தியிலை
நன்றா யொருபிடி கொண்டுவந்து
வாமே பாரு சட்டிதனில்
வகையாய்த் தண்ணீர் படிவாரே. 268

வார்த்துச் சட்டிமேற் குச்சிவைத்து
வகையா யிலையை அதிற்பரப்பி
சேர்த்து மறுசட்டி தான்மூடி
திறமாய்த் தீயுந் தானெரித்து
பார்த்து அவித்த வுடனே நீ
பதமாப் பார்த்து யிலையெடுத்துக்
கார்த்துத் தலைதனிற் றான்பரப்பிக்
கணமாய்த் துணிபோட்டுக் கட்டிவிடே. 269

கட்டிடு யிதுபோல் மூன்றுநாள்
கணக்காய்ச் செய்யச் சூலையுடன்
திட்ட முடனே புண்புழுவுந்
திறமா யோடிப் பறந்துவிடும்
சட்ட முடனே நாலாநாள்
தக்க படியே காய்ந்துவிடும்
இட்ட முடனே சுகமாகும்
இதுதான் நல்ல முறையாமே. 270

பைத்திய தோஷத்திற்கு

நல்ல பைத்திய தோஷத்திற்கு
நலமாய்க் கியாழந் தான்கேளும்
மெல்லுஞ் சுக்கு யேலமல்லி
விராக னிடைரெண்டு தானிடித்து
வல்ல பேய்ப்புடல் நிலவேம்பு
மாவீர்க் குடனேவேப் பீர்க்கின்னுஞ்
செல்லுங் கோவைத் தண்டுடனே
சீந்தித் தண்டுந் தான்வாங்கே. 271

வாங்கி யரைப்பலந் தானெடுத்து
வகையா யாவுஞ் சட்டியிட்டுப்
பாங்கா யிரண்டு படிதண்ணீர்
பண்பாய் விட்டு அடுப்பேற்றி
தாங்கி யெரித்து எட்டிலொன்றாய்த்
தானே காய்ச்சி வடித்துக்கொண்டு
ஓங்கி யொருநாளைக் கிருகேளே
ஒழுங்காய்ச் சாப்பிட்டு வருவாயே. 272

வருவா யிப்படி மூன்றேநாள்
வகையாய்ச் சாப்பிடு பத்தியங்கேள்
திருவா யுப்பு புளிதள்ளி
சேரும் புகையிலை தான்தள்ளி
கருவா யெட்டுநாள்வரையும்
கருத்தாய்ப் பத்தியந் தானிருக்கத்
தருவாய் வந்த பைத்தியமுந்
தக்க தோஷமுந் தீர்ந்திடுமே. 273

தீரு மின்ன மொருகலிக்கந்
திறமாய்ச் சொல்லக் கேளுமினி
காரு மூக்கரைச் சாரணையைக்
கசக்கித் துளிசார் பிழிந்துகொண்டு
பாரும் எள்ளெண்ணை யிரண்டுதுளி
பரிவாய்க் கையிற் றான்விட்டு
தேரு மிரண்டு கையாலே
தீப்போற் றேய்த்து வழிப்பாயே. 274

வழித்துச் சிப்பியில் வைத்துடனே
வகையா யிரண்டு கண்களையும்
விழிக்கச் சொல்லிக் கலிக்கமதை
விரும்பி நன்றாய்ப் போட்டிடிலோ
பழிக்க வந்திடும் பைத்தியமும்
பாங்கா யோடிப் பறந்துவிடுஞ்
சுழிவா யின்னொரு முறைதன்னைச்
சொல்லிடக் கேளும் ருக்மானே. 275

உருக்க முடனே கேசரிப்பால்
உடனே காற்படி நீகறந்து
பெருக்க முடனே உண்டபின்பு
பேறாய் நாள்மூன் றுங்கொடுத்து
சுருக்க மாகப் புளிமட்டுஞ்
சுகமாய்த் தள்ளி யிருந்துவிடில்
கிருக்கும் பைத்திய தோஷமெலாங்
கெட்டு ஓடிப் பறந்திடுமே. 276

ஓடும் போது தோஷித்தால்
உடனே சுக்கு தேசாவரம்
நாடி வகைக்கரைக் காற்பலமும்
நலமா யாடா தோடையுடன்
தேடி யொருபிடி கொண்டுவந்து
திறமாய்த் தண்ணீர் யிரண்டுபடி
சாடும் படியே நீவிட்டு
சரியாய்க் காற்படி யாய்க்காச்சே. 277

காய்ச்சி யெடுத்த தண்ணீரைக்
கருத்தா யரைக்காற் படிவீதம்
பாய்ச்சி யுடனே கொடுத்துவிடு
பண்பாய் வரட்சியுந் தாகமும்போம்
தாட்சி யிலாமல் மூன்றுநாள்
தக்க படியாய்க் கொடுத்துவர
மாட்சிமை யான தோஷமும்போம்
மலங்கட்டிக் கொண் டாற்கேளே. 278

பேதிக்கு

கேளே வயிறு கழியுதற்கு
கிருபை யுடனே மருந்துசொல்வேன்
நாளே இஞ்சி கொண்டுவந்து
நலமா யரைத்துச் சார்வாங்கி
கோளா றொன்று மில்லாமல்
குறிப்பாய்ச் சாற்றை முறித்துடனே
வாளே கடுகு ரோகணியும்
வாங்கரை விராக னிடைதானே. 279

தானே சாறு விட்டரைத்துச்
சாற்றிற் தக்கபடி கரைத்துக்
கானே கொடுக்க வயிறுபோங்
கணக்காய்ப் போனபின் நிறுத்துதற்கு
கோனே வசம்பு நீவாங்கிக்
குறிப்பாய்ச் சுட்டுச் சாம்பலொடு
தேனும் விட்டுத் தான்குழைத்து
திறமா யுள்ளே கொடுத்துவிடே. 280

கொடுத்து விடவே நின்றுவிடும்
சூரா யிரண்டு நாள்வரைக்கும்
அடுத்துப் பழங்காய் கனிகளையும்
அன்பாய்க் கொடுக்க லாகாது
விடுத்துப் பத்திய மாகவேதான்
வேண்டி யிருந்தாற் றோஷம் விடும்
தடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால்
தான்வயிற் றுப்போக்கு குண்டாமே. 281

உண்டாம் சூட்டிற் கழிச்சல்வரில்
உடனே மருந்து தான்கேளு
கண்டு புளித்த மோர்வாங்கி
கருத்தா எலுமிச்சம் பழம்பிழிந்து
விண்ட வுடன்ரெண்டுந் தான்கலக்கி
மிகவே குடித்திடக் கழிச்சல்நிற்கும்
கொண்ட போது நில்லாட்டாற்
குணமாய் மருந்து தான்கேளே. 282

மருந்தாஞ் சீரகம் பலம்வாங்கி
வகையா யிருபடி நீர்விட்டு
பொருந்த யெட்டொன் றாய்க்காய்ச்சி
புகழா யிருத்து இருவேளை
அருந்தக் கொடுத்துப் புள்ளிதள்ளி
அப்பா மூன்று நாளிதுபோல்
சுருந்தச் செய்தாற் கழிச்சலுந்தான்
சொல்லா தோடிப் பறந்திடுமே. 283

மூலச்சூட்டுக்கு

பறக்கு மூலச் சூட்டுக்குப்
பாங்காய் மருந்து தான்கேளு
சிறக்கு மிருப்புச் சட்டிதனைத்
திறமாய்க் காய வைத்தேதான்
சுறக்கும் ஆவின் வெண்ணெய்தனைச்
சுகமாய் விளாங்காய் போலுருட்டி
நிறக்கும் படியே சட்டியிட்டு
நேரா யுருக் விட்டுவிடே. 284

விட்டுச் சீரகம் பலமரைக்கால்
மிகவே போட்டு வேகவிட்டு
பட்டுப் போலே காய்ச்சியபாற்
பார்த்து அதிலே கொட்டிவிடு
திட்ட முடனே மூன்றையுமே
சேர்த்துப் பின்பு வெண்ணெயிட்டுச்
சட்ட பனங்கற் கண்மையுமே
தானதிற் போட்டுக் கலக்கியுண்ணே. 285

கலக்கி இவ்வித மொருவாரங்
கணக்காய்ச் சாப்பிடு சரியாகத்
துலக்க மாக அனுதினமுஞ்
சுகமாய்ச் சாப்பிட்டு வருவாயேல்
நலக்க மான அசதிகளும்
நல்ல மூலச் சூடுகளும்
சலக்க மில்லா தோடிவிடும்
சரியாய்ச் செய்து தான்பாரே. 286

மூல வாயுவுக்கு

பாரே மூல வாயுவரிற்
பரிவாய்க் கழிச்சலுஞ் சீயும்விழுஞ்
சீரே எச்ச வாகயரியும்
திறமாய் மலத்துடன் ரெத்தம்விழும்
நேரே கடுப்பு அதிகம்வரும்
நிறையாய்க் கால்கை யசதிதரும்
சேரே யிதற்கு மருந்துதனைச்
சிறப்பாய்ச் சொல்வேன் ருக்மானே. 287

சொல்லுஞ் சேனைக் கிழங்குதனைச்
சுகமாய் வாங்கி வாட்டியேதான்
நல்ல தோலை யுரித்துவிட்டு
நலமா யருந்திட மூலமும்போம்
வல்ல கோழி முட்டைதனை
மறவாய் ஜலத்திற் றானவித்து
வெல்ல மாக மூன்றேநாள்
திறமா யுண்டிடப் போய்விடுமே. 288

வாந்தி பேதிக்கு

சேர்க்கும் வாந்தி பேதிவரிற்
றிறமாய் மருந்து தனைக்கேளும்
ஏற்கை யுடனே வசம்புமஞ்சள்
இதமாய்ச் சுக்கு மிளகுடனே
பார்க்கக் கொஞ்சங் கொஞ்சமதாய்
பரிவா யரைத்து யெடுத்துவைத்துத்
தீர்க்க முடனே பழந்துணியிற்
றிறமா யொருபக்கந் தான்தடவே. 289

தடவிப் பின்பு மறுபக்கந்
தானே சுண்ணந் தான்தடவி
அடமாய்த் துணியைக் காயவைத்து
அன்பா யெடுத்துச் சீட்டியிட்டு
நடமாய் வசம்பொன்று மஞ்சளொன்றும்
நறுக்கி அத்துடன் தான்போட்டு
திடமாய் வறுத்துக் கறுக்கிவிட்டு
சேரு மிரண்டு படிநீரே. 290

இரண்டு படிநீர் தானுமிட்டு
இதமாய்க் காற்படி யாய்க்காய்ச்சி
திரண்ட காற்படி தண்ணீரை
தீர்க்க முடனே தானருந்த
முரண்டாய் வந்த பேதியுந்தான்
முடிவாய் நின்று போய்விடும்
சுரண்டா மிந்தக் கியாழமதைச்
சுகமாய்க் கொடுக்க நலம்பாரே. 291

அரோசிகத்துக்கு

நலமா யரோசிக மானாக்கால்
நல்ல கியாழ மதுகேளு
தளமாஞ் சுக்கு மிளகுமல்லி
தக்க மதுரமு நெற்பொறியும்
பெலமாய் மாவீர்க்கும் வேப்பீர்க்கும்
பேய்ப்புடல் நெல்லி யீர்க்குந்தான்
கலமாம் வில்வ யிலையுடனே
கணக்காய்ப் பிடிபிடி கொண்டுவந்தே. 292

கொண்டு வந்த சரக்கையெலாங்
கூரா யொருசட்டி தன்னிலிட்டு
பண்டு யிருபடி நீருவிட்டு
பதமாய் நாலத்தொன் றாய்காய்ச்சி
விண்டொரு நாளைக் கிருவேளை
மிகவு மரைக்காற் படிகுடிக்க
மண்டும் பித்தம ரோசிகமும்
மருண்டு வெருண்டு ஓடிடுமே. 293

வாய்ச் சூலைக்கு

ஓடி விட்டவாய்ச்சூலை
உண்ணும் வாயில் வந்தாக்கால்
நாடி வாயு முதடுகளும்
நாவும் புண்ணாய் வெந்துவிடும்
தேடிஞ் சீரகம் சீனிதனைச்
சேர்த்து மென்று விழுங்கிவிட்டு
காடி நல்லெண்ணெய் சீரகமுங்
கடிதாய்ப் பிசைந்து தின்றுவிடே. 294

தின்ற வுடனே சூலையும்போம்
சிரங்கு வந்தால் மருந்தினைக்கேள்
நின்றரி தாரம் காற்பலமும்
நேரா மனோசிலை காற்பலமும்
சென்ற சேங்கொட்டை விராகனொன்றும்
சீராய் நிம்பெண்ணெய் காற்படியும்
அன்றே நான்குந் தான்சேர்த்து
அடைவாய்க் காய்ச்சும் பொழுதேதான்
என்ற சேங்கொட்டை வெடித்தவுடன்
இறக்கிச் சேங்கொட்டை எடுத்துவிடே. 295

இறக்கித் தண்ணீ ரதனில்நல்ல
இதமாய் வடித்த எண்ணெய்தனைச்
சிறக்க நின்றிடு மெண்ணெய்தனைச்
சிரங்கிற் பூசித் தேய்த்துக்கொண்டு
நிறக்க அரப்பு தனைத்தேய்த்து
நேராய்க் குளிக்கச் சிரங்குகள்போம்
பறக்க ஒருவா ரந்தானும்
பாங்கா யிதுபோற் செய்துவிடே. 296

வெள்ளை வீழ்தலுக்கு

செய்து நீரில் வெள்ளைவிழிற்
சிறப்பா மருந்து தனைக்கேளு
உய்து கண்டு வணங்கியிலை
உயர்வாய்ச் சாறு தான்வாங்கி
எய்த சீரக மும்போட்டு
இயல்பா யூற வைத்தெடுத்து
நெய்து. இரண்டுஞ் சேர்த்தெடுத்து
நேராய் மூன்று நாளருந்தே. 297

அருந்தி வந்தாற் புளியுப்பை
அகற்றி வருவாய் நின்றுவிடுந்
திருந்தப் பைத்தியங் குறைந்தாக்காற்
றீறும் வியாதியைக் கேளாது
செருந்து பார்த்துச் செய்துவந்தால்
சீராம் நாளும் வாராது
பரிந்து யிந்த மருந்துகளைப்
பாங்கா யருந்திக் குணம்பாரே. 298

மேகவூறலுக்கு

பாரே மேக வூறல்வரிற்
பண்பாய் மருந்து தனைக்கேளு
நேரே சங்க வேரதனை
நேர்ந்தா வின்பால் விட்டரைத்து
சீரே பத்து நாள்வரையுஞ்
சிறப்பா யுண்டு வந்திடவே
வேரே மேலிற் காசுகள்போல்
விழுந்த மேகம் போய்விடுமே. 299

மேகம் போய்விடும் பத்தியத்தை
விரும்பிக் கேளும் ருக்மானே
தாக மாக மருந்துதனை
சாப்பிட்ட பின்பு மறுபத்யஞ்
சோக மாக யிருபதுநாள்
சுகமாய் பத்திய முங்காத்தால்
வேக மாக வூறலறும்
விரும்பிய வுனக்குச் சொன்னேனே 300

இளைப்புக்கு மருந்து

சொன்ன இளைப்பு வருமானாற்
சுவாச மூச்சுட னிருமல்வரும்
நன்னு மதற்கு மருந்துதனை
நாட்ட முடனே சொல்லுகிறேன்
என்னும் விஷ்ணு கிரந்தியுடன்
இயல்பாங் கோராங் கிழங்குடனே
மின்னுஞ் சட்டி தன்னிலிட்டு
மிகவே தண்ணீர் படிவாரே. 301

படிநீர் வார்த்து அடுப்பேற்றிப்
பாங்காய்க் காற்படி யாகவைத்து
குடிநீர் போலத் தேனைவிட்டுக்
குறிப்பாய்த் தானு மருந்திவர
பிடிநீ ரிளைப்புங் குறைந்துவிடும்
பேராய்ப் பத்திய மதைக்கேளு
அடிநீ ராகிய புளிதன்னை
அகற்று மிளைப்புப் போய்விடுமே. 302

விக்கலுக்கு மருந்து

விடுமே விக்கல் வந்தாக் கால்
வேண்டு மருந்தை நீகேளு
நடுவே பழைய செருப்புதனில்
நன்றாய்ப் பிஞ்ச தோலெடுத்து
மடுவே தீயி லேகருக்கி
வைத்துச் சாம்ப லாயெடுத்து
கொடுவே தேனிற் றான்குழப்பிக்
கொடுக்க விக்கலுடன் போமே. 303

போமே யின்னு மொருவிதத்தை
புகலக் கேளும் ருக்மானே
தாமே நண்டுக் குழிநீரைத்
தயவா யெடுத்துக் கொண்டுவந்து
நாமே நல்ல குடிநீராய்
நலமாய் வைத்துக் கொடுப்பீரேல்
ஆமே விக்கல் தான்போகும்
அடைவாய்ச் சொன்னே னறிவாயே. 304

பெரும்பாட்டுக்கு மருந்து

அறிவாய் பெரும்பா டானாக்கால்
அதற்கு மருந்து வகைகேளு
தெரிவாய் பழம்பட்டு த்துணியைச்
சீராய்க் கருக்கிக் கருக்கெடுத்து
உரிய நெற்பொறி யைக்கருக்கி
உண்மையுடனே தான்கலந்து
பெரிதா யிரண்டுந் தூள்செய்து
பேணித்தின்னக் கொடுப்பாயே. 305

கொடுநீ மூன்று நாள்தானுங்
குணமா யொன்பான் வேளைமட்டும்
எடுநீ இந்தத் தூளதனை
இதமாய்ச் சாப்பிட டடைவுடனே
நடுநீ காரமதைத் தள்ள
நல்ல பெரும்பா டோடிவிடும்
விடுநீ வயித்தியமுந் நூறும்
விரும்பி சொன்னேன் முற்றுமிதே. 306

யாகோபு வைத்தியம் 300
முற்றிற்று

உ

கடவுள் துணை

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

செந்தூர சூஸ்திரம் 150

பருதிமதி உலகத்தைப் படைத்தோன்தன்னைப்
பதம்பணிந்து அனுதினமும் நினைவிற்பூண்டு
கருதியே தொழுதிறஞ்சி எந்நாளுந்தான்
கருணைவைத்து எழுணூறுபாடிப்பின்பு
வருதிட்ட இரண்டுமுன் னூறுபாடி
வகையாகக் குறுக்கிநூற் றைம்பதாக
உருதியாய் வகாரமெல்லா மிந்தநூலில்
உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் யாகோப்தானே.1

சொல்லிவிட்டேன் கல்லுப்பு வெடியுப்போடு
சொற்பெரிய ரசபற்பந் தாரபற்பம்
வல்லமையாய்ப் பாஷாண பற்பமோடு
வகைவகையாய்க் கட்டுகின்ற மார்க்கத்தோடு
கல்லான களங்குகொண்டு செந்தூரங்கள்
கருத்துவைத்துக் கைபாக வரிசையாக
புல்லறிவாற் செய்பாகம் பாடினேன்பார்
போக்கான வாதிகளே புகலக்கேளே. 2

புகலுகிறேன் உப்பைவிட்டோர்க் கில்லைவாதம்
பொன்செய்ய அறியார்கள் பிரட்டுவாதி
நகலுகிறோம் கண்டருக்குள் செம்பெடுக்கார்
நாட்டியே மதிபழுக்க நலமுமில்லை
வகலுகிறேன் வாய்ப்பேச்சா லொன்றுமில்லை
வலுவில்லை சுடுவார்கள் வணக்கங்கெட்டோர்
பகலுவார் பொன்கொடுத்தாற் செம்பாய்ச்செய்வார்
புத்தியில்லார்க் கொன்றுமில்லை பாரிலோர்க்கே. 3

பாரிலே யிருக்கவென்றால் வாதம்வேணும்
பகரரிய செடமெடுத்த அதிட்டத்தாலே
தூரிலே நீரேறில் மரமுமாகும்
தூரில்லா மரமாமோ தூக்கிப்பாரு
வேரிலே நீரிருந்தால் காயுங்காய்க்கும்
வில்லிருந்தால் அம்புதைக்கும் விதத்தைப்போல
ஆரிலே தூரிருந்தால் தெப்பம்வேணும்
அதைப்போலே உற்றுப்பா ரறிவாற்றானே. 4

உப்புக்கட்டு

அறிவாக உப்பொன்று சொல்லக்கேளு
ஆடலாம் வெகுகோடி வித்தைதானும்
குறியாக வாதமாம் பொன்னுமாகும்
குணக்கேடு சொன்னாக்கால் வாதமாமோ
சரியாக உப்பதுவுங் கட்டினாக்கால்
சாட்சியாஞ் சரக்கையெல்லாங் கட்டுங்கட்டும்
பரியாகு மென்றுசொன்ன யாகோபென்பேர்
பார்த்துணர்ந்து பாரிலேதான் பகர்ந்திட்டேனே. 5

பகர்ந்திட்டேன் கல்லுப்புப் படியுமொன்று
பழச்சாறு தன்னைவிட்டு ஒட்டக்காய்ச்சி
வகர்ந்திட்டேன் மேனிச்சார் விட்டரைத்து
வகையாகப் புடமொன்று போட்டெடுத்து
நகர்ந்திட்டு அருக்கன்பால் விட்டரைத்து
நல்லவில்லை பண்ணியபின் கதிரில்வைத்து
பிகர்ந்திட்டுக் காய்ந்தபின்பு புடமுமிட்டால்
பேரான கசிவிறந்து பிலக்கும்பாரே. 6

பிலக்குகின்ற உப்பெடுத்துச் சேருமொன்று
பின்புதான் ரசபதங்கந் தன்னைத்தானும்
நலக்குவேன் வெண்கருவா லரைத்துஉண்டை
நலமாகப் பலமொன்று கதிரில்வைத்து
கலக்குமே ரசவுண்டை மேலேதானும்
கனிவாகக் கசிவத்த உப்பைக்கட்டும்
துலக்குமே கரியோட்டில் வாட்டிக்கட்டு
துப்புரவாய்க் கட்டியபின் சொல்லக்கேளே. 7

சொல்லவே கரியுப்புப் படியும்நாலு
சுருதிபெற ஒட்டிரெட்டி மேனிச்சாறு
நல்லாக இடித்துபிழிந் துப்பில்விட்டு
நலமாகக் காய்ச்சிடவே தெரிப்படங்கும்
மெல்ல அதைப் புடமிட்டு எடுத்துக்கொண்டு
மேன்மைபெறச் சட்டிரெண்டும் உரசிச்சேர்த்து
பொல்லாத உண்டைதனை நடுவேவைத்துப்
பின்புதான் மேனியுப்பை அதிலேபோடே. 8

போட்டுநீ யமுழ்த்தியுமே மேலேசட்டி
போக்கோடே மூடியபின் சொல்லக்கேளு
நாட்டுமே சீலைசெய்து வலுவாகத்தான்
நல்சட்டி அடுப்பேத்தி எரிப்புச்சாமம்
நாட்டுமே உள்ளிருந்த பாதரசந்தானும்
நயமாகக் கவசித்த உப்புக்குள்ளே
விட்டுமே சொக்கியது குருவுமாகும்
வேதாந்தக் குருவாக விளக்கும்பாரே. 9

விளங்கவே சொக்காமல் மேலேயேறி
வீற்றிருந்தால் பழையபடி முன்சொன்னாப்போல்
தளங்கவே உண்டைசெய்து கவசங்கட்டி
தாட்டிகமாய்ப் பழையபடி யெரித்துத்தீரு
துளங்கவே யிப்படிக்கு உயரேறாமல்
தொகுத்துமே உப்பிலே சொக்கிச்சென்றால்
புளங்கவே யெடுத்துவைத்துப் பூசைபண்ணு
புலம்பாதே யென்றுசொன்னார் யாகோப்தானே. 10

என்றுமே செம்புதனிற் பத்துக்கொன்று
இதமாகக் கொடுத்தூதி வெள்ளியெட்டில்
நன்றாக ரெண்டுயிடு ஏமமாகும்
நலமாகக் கொடுத்துருக்கிப், பார்க்கும்போது
அன்றுமே மாத்தர்று காணும்நல்ல
அடைவாகப் பார்த்துமே செலவுசெய்து
தின்றுமே யின்னமொன்று சொல்லக்கேளு
திடமாக யாகோபு சொன்னவாறே. 11

சொன்னதொரு முன்னெரித்த உப்புதன்னைச்
சுகமாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
நன்னயமாய்ப் பொன்போலே கண்விட்டாடும்
நலமாகக் கரியதுவுங் குடியாதப்பா
இன்னமொன்று சொல்லுகிறேன் குகையிலிட்டு
இதமாக நாலுருக்கிப் பின்புதானும்
தன்னைப்போல் தங்கமது ஒன்றுதாக்கு
தங்கம்நின்று உருகையிலே நாகந்தானே. 12

நாகந்தா னிடைபாரு தங்கத்துக்கு
நலமான களங்காகும் நாட்டுள்ளோர்க்கு
பாகமா யெடுத்துநீ சொல்லக்கேளு
பாய்ச்சிடுநீ ரவிநூற்றில் ஒன்றுதானும்
வேகமாய்ப் பழுத்துவிடும் எடுத்துவித்து
விதமாக உண்டுடுத்திப் பின்புகேளு
நாகமாங் களங்கத்தைச் சேர்த்துருக்க
நன்மையாய்க் கூறுகிறேன் யாகோப்தானே. 13

தன்மையாய்க் களங்கதுவுங் களஞ்சிஒன்று
தடையறவே ரசபதங்கம் இடையுங்காலாம்
உண்மையாய்க் கெந்தியது பலமுங்காலாம்
உறுதிபெறக் கல்வத்தி லிட்டுக்கேளு
வெண்மையா மேனிச்சாறு தன்னாலாட்டி
வித்தகனே காசியென்ற மேருக்கேற்றி
பண்மையாய்ப் பன்னிரண்டு சாமந்தானும்
பதியயெரி பின்புதான் பகரக்கேளே. 14

பகரவே முருக்கம்பூப் போலேகாணும்
பகரப்போ காதெடுத்துப் பூசைபண்ணி
உகமையில்லாச் செந்தூரந் தன்னையப்பா
உரவான செம்பதிலே நூற்றுக்கொன்றீய்
பகரவே செந்தூரம் ஒன்றுபோட்டால்
பழமைபெற இருபத்து ஐந்துமாத்து
உகரவே வெள்ளியுந்தா னிடையேசேர்த்து
உருதிபெறத் துணிந்துநீ உண்றிடாயே. 15

உண்ணவே பணவிடைதான் தேனிலுண்ண
உகாந்தவரை தேகமது கற்றூணாகும்
கண்டுநீ மேனியது செவ்வலரிபோலாம்
கருத்துடனே புளியுப்பு எண்ணெய்தள்ளு
பண்டுமே மண்டலந்தான் உண்டுதேரு
பதினாறு வருஷம்போற் பாலையாகும்
கொண்டுமே யாகோபு கூறினார்பார்
குவலயத்து வாதிக்குக் கூறொணாதே. 16

கூறொண்ணா உப்பைமுந்திக் கட்டியாடும்
குவலயத்தில் பாஷாண மெல்லாங்கட்டும்
வாறொண்ணா இரதமது ஏவல்கேட்கும்
வழியோடே உப்பைமுந்தித் தெரிப்படக்கி
பாறொண்ணாப் பார்தனிலே புடமுமிட்டு
பகர்ந்த வெடி யுப்பையிட்டுப் பரிந்துநல்லாய்ச்
சீறொண்ணாக் கைபாக வரிசையாகச்
செய்திட்டார் செய்தியுமாந் தெரிந்துபாரே. 17

வெள்ளி வித்தை

தெளிந்துபா ரின்னமொரு வெள்ளிவித்தை
செப்புகிறேன் மார்க்கமதைத் திறமாய்ப்பாரு
வளிந்துமே வெள்ளையென்ற பாஷாணந்தான்
வகையாக ஒருசேரு வாங்கிவந்து
களிந்துமே வெள்ளாவி தன்னிலிட்டுக்
கசடகற்றிப் பின்னுமொரு கருத்தைக்கேளு
தளிந்துமே ரசபதங்கம் சேருவொன்று
தப்பாம லிடைசமனாய்ச் சேர்த்துக்கொள்ளே. 18

சேர்த்துமே வெண்கருவாற் சாமமாட்டித்
திறமாக உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
பார்த்துமே முன்னுப்புச் சேரிரண்டு
பதிலாக அருக்கன்பால் தன்னாலாட்டி
கார்த்திடவே உண்டைமேல் கவசங்கட்டிக்
கதிரில்வைத்து அனலில்காய்ச்ச யிருகிப்போகும்
வார்த்திடவே யிருசட்டி உரசிச்சேர்த்து
வகையாக நடுவிலிடு உண்டைதானே. 19

உண்டைவைத்து முன்னுப்புச் சுத்தும்கொட்டி
உறுதியா யமுழ்த்திநீ அடுப்பிலேற்றி
குண்டாக முச்சாம மெரித்துவாங்கிக்
குளிரவைத்துச் சட்டிதனைத் திறந்துபார்க்க
முண்டையைப்போ லேறியேதா னிருக்கும்பாரு
முடிவாகச் சுரண்டியே கல்வமிட்டு
கண்டிடாய் கள்ளியென்ற பாலைவிட்டுக்
கணக்காக யிருசாம மரைத்துக்கொள்ளே. 20

அரைத்ததனைக் கதிரில்வைத்து உண்டைசெய்து
அடைவாக முன்னுண்டை கல்வத்திட்டு
இரைத்து அரை முன்பாலாற் சாமம்நாலு
இதமாக அரைத்துவுண்டை மேலேகட்டி
வரைத்துமே முன்சட்டி நடுவில்வைத்து
வளமாக முன்னுப்பு மரைத்துமூடி
கரைத்துமே முன்போலே மூடிநீயும்
கடுமையா யெரித்திடவே பாகமாமே. 21

அண்டச் சுண்ணம்

பாகமா யிப்படிக்கு ஏறஏற
பதிவாக யெரித்துமே பகரக்கேளு
பாகமாய் உப்பினுட கவசத்தோடே
பாங்காகச் சேர்த்துமே ஊடுருவிப்போகும்
தாகமா யெடுத்துமே சாற்றக்கேளு
தடையறவே வெள்ளீயம் சேருஒன்று
மோகமாய் முட்டையென்ற தோடுமொன்று
முடிவாக உவர்மண்ணு முடியவாங்கே. 22

வாங்கியே சுண்ணாம்பு யிடையேசேர்த்து
வகையாகப் பாணியது ரட்டியிட்டு
தாங்கியே குமுரஎரி ஓடுதானும்
அதனிலுள்ள எண்ணெய்யது கழறும்நன்றாய்
பாங்கியே அம்மியிட்டு வெண்கருவாலாட்டிப்
பரிவாக வில்லைசெய்து கதிரில்வைத்து
தூங்கியே திரியாமல் பெரும்புடமாய்ப்போடு
தொல்லுலகிற் கடுஞ்சுண்ண மாகும்பாரே. 23

ஆகுமென்ற அண்டோடு சுண்ணந்தன்னை
அம்மியிட்டுச் சீனத்தைப் பொரித்துநீற்றி
வாகுபெற அண்டமென்ற சுண்ணம்ரெண்டு
வகையான சீனத்தின் பொரியுமொன்று
தாகுபெறச் சேர்த்திட்டு அண்டநீரால்
தனையரைத்து உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
பாகுபெறப் பெரியபுடம் போட்டுவாங்கில்
பதிவான சுண்ணாம்பு பாரிலோர்க்கே. 24

பாரிலே அண்டமென்ற சுண்ணந்தன்னைப்
பதிவாகப் பொடியாக்கிச் சொல்லக்கேளு
வாரியே ஒருகுகையில் வெள்ளீயத்தை
வளமாக இட்டுமே மேலேதானும்
காரியமாய் வெள்ளீயம் மேலேயிட்டுக்
கதியாக அதின்மேலே அண்டச்சுண்ணம்
சாரியா யிட்டுமே உலையில்வைத்துத்
தாட்டிகமாய்க் குகைசிவக்க ஊதிப்போடே. 25

கொட்டிவிடு மருந்துகளை முன்போல்வைத்துக்
குணமாகக் குகைகருக்க ஊதிப்போடு
தீட்டியே யிப்படிக்கு ஊதஊத
திறமான நீரெல்லாம் யீயம்கக்கும்
மூட்டியே அதையெடுத்துத் தட்டிப்பார்க்க
மூவுலக மெச்சவுமே சத்தம்கேட்கும்
வட்டியே வெள்ளீயம் கட்டும்நன்றாய்
வண்மைபெற யாகோபு வழுத்தினாரே. 26

வழுத்திடவே வெள்ளீயம் சேருவொன்று
வகையாகக் குகையினிலே வைத்துருக்கி
தழுத்திட்ட உப்பினாற் கட்டுகின்ற
தடையற்ற வெள்ளைப்பா ஷாணந்தன்னை
கழுத்துமே விராகனிடை யொன்றுபோடு
காரணமாய் வெள்ளீயம் தோசைபோலே
இழுத்திட்டு உருகியுமே வெள்ளியாகும்
இன்பமா யாகோபு யியம்புவேனே. 27

சொன்னதொரு கைபாக வரிசையாலே
சுருதிபெறும் யாகோபு செய்ததுண்டு
நன்னயமாய்ச் செய்தவர்கள் பிழைத்துப்போனார்
நான்கண்டு உலகத்தோர்க் காகச்சொன்னேன்
இன்னபடி யிந்நூலைக் கண்டுதேறி
இதமாகச் செய்தாக்காற் பலனுமாகும்
முன்னமே பாஷாணங் கட்டிநன்றாய்
முடிந்தமட்டும் வெள்ளிமுறை பார்த்திடாயே. 28

பார்த்திடவே இன்னமொரு வெள்ளிவித்தை
பாடுகிறேன் புத்தியுள்ள அன்பருக்கு
ஏத்திடவே சொல்லுகிறேன் பாகமாக
எவனையா வாதிமார் செய்குவார்கள்
நாத்திடவே யிப்பாக மறிந்துகொள்ளு
நாட்டிலே சொல்லாதே நல்லதாகும்
சாத்திவிட்டே னிந்நூலிற் பாகந்தன்னைச்
சரியாகப் பார்த்திட்டா லெல்லாமாமே. 29

ஆமேதான் வெள்ளீயம் பலமும்பத்து
அந்திடைக்கு அரபொடியும் பலமும்பத்து
தாமேதான் இதுவிரண்டுங் குகையிலிட்டுத்
தப்பாம லுருக்கிடவே வெள்ளிபோலே
காமேதான் நாடியே கல்வத்திட்டு
கணக்காக யதையுடைத்துக் கொடியோன்றன்னை
பாமேதான் பாதிசேர்த்து அரைத்துக்கொள்ளு
பண்பாக வெண்கருவா லரைத்துஆட்டே. 30

ஆட்டியே புடம்நாலு தேர்ந்தபின்பு
அதையெடுத்துச் சாரம்நாலி லொன்றுதாக்கு
சாட்டியே குகையிலிட்டு உருக்கித்தீரு
சரியாக அயக்கசடு நீங்கிநன்றாய்
மூட்டியே தும்பைப்பூப் போலாம்வெள்ளை
முறையாக யிருபத்தி ஐந்துமாத்து
தூட்டிடவே வெள்ளியிடை செம்புசேர்த்துத்
துருசாக உருக்கிடவுஞ் சொல்லக்கேளே. 31

சொல்லவே முன்சொன்ன பாஷாணத்தைச்
சிறப்பாக விராகனிடை ஒன்றுயீய்ந்தால்
வெல்லவே வெள்ளியது பத்துமாத்து
மேதினியோர் தன்னிடத்திற் சொல்லொணாது
கல்லவே சீவனத்துக் கிடமேபண்ணு
கதிபெறவே உண்டுடுத்து கண்டிப்பாக
நல்லாக யிருந்துவிடு யாகோபுசொன்னார்
நலமாக யின்னமொரு வரிசைகேளே. 32

வரிசையா யின்னமொரு வெள்ளிவேலை
வளமாகச் சொல்லுகிறே னன்புள்ளோர்க்கு
தரிசையாய் வெள்ளீயம் பலமோபத்து
தக்கதொரு அரபொடியும் பலமோபத்து
கரிசையா யிரண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
கலமான கல்வத்திற் கொட்டிக்கொண்டு
புரிசையாய் வெள்ளையென்ற பாஷாணத்தைப்
போக்காகப் பலம்பத்து கூட்டிக்கொள்ளே. 33

இட்டுமே பாணியினால் நேகஆட்டி
இதமாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
நட்டுமே வெங்கலம்போ லுருகிநிற்கும்
நலமாக எடுத்துமே கல்வத்திட்டு
பட்டுமே காரீயம் பாதிசேர்த்துப்
பதிவாகப் பாணியினா லரைத்துவில்லை
செட்டுமே செய்துநீ கதிரில்வைத்துச்
செயமாகப் பெரியபுடம் போட்டுக்கொள்ளே. 34

கொள்ளவே குகையிலிட்டுக் குமுறவூது
குகையாறி யெடுத்துப்பார் வெள்ளிபோலே
துள்ளவே ஓசையுடன் நிறத்தைக்கேளு
துடியாகத் தும்பைப்பூப் போலேயிருக்கும்
எள்ளவே வெள்ளீய மிடைநேர் சேர்ந்து
ஏகமாய்ச் சேர்த்துருக்க வெள்ளியாகும்
உள்ளபடி சொன்னதிந்த வெள்ளிதன்னை
ஒழுங்காக வித்துமே உண்டிடாயே. 35

உண்டிடவே வெள்ளிவித்தை யுண்மையாகும்
ஒருவருடன் சேராமற் செய்துகொள்ளு
கண்டிடவே ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
காரியமாய்க் கவர்கோடி வேதைகோடி
உண்டிடவே இந்தவிதஞ் சீவனங்கள்
முக்கியமாய்ச் செய்துவிடச் சொன்னேன்பாரு
அண்டிடவே சீவனங்கள் பண்ணிக்கொண்டு
ஆண்டவனைத் துதிசெய்து அடுத்துவாழே. 36

அடுத்துமே வாழ்வதற்கு மக்காநாட்டில்
அடைவான நபிமார்கள் மெத்தஉண்டு
தொடுத்துமே அவர்களுக்கு வாதமுண்டு
துடியான வெள்ளியுட வேலைசெய்வார்
குடுத்துமே விற்றிடுவார் செலவுசெய்வார்
குணமான மனக்காரர் அவரைக்கண்டு
தடுத்துமே பணிந்துகொண்டு நானேகற்றேன்
தடையில்லா யாகோபு சாதித்தேனே. 37

சாதித்தேன் வடமொழியைக் கண்டுதேறி
சமத்தாக இசுலாத்தி லிருந்துகொண்டு
வாதித்தேன் பிசுமில்லா ரகிமானென்று
வளமாகத் தோத்திரமது மிகவும்பண்ணி
போதித்தேன் பதினெட்டுச் சித்தரோடே
புகலரிய அவர்களுடன் மலையிலேறி
கீர்த்திபெற யாகோபு யென்றபேரு
கீர்த்திபெற வசனித்தேன் குணமிதாமே. 38

குணமான வெள்ளிக்கு வெள்ளிவித்து
கூடினாலப் பெண்ணுக்குப் பெண்ணேவித்து
பணமான பொன்னுக்குப் பொன்னேவித்து
பதிவான சத்துக்கு துருசுவித்து
வனமான மாத்துக்கு மாத்தேவித்து
வடிவான மனதுக்கு ஆத்மாவித்து
தனமாக இவ்வாறே யெல்லாமாச்சு
தாட்டிகமா யாகோபு தான்சொன்னாரே. 39

சொன்னதொரு வெள்ளிவித்தை ஒன்றுகேளு
சுருக்காகும் இவ்வேதை சூட்சமாகும்
நன்னயமாய் முன்சொன்ன பாஷாணத்தை
நலமாகப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு
கன்னயாமாய்க் கள்ளிப்பால் தன்னாலட்டிக்
கடுமைபெற யிருசாம மாட்டிப்பின்பு
வன்னயமாய் வெள்ளீயம் பலமுமொன்று
வகையாகத் தகடடித்து மருவிக்கேளே. 40

மருவவுமே முன்னரைத்த குருவுதன்னை
மார்க்கமாய் வெள்ளீயத் தகட்டிற்பூசி
கருகவுமே புடமதவு மூன்றுபோடு
கன்னியமாய்த் தவளநிற மாகும்வெட்டை
அருகிலே வெள்ளீயங் கட்டிப்போகும்
அதையெடுத்துக் குருவாக வைத்துக்கொண்டு
தருகியே குகையிலிட்டு வெள்ளிதன்னை
தாக்கிடுநீ யிடைக்கிடைதான் வெற்றியாமே. 41

வெற்றியா யிருக்கவென்றால் வெள்ளிவித்தை
விரும்பியே வைத்துப்பார் விளக்கமாகும்
முத்திதருங் கியானம்வரும் யோகமார்க்கம்.
முனிவருக்கும் பெலனாகும். முத்தியுண்டு
சித்திதரும் உண்டுடுத்தி யிருக்கலாகும்
சீர்பெருகி யெல்லாமுஞ் சித்தியாகும்
சத்தியமா யுழைத்தாக்கால் யெல்லாமுண்டு
சாத்தியமா யாகோபு தான்சொன்னாரே. 42

சொன்னதொரு சேருழுது செம்படித்துச்
சொற்பெரிய விரைதெளித்து முள்ளத்துநிற்க
நன்னயமா யதைப்பிரித்து நட்டுப்பின்னே
நன்றாகக் களையெடுத்துப் பலன்கொடுக்க
உன்னதமா யொன்றுக்குப் பத்துநெல்லு
உன்னிதமாய்ப் பலன்கொடுத்த மார்க்கம்போல
இன்னிலத்தில் ரசவாதம் நெல்லுப்போலாம்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. 43

இதமான வாதங்கள் வேணுமென்றால்
இதமான கல்லுப்பை யிருக்கிக்கட்டி
பதமான பாஷாணச் சரக்குமேலே
பதமாகக் கட்டியே யெரித்துக்கொள்ளு
இதமாக இப்படிக்குக் கட்டுமாகும்
எனையாண்ட நபிமாரின் ஆட்டுஆட்டு
சாதகமாய் நான்கண்டு தேறினேன்பார்
சத்தியமா யாகோபு சொன்னேன்பாரே. 44

சொன்னதொரு வெள்ளிதனைச் சிறக்கச்செய்து
சொகுசாக வித்துமே செலவுசெய்து
இன்னிலத்தில் எழுநூறு முடியப்பார்த்து
இதமாக இரண்டுமுன் னூறைப்பார்த்து
கன்னமதா யிந்தநூல் தின்னைப்பார்த்து
கருத்துறவே ஒருவேலை கண்டுகொண்டால்
பன்னகமா யறிவாக யிருப்பீர்கண்டாய்
பாக்கியவான் யாகோபு பரிவாய்த்தானே. 45

உப்புக்கட்டு

பதிவாக உப்பொன்று பகரக்கேளு
பண்பாக யிந்தஉப்பு பெலனைப்பார்த்தால்
மதிவான கல்லுப்புச் சேருநாலு
மயலான் எலுமிச்சம் பழச்சாறுதன்னை
வதிவாகச் சேர்பத்து விட்டுஆட்டி
வடிவாகக் காய்ச்சிடவே கரைந்துநிற்கும்
கதிவேறு யில்லாமல் சீஸ்தன்னைக்
கட்டியாய் வடிகட்டி ஒட்டக்காய்ச்சே. 46

காய்ச்சியே கல்வமிட்டு அரைத்துக்கொள்ளு
கனிவாக நாயுருவி சமூலம்வாங்கி
பாய்ச்சிஉர லதனிலிட்டு யிடித்துச்சாறு
பதிவாக வாங்கியே சீஷாதன்னில்
வாச்சியே அடைத்திட்டு முன்னுப்பைக்கல்வம்
வகையாக இட்டுயிந்த நீராலாட்டி
தாச்சியே வருத்திட்டு கலயத்திட்டு
தடையுறவே புடம்போட்டு எடுத்துக்கொள்ளே. 47

எடுத்துமே கல்வமிட்டு முன்னீராலே
யிழுத்தரைத்து உமிநெருப்பில் வகுத்துப்போடு
அடுத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போடு யிப்படிக்கு
தடுத்துமே பேசாதே சுண்ணமாகும்
தடையறவே போட்டுமே தன்மையாக
விடுத்துமே கடுஞ்சுண்ண மாகுமட்டும்
விதமாகப் போட்டிடவே செயமுமாமே. 48

செயமான கல்லுப்புச் சுண்ணமானால்
செல்வம்வரும் உபரசங்கள் சுண்ணமாகும்
மயமான சரக்கெல்லாம் கெஞ்சிக்கட்டும்
மாட்டுகிற கருவுண்டு உப்பினாலே
நயமாகும் வங்கமது சுண்ணமாகும்
நானிலத்திற் சொன்னதொரு நேர்மைதன்னை
பயமாக உப்பைமுந்திக் கட்டிப்பாரு
பதிவாக எல்லாமுஞ் சித்தியாமே. 49

வங்கச்செந்தூரம்

சித்தியது வாகவென்றால் கருவங்கத்தைச்
சீர்பெறவே சேரதுவும் கல்வத்திட்டு
நத்தியே நீநன்றாய் தட்டுக்கொண்டு
நயமான சுண்ணத்தால் நய்யஆட்டி
முத்தியாங் கல்லுப்புச் சுண்ணம்நேரே
முடிவாகப் போட்டுமே முச்சாமந்தான்
பத்தியாய் ஆட்டிவில்லை கதிரில்வைத்துப்
பதிவான யாகோபு பகர்ந்தவாரே. 50

பகரவே பெரும்புடமாய்ப் போட்டுவாங்கிப்
பதிவாக எடுத்துமே கல்வத்திட்டு
நகரவே முன்சாற்றால் நேகஆட்டி
நலமாக வில்லைதட்டிப் புடமும்போட்டு
தகரவே யிப்படிக்குப் புடமும்பத்து
தாட்டிகமாய் முன்போலே புடமுமிட்டு
வகரவே வங்கமது செந்தூரமாமே
வகையாகக் கல்வமிட்டு மார்க்கங்கேளே. 51

மார்க்கமாய் வங்கமென்ற செந்தூரத்தில்
மலக்கமாய் நாலில்ஒன்று வீரங்கூட்டி
ஆர்க்கமாய் முன்னீரா லறைத்துவில்லை
அடைவாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டால்
ஏர்க்கவே வங்கமென்ற ராசாதானும்
ஏத்தியே வைத்ததெல்லா மாண்டுபோகும்
கார்க்கவே கல்வமிட்டு மடைந்தைதன்னைக்
காரணமாய்ப் பாதிநீ சேர்த்துக்கொண்டு
வார்க்கவே முன்னீரால் சாமமாட்டி
வடிவாக முன்கவசம் வலுக்கக்கேளே. 52

வலுக்கவே சுண்ணாம்பு உப்புநேரே
வகையாகக் கட்டிக்கதிர் காயவைத்து
தளுக்கவே சேவலென்ற புடமுமிட்டால்
தான்வங்கஞ் சிவந்துமே குருவுமாகும்
அழுத்தமா யிருக்குமந்தச் செந்தூரத்தை
அடைவான ரவியுருக்கி நூற்றுக்கொன்று
பழுத்துமே தங்கமது வாகும்நேர்மை
பதிவான யாகோபு சொன்னவாரே. 53

சொன்னதொரு வங்கச்செந் தூரம்வைத்துச்
சொற்பெரிய நபிமார்கள் மக்காதன்னில்
நன்மையா யுண்டுடுத்தி வேதந்தன்னை
நாட்டியே படித்திடுவார் நல்மார்க்கம்
சின்னமில் லாமல்வெகு புத்தியுள்ளோர்
சீமானா யிருந்திடுவார் சிறியோரெல்லாம்
முன்னமே வெகுநாளாயவ் விடமேபோனேன்
முத்திக்கு வழிசொன்னேன் யாகோப்நானே. 54

நானென்ற நபிமார்கள் முன்னேதானும்
நாட்டிலே பேர்கொடுத்து வெகுநாள்தொண்டு
வானென்று மனமகிழ்ந்து ஒருநாட்சொன்னார்
வகையான கல்லுப்பின் வேதைமார்க்கம்
கானென்ற தாம்புரத்தின் வேதைபோட்ட
கதையதனை யின்னூலிற் கருதிச்சொன்னேன்
பாரென்ற கர்த்தாவின் நோக்கத்தாலே
பகர்ந்திடடேன் யாகோபு பரிவாய்த்தானே. 55

பாறையுப்புக்கட்டு

பரிவாகப் பாறையுப்புப் பலமும்பத்து
பாக்குப்போ லுடைத்துமே சொல்லக்கேளு
நரியான சுக்கான்கல் ஊதிநீயும்
நலமான பெருஞ்சட்டி பாதியிட்டு
பிரியான பாறையுப்பை யதின்மேல்வைத்துப்
பின்புகற் சுண்ணமதை அதின்மேற்கொட்டி
துரிதமா யமுழ்த்தியபின் அடுப்பிலேத்தித்
தொக்களரி பனிரெண்டு சாமந்தானே. 56

எரித்தனை யெடுத்துப்பார் தெரிப்படங்கி
இதமாக நீர்வத்தி யிருக்கும்பாரு
விரிந்துமே யெடுத்ததனைக் கல்வத்திட்டு
வகையாக எருக்கம்பால் தன்னிலாட்டி
பரிந்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்துப்
பலமாக புடம்போடக் கசிவுமாகும்
நரிந்துமே வாதரசம் எழுநூறுதன்னில்
நாட்டினே னதின்செயலின் நுட்பக்கேளே. 57

கேளுமே லிங்கரசம் பலமும்பத்து
கெடியாகக் கல்வத்தி லிட்டுநீயும்
மாளவே அண்டவெள்ளைக் கருவாலட்டி
வளமாக உண்டைபண்ணி மேலேகேளு
தாளுமே முன்சொன்ன உப்புதன்னைத்
தாட்டிமையாய் மேலேநீ கவசங்கட்டி
தூளுமே வலுவாக ஒட்டிரெட்டித்
துடியாகக் கட்டியே கதிரில்வையே. 58

வைத்துமே கல்லுப்புப் படியும்ரெண்டு
வளமாக மேனிச்சாறு தன்னாலாட்டி
கைத்துமே புடமிரண்டு போட்டுக்கொள்ளு
கனமாகக் கட்டிவிடும் பின்புகேளு
பைத்துமே யிரண்டுசட்டி உரசிச்சேர்த்து
பதிவான உண்டைதனை நடுவேவைத்து
கத்துமே மேனிச்சாறு புடமும்நல்ல
கனிவாக உப்புமேல் சுத்திப்போடே. 59

போட்டுமே அமுழ்த்திநன்றாய் மேலேசட்டி
பொருக்கவே முடித்துமண் சீலைசெய்து
காட்டுமே அடுப்புதனி லேத்திநல்ல
கனிவாகப் பனிரெண்டு சாமந்தானும்
வாட்டுமே யெரிவன்னிப் பதங்கந்தானும்
வளமான கவசத்திற் புகுந்துகொள்ளும்
நாட்டுமே மேற்சட்டி மல்லாத்திட்டு
நலமாகப் பார்த்திடத்தும் பைப்பூப்போலே. 60

தும்பையென்ற பூப்போலே உயரநிற்கும்
துடியாகச் சுரண்டியதைக் கல்வத்திட்டு
வம்பாக வெண்கருவால் நேகஆட்டி
வளமாகக் கட்டிக்கதிர் காயவைத்து
நம்பிநபி அடிபோற்றிக் கவசங்கட்டி
நாட்டியே கதிர்தனிலே காயவைத்து
தம்மாய் முன்போலே சட்டியிட்டுத்
தடையறவே முன்போலே சாற்றக்கேளே. 61

சாற்றவே முன்போலே எரித்துவாங்கிச்
சரியாக ஏறஏற அப்படியேசெய்து
பாற்றவே வன்னியது கவந்தன்னிற்
பதிந்துமே சொக்கியது யிறந்துபோகும்
நாற்றவே சொக்கிநின்ற உப்புத்தன்னை
நாடியே கல்வமிட்டு எருக்கன்பாலால்
போற்றவே வில்லைதட்டிக் காயவைத்துப்
பேரான யாகோபு பேசினாரே. 62

பேசினார் ரவியுருக்கிப் பத்துக்கொன்று
புகலரிய உப்பதனைக் கொடுத்துப்பாரு
வாசியாம் பொன்போலே ரவியுமாகும்
வாடிவரக் காயிதனை வெள்ளியெட்டில்
காசியா யிரண்டிட்டு ஊதிப்போடு
கருணைபெற மாத்தாறு கண்டுகொள்ளு
தோசியாய்த் திரியாதே உன்னைப்பாரு
தொல்லுலகில் ரசவாதந் தோயுந்தானே. 63

தோயுமே யிதைவிற்றுச் செலவுசெய்து
துடியாக முன்னுப்பை யுருக்கிப்பாரு
தாயுமே உருகியது பொன்னாம்பாரு
தாட்டிகமாய் மணிபண்ணி யைந்துதன்னில்
காயுமே கயிறுகட்டிச் செபமேபண்ணு
கணக்காக உருச்செபிக்கக் கர்த்தர்தானும்
ஞாயமாய் வருவார்கள் வாதங்கேளு
நாட்டிலே சொல்லாதே நயந்துகேளே. 64

நயமான உப்புமணி நாலுக்குத்தான்
நலமாக ஒன்றுகொடு தங்கந்தானே
பயந்துமே போகாதே தங்கம்நேரே
பாய்ச்சிவிடு நாகத்தைப் பரியுமாகும்
துயந்துபா ரிரவியதும் நூற்றுக்கொன்று
தூக்கிவிடு மாத்துமது பத்துமாகும்
வயந்துமே விற்றுயிதைச் செலவுசெய்ய
வழியோடே யாகோபு சொன்னார்பாரே. 65

சொன்னதொரு வங்கத்தைச் செந்தூரிக்கச்
சொற்பெரிய களங்கமது பலமும்பத்து
நன்னயமாய்க் கெந்தியது பலமும்ஒன்று
நாட்டிய களங்கதுவும் பலமும்ஒன்று
கன்னயமாய் வெற்றிலையின் சாறினாலே
கணக்காகச் சேர்த்துமே கல்வமிட்டு
வன்னயமா யரைத்திடவே சாயம்ஒன்று
வகையாகக் குப்பிதனி லடைத்திடாயே. 66

அடைத்துமே மேருதனி லேற்றிக்கேளு
அடைவாக எரிப்பதுபன் னிரண்டுசாமம்
நடைத்துமே எடுத்துப்பார் செந்தூரந்தான்
நலமான நவலோகந் தனில்செந்தூரம்
கடைத்துமே அணைத்திட்டுப் பார்க்கும்போது
கனகமது பத்தாகுங் கண்டுகொள்ளு
தடைத்துமே செந்தூரம் உள்ளேகொள்ள
தடையறவே யாகோபு சொன்னவாரே. 67

சொன்னதொரு செந்தூரந் தேனிலுண்ண
சுகம்பெற்ற ஞானிக்குஞ் சாவோயில்லை
நன்னயமாய் மாந்தளிர்போல் மேனியாகும்
நலமாகத் தேகமது கல்தூணாகும்
இன்னிலத்தில் நோயெல்லாம் தவிடுபொடியாகும்
இருந்துரைக்க யாகோபு சொன்னதாலே
கன்னல்போல் காரியத்தைச் சொல்லிவிட்டேன்
கர்த்தாவி னருளினாற் கண்டுகொள்ளே. 68

கண்டுகொள்ளு உப்பைமுந்திக் கட்டியாடு
கனகமது இருந்துவிடும் கணக்குமாகும்
வண்டுமே உப்பில்லாக் கட்டதெல்லாம்
மடைக்கட்டு கட்டாமோ வடிவுமில்லை
துண்டுமே மூலிகையா லுப்பைக்கட்டில்
தொல்லுலகில் ரசவாத மெல்லாங்கட்டும்
பண்டுமே பழங்கதைபோற் பேசினாக்கால்
பதிவில்லை யென்றுயா கோப்சொன்னாரே. 69

பலமாகும் உப்பைமுந்தித் தெரிப்படக்கு
பதிவாகக் கட்டிநின்றால் பலனுமாகும்
பிலமாகுஞ் சூடமது சொக்கியாடும்
பின்புபார் வேதையது பிரட்டுமில்லை
கலனாக யிப்படியே கட்டாவிட்டால்
கழிப்பான செயமில்லை கண்டுபாரு
தலமாக ஒருருவாய் நின்றுகொண்டு
தாஷ்டிகமாய் யாகோபு தான்சொன்னாரே. 70

தாளகச் செந்தூரம்

சொன்னதொரு தாளகச்செந் தூரங்கேளு
சொற்பெரிய கைபாக வரிசையாக
நன்னயமாய் அப்பிரகம் பலந்தான்பத்து
நாட்டியதை நவநீதம் பண்ணிநீயும்
இன்னிலத்திற் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
இருசாம மரைத்துவில்லை காயவைத்து
கன்னிகராய் புடம்போட்டு எடுத்துக்கல்வம்
கணக்காகப் பழச்சாற்றால் சாமமாட்டே. 71

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் பெரியபுடம் போட்டுநீயும்
தாட்டிகமா யிப்படிக்குப் பத்துப்போட்டுத்
தானெடுக்கச் செந்தூர மாகும்பாரு
காட்டியே கல்வமிட்டு பின்புகேளு
காரணமாய்த் தாளகமும் பலமும்ஒன்று
வாட்டுமே ரசபதங்கம் பலமும்ஒன்று
வகையாக ரண்டுமே கல்வத்திட்டு
ஈட்டுமே ரசபதங்கந் தாளகத்தை
இதமாகக் கல்வமிட்டு வெண்கருவாலாட்டே. 72

ஆட்டியே உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
அன்பாக முன்போட்ட அப்பிரகத்தை
நாட்டியே எருக்கம்பால் தன்னாலாட்டி
நலமாக முன்னுண்டை மேலேதானும்
வாட்டுமே கவசமிட்டு வலுவாகத்தான்
வடிவாகக் கதிரில்வைத்து காய்ந்தபின்பு
வீட்டிமையா யதன்பின்பு செய்யுமார்க்கம்
வீரியமா யாகோபு விளம்பினாரே. 73

வகையென்ன கல்லுப்புப் படியும்ஒன்று
வன்மையாய் மேனிச்சாறு தன்னாலட்டி
துகையாகப் புடம்போட்டு எடுத்துநீயும்
துப்புரவா யிருசட்டி உரசிச்சேர்த்து
தகையாகச் சட்டிநடு உண்டைவைத்து
தடையறவே சுத்திலுமே மேனியுப்பை
பகையாக யிட்டுமே அமுழ்த்திப்பின்பு
பதிவாக மேற்சட்டி மூடிப்போடே. 74

மூடியே சீலைமண் வலுவாய்ச்செய்து
முக்கியமா யடுப்பேற்றித் தீயைமுட்டி
வாடியே பன்னிரண்டு சாமத்தீயை
வகையாக எடுத்துப்பார் உயரயேறும்
காடியே வழுத்து யெடு கல்வத்திட்டுக்
கருணைபெற வெண்கருவா லரைத்துஉண்டை
பாடியே கதிரில்வைத்துப் பின்புகேளு
பரிவாக அடியில்நின்ற கவசந்தானே. 75

கவசமதை நீக்கியே பொற்றலைபின்
கரிப்பான்றன் சாற்றினா லரைத்தெடுத்து
பவசமுடன் கவசமது செய்துபின்பு
பக்குவமாய்ப் பனிரெண்டு சாமந்தானும்
அவசியமாய்ப் போட்டெரித்து கவசம்நீக்கி
அன்புடனே பழச்சாற்றா லரைத்துநீயும்
எவருக்குந் தெரியாமற் கவசஞ்செய்து
இனிமையுட னெரிக்கச்செந் தூரமாமே. 76

பார்க்கவே செந்தூரம் பவளம்போலாம்
பரிவான செந்தூரந் தனையெடுத்து
ஏர்க்கவே ரவிநூற்றி லொன்றுதாக்க
இயலான செந்தூர மகிமையாலே
தாக்கவே தங்கமது பார்க்கொண்ணாது
தடையில்லா ஏமத்தை வித்துநீயும்
கார்க்கவே உண்டுடுத்தி யிருநீயென்று
கருணைபெற யாகோபு கருச்சொன்னேனே. 77

கருத்தாகப் பணவிடைதான் தேனிலுண்ணக்
கனகநிறம் போலவே மேனியாகும்
உருத்தாகுந் தேகமது அலரிபோலாம்
உற்றதொரு நோயெல்லா மோடிப்போகும்
ஒருமையாய்ச் செந்தூரம் உண்ணமெத்த
உறுதியாய் வலுவாகுந் தேகந்தானும்
வருதியா யிருந்துவிடும் நாகந்தானும்
வரிசைபெற யாகோபு வழுத்தினாரே. 78

வரிசையாய்ப் பெண்தள்ளி மண்டலமேயுண்ண
வளமாக யிருநீயும் பரிதிமதியளவும்
கரிசையாய் வேதையது அதிகமாகும்
கருத்தாகக் கைபாக மறிந்துசெய்து
பரிசையா யாகோபு நபியுஞ்சொன்னேன்
பாரிலுள்ளோ ரிதையறிந்து செய்துகொண்டு
உருசையா யுண்டுடுத்தி யிருநீயென்று
உத்தமதற்குச் சொன்னதிது உறுதிதானே. 79

உறுதியாய் வாதத்தை உற்றுப்பாரு
உண்மையாய்க் கைபாக வரிசைகண்டு
கருதியதோர் மார்க்கமதாம் பலனுமாகும்
கணக்காக நம்பினாற் பலனுமுண்டு
வருதியாய்ப் பாகத்தைக் கண்டுதேறி
வகையாகச் சரக்குமுதல் வரிசைகண்டு
பருதிமதி யுள்ளளவும் வாழலாகும்
பண்பரிந்து செய்துவிடச் சொன்னேன்பாரே. 80

சொன்ன தொரு எழுநூற்றில் வாதஞ்சொன்னேன்
சிறப்பாக இதிலேதான் திறந்துசொன்னேன்
நன்னயமாய் முன்னூரில் வரிசைபார்த்து
நாடியே செய்திட்டா லேமமாகும்
கன்னல்போ லிருக்கின்ற நூலைப்பார்த்து
கருத்துவைத்தாற் பலனாகுங் கண்டுதேரு
பின்னமில் லாமலுமே பிழைக்கச்சொன்னேன்
பிறட்டாகச் சொல்லவில்லை பிலனுமாமே. 81

பிலனாக யிந்நூலைப் பார்த்துத்தேறிப்
பிறட்டாகச் செய்யாமற் சரியாய்ச்செய்வாய்
அலனாகத் தெரியாமற் பாகம்விட்டு
அலுத்துமே செய்துநீ யலையவேண்டாம்
கலனாக நூல்பார்த்து வாதம்பார்த்துக்
காட்டும்வழி தெரிந்திடவே நூலைப்பாரு
சலனாக மருந்துசுட்டு கெட்டுக்கெட்டு
சாஸ்திரங்கள் பொய்யென்றால் சவுங்கலாமே. 82

சவுங்கலாய்த் திரியாமல் நூலைப்பாரு
தர்க்கமிட்டுத் திரியாதே வாய்பேசாதே
நவுங்கலாய் வாதமது கண்டாயானால்
நாட்டிலோர்க் குறையாதே மவுனங்கொள்வாய்
கவுங்கலாய் முரடனாய்ச் சொன்னாயாகில்
கடிந்துமே உயிரைத்தான் போக்குவார்கள்
தவுங்கலா யிருந்துமே செய்துபாரு
தாஷ்டீகமா ஞானிக்குச் சொன்னவாரே. 83

சொன்னதொரு அறுநூறில் வாதம்பொய்யோ
சுருதிமுடிவான முந்நூறு பொய்யோ
நன்னயமா யெழுநூற்றில் வாதம்பொய்யோ
நலமான பஞ்சமித்ரம் களங்குபொய்யோ
தன்னகமாம் முந்நூர்செந் தூரம்பொய்யோ
சரியான யென்னூற்சூஸ் திரங்கள்பொய்யோ
கன்னல்போல் யாகோபு சொன்னநீதி
கணக்காகக் கைபாக வரிசைபாரே. 84

வரிசையாய்ச் செந்தூரந் தன்னைப்பார்த்து
வகையாகக் கைபாக வரிசையாக
நரிசையாய்ச் செய்துமே தேறிப்பாரு
நலமான நபிமார்கள் பாதம்போற்றி
உரிசையாய் நூல்வர்மங் கண்டுதேறி
ஒழுங்காகப் பாகமதைத் தெரிந்துகொண்டால்
தரிசையாய் நீடுழி காலம்வாழ்வாய்
தாஷ்டிகமாய் யாகோபு தன்மைதானே. 85

களங்குவகை

தன்மையா யொருகளங்கு சொல்லுவேன்கேள்
தக்கதொரு நபிமார்க ளாடும்ஆட்டு
உண்மையாய் சருகைபித்தளை பலமும்பத்து
உறுதிபெறப் பந்துபோ லுருட்டிச்சுத்தி
வண்மையாய்ப் பெரியுபுடம் போட்டெடுக்க
வளமான கரிபோலே தூளுமாகும்
புண்ணியமாய்க் கல்வத்தி லிட்டுநீயும்
பூரணமாய்க் கள்ளிப்பால் தன்னாலாட்டே. 86

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாக அஞ்சுடம் போட்டெடுக்க
நீட்டியே நாகத்தின் வாடைநீக்கி
நிலவரமா யிருக்குமது யெடுத்துப்பாரு
வாட்டியே வண்டிலது கொஞ்சமிட்டு
வகையாகக் குகையிலிட்டு உரக்கஊது
நாட்டியே செவ்வலரி போலேசெம்பு
நலமாக உருகுமது நாட்டங்கேளே. 87

நாட்டமென்ன சொல்லுகிறேன் தகடுதட்டி
நலமான கெந்தியைத்தான் அன்னத்தாலே
மூட்டவே அரைத்துயிடை செம்பிற்கட்டி
மூவுலக மெய்க்கவே நொறுங்கமட்டும்
காட்டியே புடமிட்டு எடுத்துப்பாரு
கரிபோலே தூளாகுங் கல்வமிட்டு
மாட்டவே பாதியிடு மிருதார்சிங்கி
மதிபெருக்கக் கல்வமிட்டு சாமம்நாலே. 88

சாமந்தான் நாலாக அன்னத்தாலே
சரியாக அரைத்துவில்லை கதிரில்வைத்து
நாமந்தான் புடமிட்டு எடுத்துப்பாரு
நலமான நிறமதுவு முருக்கம்பூப்போல்
வாமந்தா னிப்படிக்கு அஞ்சுயிட்டால்
வகையான செம்பதுதா னிறந்துபோகும்
தாமந்தா னொருக்குவெள்ளி தானுருக்கித்
தடையறவே செந்தூரம் ரெண்டுதாக்கே. 89

சொன்னதொரு நாகத்தின் செந்தூரத்தைச்
சொற்பெரிய தங்கத்தைக் குகையிலிட்டு
தன்மையா யுருக்கிமுன்னஞ் செந்தூரத்தைத்
தாட்டியா யிடைக்கிடையாய்ச் சேர்த்துப்பாரு
பின்னமது வில்லாமல் வாங்கிக்கொள்ளும்
பெருகவே தகட்டித்துப் பின்புகேளு
கன்னல்போல் தகட்டுக்கு முக்கால்கெந்தி
காரணமாம் வீரங்கால் கனிவாய்வாங்கே. 90

வாங்கியே கல்வமிட்டு அன்னத்தாலே
வகையாக அரைத்துநீ வழித்துநீயும்
பாங்கியே தகட்டின்மேற் கவசங்கட்டிப்
பத்தியாய் நொறுங்குமட்டும் புடத்தைப்போடு
காங்கியே பார்த்தாக்கால் கரித்தூளாகும்
தடையறவே யெடுத்துருக்க நாலிலொன்று
ஏங்கியே போகாதே தாரந்தன்னை
இதமாக ஆட்டுநீ அன்னத்தாலே. 91

ஆட்டியே புடம்போடு சிவந்துபோகும்
அருணநிறஞ் செவ்வரளிப் பூப்போற்றானும்
நாட்டிலே சொல்லாதே யிந்தப்போக்கை
நபிமார்கள் செய்ததிந்த வேதைமார்க்கம்
காட்டியே வெள்ளியெட்டில் ரெண்டுதாக்கு
கனமான தங்கமாங் கருதிப்பாரு
தேட்டிலே வாதமெலாம் நொடிக்குளாகும்
திடமான யாகோபு சொன்னவாரே. 92

சொன்னதொரு பணவிடைதான் தேனிலுண்ண
சொற்கதிர்போல் மேனியுமாஞ் சாவோயில்லை
நன்னயமாய் நோயெல்லாந் தவிடுபொடியாகும்
நாதாந்த நபிமார்க ளாடும்ஆட்டு
பின்னமில்லா விந்துவும் நன்றாகத்தான்
பெலமாக யிருக்குமது பலனாகத்தான்
கன்னல்போல் மேனியுமாங் காயசித்தி
கனிவாக யாகோபு கருதினாரே. 93

கருதியே எழுநூற்றில் பாகமெல்லாம்
காட்டவில்லை காட்டவில்லை யென்றுசொல்லி
வருதியாய் முந்நூறு செந்தூரத்தில்
வழிகாட்டி யின்னூலில் திறந்துவிட்டேன்
பருதியாய் நூற்றியைம் பதிலேசொன்னேன்
பதிவாக என்னூலை முற்றும்பார்த்தால்
உருதியாய்த் தோணுமது வெல்லாமாகும்
உண்மையா கோப்புரைத்தார் குணமாய்த்தானே. 94

குணமான நொறுக்குவெள்ளி முன்னேசொன்னேன்
குற்றமறக் கெந்திவழி சேர்ந்தபோது
வனமாகச் சிதறுமது கூடரைச்சேர்த்து
வகையாக அரைத்துபுடம் போட்டெடுத்து
தனமான தாளகத்தை நாலிலொன்று
தாட்டிகமாய்ச் சேர்த்தரைத்துப் புடமுமிட்டால்
கனமான வெள்ளிசெந் தூரமார்க்கம்
காரணமாய்க் கரியில்வைத்து உருக்கிடாயே. 95

உருக்கியே சாய்த்துப்பார் வெள்ளிதானும்
உறுதியா யெடுத்தபின்பு சொல்லக்கேளு
பருகிடவே எழுநூற்றில் சொன்னேன்செம்பு
பதிவாக எட்டுரெண்டு சேர்த்துக்கொள்ளு
உருக்கிடவே ஏமம்ரெண்டு சேர்த்துக்கொள்ளு
உறுதியாய் உருக்கிப்பார் மாத்துயெட்டு
முருக்கிடவே விற்றுநீ செலவுபண்ணி
மூவுலகு மெச்சும்நீ பண்ணித்தேரே. 96

பண்ணியே செந்தூரஞ் செய்துநீயும்
பதிவாக நவலோகம் பழுக்கப்பண்ணி
நண்ணவே காயசித்தி பண்ணிப்பின்பு
நலமாகப் பின்புநீ நாட்டம்பாரு
உண்ணியே ஒருவருடன் பேசாமற்றான்
ஒழுங்காக நபிமாரைத் தொழுதுபோற்றி
துண்ணியே அல்லாவைத் துதித்துநீயும்
துணையாகப் பக்தியால் தோய்ந்துநில்லே. 97

தோய்ந்துநீ யுலகத்தில் வேதைமார்க்கம்
சொல்லாதே நிழலைப்போல் காத்திருந்த
வாய்ந்திசைந்த வாதிக்கு உபதேசித்து
வகையாகச் சொல்லியே யிருந்துநீயும்
ஆய்ந்துமே காயசித்தி மிகுந்துபுண்ணி
அன்போடே இராஜாவின் ஆக்கினைக்கு
பாய்ந்துமே அடங்கிநீ யிருந்துகொண்டு
பதிவாக யாகோபு சொன்னார்பாரே. 98

சொன்னதொரு நூலினுட வர்மங்கண்டு
சொற்பெரிய கைபாக வரிசைபாரு
நன்னயமாய் நீகண்டு எடுத்துக்கொண்டால்
நலமான ராசயோ கத்தின்வாழ்வு
இன்னிலத்தி லிருக்கமட்டும் உண்டுதேரு
இதமாக நூலில்லா வாதம்பார்த்தால்
சொன்னமய மாகாது தோய்ந்துபாரு
தொல்லுலகில் யாகோபு சொன்னதாமே. 99

தானென்ற இந்நூலில் வாதம்பார்த்தால்
தாஷ்டிகமாய் யாகோபு சொன்னநீதி
வானென்ற வையகத்து வாதிமார்கள்
வகையாகக் கண்டுதான் பிடிப்பாரப்பா
கானென்ற கர்த்தாவைத் துதித்துநீயும்
கைமுறையை யறிந்துநீ கண்டுகொள்ளு
நானென்ற கைபாக வரிசைதப்பில்
நலமில்லை யென்றுசொன்னார் யாகோப்தானே. 100

சொன்னதொரு எழுநூற்றில் சத்துமார்க்கம்
சூட்சமாய்ச் செம்பெடுக்கச் சொன்னேன்பாரு
நன்னயம தாகவேயிந் நூலிற்றான்
நலமாகப் பாகமெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கன்னல்போற் துருசுடனே கெந்திசேர்த்துக்
கரும்பாக உருக்கிடவே செம்புமாகும்
இன்னிலத்திற் கொடியோனைச் சேருபின்பு
இதமாகத் தாளகத்தைச் சேருபின்பே. 101

சேர்க்கவே கெந்தீயம் தாரஈயம்
கெட்டியாய்ச் சிவந்துமே யிருக்கும்பாரு
பார்க்கவே செம்புதான் சிவந்துநிற்கும்
பதிவான யெட்டுரெண்டு அயத்தைச்சேர்த்து
ஏர்க்கவே அதையரைத்துப் புடமுமிட்டால்
இதமாக உருக்கிடவே செம்புமாகும்
கார்க்கவே கல்மசங்க ளகன்றுநிற்கும்
கனகமய மாகுமென்று கண்டுகொள்ளே. 102

கண்டுநீ பாகத்தைக் கைவிடாமற்
காரணமாய் ரசவாதங் கண்டுகொள்ளு
தொண்டுபெறும் தொல்லுலகிற் சொல்லிட்டாதே
துடியாகச் சொன்னாக்கால் தலையும்போகும்
பண்டுப்டும் எளியவர்போல் பதமாய்நில்லு
பாரித்தா லுனதுவுயிர் நிலையாதப்பா
வண்டுபோல் பகர்ந்திடுவீ ரென்றுதானும்
வண்மையா யாகோபு வசனித்தாரே. 103

களங்கு

வசனித்த எழுநூற்றில் சொன்னவாதம்
வகையாகச் சுருக்கத்தில் சொன்னேனப்பா
தசனித்துப் போகாமல் துருசுதன்னைச்
சாங்கமாய்ப் பலம்பத்து நிறுந்துக்கொண்டு
உசனித்த நாற்றமது துருசுரெட்டி
உத்தமமாம் வீரமது காலும்போட்டு
நசனித்த பழச்சாற்றில் நாலுசாமம்
நலமாக அரைத்துமெள்ள வில்லைமாட்டே. 104

மாட்டியே கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
வகையாக அதன்பேரிற் கவசங்கேளு
தாட்டியே கல்லுப்புச் சுண்ணம்நேராய்
தனையரைத்து வில்லைக்கு கவசங்கட்டி
தாட்டிகமாய்ப் புடமிட்டு எடுத்துப்பார்க்க
தன்மையாய் யாகோபு சொன்னநீதி
மூட்டியே கரிபோலத் தூளுமாகும்
முடியநீ யரைத்திடவே முறையைக்கேளே. 105

முறையாகச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
முதலான கெந்தியது செம்பினோடே
வறையாகச் சேர்ந்துதென்றால் கறுத்துப்போகும்
வண்மையாய் சிவக்கநீ விபரங்கேளு
நறையாத தாரமது பாதிசேர்த்து
நலமான அன்னத்தி னீராலாட்டு
கரையாக அரைத்துவில்லை கதிரில்வைத்துக்
கடிதாகப் புடம்போடச் செந்தூரமாமே. 106

செந்தூர மாச்சுதென்று மயங்கவேண்டாம்
செப்பமாய்ச் சுடர்க்கொடியோன் தன்னைச்சேர்த்து
பந்தூரம் அரைத்துவில்லை காயவைத்துப்
பதிவாகப் புடம்போடக் கசடுநீங்கும்
வெந்தூரம் எலுமிச்சம் பழத்தின்சாற்றில்
விதியாக ஊறவைத்துப் பொடியைத்தானும்
கந்தூரச் சிந்தூரம் எட்டிலொன்று
கனிவாகச் சேர்த்துநீ யரைத்திடாயே. 107

அரைத்துநீ பழச்சாற்றில் மைபோற்றானே
அடைவாக வில்லைதட்டி ரவியில்வைத்து
திரைத்துமே புடம்போட்ட வில்லைதன்னைத்
திண்ணமாய்க் கொட்டைப்பாக் களவுதானும்
துரைத்துமே கரியில்வைத்து உருக்கிப்பாரு
துரிதமாய்ச் சூரியன்போ லுதயமானால்
பரைத்துமே உருக்கியதை வெள்ளிதன்னில்
பதிவாகக் கொடுத்திடவே பழுக்கும்பாரே. 108

பழுக்கவே உருக்குமுகம் பாய்ச்சினாக்கால்
பதிவான வெங்காரஞ் சமனாய்சேர்த்து
உழுக்குமே முன்சாற்றி லரைத்துநீயும்
உற்றுமே போட்டிடவே கருத்துப்போகும்
வழுக்குமே உருக்கியதை ஊதிப்போடு
வகையாகப் பொன்போலே கண்விட்டாடும்
இழுக்குமே வாராது வெள்ளிதன்னில்
இதமாக யெடுத்திடயா கோப்சொன்னாரே. 109

சொன்னதொரு செம்பதனை யெடுத்துக்கொண்டு
துடியான வெள்ளியது எட்டில்ரெண்டு
நன்னயமாய்க் கொடுத்தூதித் தங்கம்ரெண்டு
நலமாகச் சேர்த்திடவே மாத்துஏழு
கன்னல்போ லாகுமடா நபிமார்சொன்னார்
கருணைவைத்து உலகத்தில் வாதிக்காக
இன்னிலத்திற் சொல்லிவிட்டேன் புத்திவாதம்
இசைந்தவர்க்கு ஆகுமடா உறுதிதானே. 110

உறுதிதான் யேதென்றால் சொல்லக்கேளு
உற்றுநின்ற எழுநூற்றில் சொன்னசெம்பு
அறுதியாய்ச் சொல்லிவிட்டே னதிலுமாகும்
அடைவாக யிந்தநூற் றைம்பதுக்குள்
மருதியாய்ச் செம்பெடுத்தா லெல்லாமாகும்
மனமறிந்து சுட்டாக்கால் வாதமாகும்
கருதியாய்ச் சுடாவிட்டால் தெரியாதப்பா
காரணமா யாகோபு நலஞ்சொன்னாரே. 111

சொன்னதொரு துருசுடனே கெந்திசேர்த்துந்
துணையில்லை சக்தியில்லை துரிதமில்லை
உண்ணதமா யதுசிவந்தால் சூடம்நேராம்
உரவாக்க செம்புவந்து திறக்கமேலாம்
இன்னிலத்தி லிந்நூல்போ லெந்நூலுமில்லை
இதமாகத் தோன்றுமிதில் சாரமெல்லாம்
கன்னல்போல் யாவுமே சேர்ந்தாலன்றோ
கனிவாக வெள்ளியெல்லாம் பழுக்கும்பாரே. 112

பழுத்துமே வெள்ளியது நிற்கும்போது
பதிவான தங்கமது சேராவிட்டால்
முழுத்துமே பழுக்காது சேர்த்துத்தங்கம்
முனையாகும் வித்துமே செலவுசெய்வாய்
இழுத்துமிப் படிச்செய்தும் மட்டம்ஆகில்
இசைவாகத் தப்பிற்று பழுக்காதப்பா
முழுத்தேங்காய் நாயுருட்டும் வாறுபோல
மூலத்தைக் கண்டாக்கால் எல்லாமாமே. 113

மூலத்தைக் கண்டோர்கள் மக்காநாட்டில்
முனிவாக நபிமார்கள் மெத்தவுண்டு
சீலத்தைக் கண்டுமே வாதஞ்செய்து
சிறியோரா யிருந்துமே பெரியோராகி
காலத்தைப் போக்கியே நபிமாரானார்
கருத்தாக நீயிருந்து நாட்டிலேவீண்
காலத்தைக் கழியாதே யென்றுதானுங்
கருத்துடனே தாட்டிகன்யா கோப்சொன்னாரே. 114

சொன்னதொரு நூல்தனிலே மர்மங்கண்டு
சொற்பெரிய பெரியோர்கள் நுணுக்கம்கண்டு
நன்னயமாய்க் களங்குகளின் வரிசைகண்டு
நாடியதோர் செம்பெடுக்கு முறைகள்கண்டு
இந்நிலத்தில் மதிதனிலே கொடுக்கும்நேர்மை
இதமான தங்கத்தைச் சேர்க்குநேர்மை
கன்னல்போ லூதியே யெடுக்கும்பாகங்
கண்டாக்கால் வாதியென்று கருதலாமே. 115

கருதியே சத்துடைய மர்மங்கண்டு
கனமாகச் சுடர்க்கொடியோன் தன்னைப்பார்த்து
வருதியே தாளகத்தின் நேர்மைகண்டு
வளமான துகையறிந்து அயத்தகட்டை
உருதிபெற புடத்தினுட மார்க்கங்கண்டு
உளவாகச் சேர்த்திட்டு ஊதிப்பார்த்தால்
கருதியே செய்தபடி யெல்லாமாகும்
கர்த்தர்யா கோபுசொன்னார் நலமாய்த்தானே. 116

நலமான களங்குசத் துருவுங்கண்டு
நாடியே பூத்துவரும் நேர்மைபார்த்து
பலமாகச் சேர்த்தரைத்துப் புடத்தைப்போட்டு
பதியறவே உருக்கியெடு செம்பேயாகும்
வளமான செம்பதுவை மதியதெட்டில்
வடிவாக யிரண்டுசேர் தங்கம்ரெண்டு
பிலமாகச் சேர்த்துருக்கப் பொன்னுமாகும்
பிசகாது புடத்துக்கு யிறங்கும்பாரே. 117

இறங்கவே செம்பதுவுங் கருப்பேயானால்
இஸைவாக வெங்காரம் பாதிசேர்த்து
வரங்கவே சேர்த்தரைத்துப் புடமொன்றிட்டால்
வகையாக அயக்கசடு மாறிப்போகும்
குரங்குபோ லலையாமல் நூலைப்பாரு
குறிப்புவைத்துச் சோதித்தாற் பலனுமாகும்
கரங்குசா திக்கவகை யில்லாட்டால்
கடிதான பலனில்லை கண்டுபாரே. 118

சத்து வகை

கண்டுபார் சத்துக்கள் சொல்லக்கேளு
கனிவான சுடர்க்கொடியே னில்லாவிட்டால்
தொண்டுபார் கெந்தியுட யீயந்தானும்
சுகமாகப் பிரியாது பயனோயில்லை
பண்டுதான் தாளகஞ்சே ராமற்போனால்
பதிவான கெந்தீயம் பிரிந்திடாது
உண்டுபார் உன்னுடலை மேலேயேத்தும்
உற்றுப்பார் யாகோபு உறுதியாமே. 119

உறுதியாய்க் களங்கோடு செந்தூரங்கள்
உண்மையாய் யிந்நூலிற் சொன்னாற்போல
மறுதியாய்ப் பார்த்திட்டால் தங்கமாகும்
மகத்தான நபிமார்கள் ஆடுமாட்டு
சருதியாய்க் கைபாக வரிசைதப்பில்
சத்துமே பலனுமில்லை சித்தியில்லை
தருதியாய்த் திரியாதே யென்றுசொன்னார்
தாஷ்டிகவான் யகோபு தன்மைதானே. 120

தன்மையாய் முந்நூறு எழுநூறிற்றான்
தாட்டிகமாய்ச் சொன்னதென்ன தன்மையாக
நன்மையாய்ச் சுருக்கத்தை உற்றுப்பார்த்து
நலமாக யிரண்டுமுந்நூற் தன்னைப்பார்த்து
உண்மையாய்ப் புடமிட்டால் தெரியுமப்பா
ஊக்கமுடன் செய்கையிலே தப்பிற்றானால்
வண்மையாய் மூன்றுமுறை வைத்துப்பாரு
வடிவான குருவாகும் வளமைபாரே. 121

பாரேநீ மக்காவின் தேசந்தன்னில்
பாங்கான மனிதர்சிலர் வாதஞ்செய்து
காரேநீ நபிமாரைப் போலிருப்பார்
கடிதான தென்பக்கம் கீழ்பக்கத்தோர்
நாரேநீ நூல்போற்கை பாகங்கண்டு
நலமாக நம்பியே செய்யமாட்டார்
ஆரேநீ அவனவுன்றன் மனம்போர் சுட்டு
அலைவார்கள் தேசத்தோர் வழக்கந்தானே. 122

முழக்காமாய்த் திரிவார்கள் வாதங்காணார்
மயங்கியே வாதம்பொய் யென்பார்மூடர்
நளக்கமாய் மக்காவின் தேசந்தன்னில்
நலமான பெரியோர்கள் பிறந்தசீமை
களக்கமாய் கர்த்தாவைப் போலிருந்து
கண்டுகொண்டார் வாதமதின் நேர்மையெல்லாம்
பழக்கமா யிருக்குமந்தத் தேசந்தன்னில்
பதிவாக விருத்தியா யிருப்பார்தானே. 123

விருத்தியா மின்னமொரு களங்குகேளு
வேதாந்த நபிமார்களாடு மாட்டு
கருத்தியா மக்காவின் தேசந்தன்னில்
காரமாய்ச் சட்டியிலே உண்டுதானும்
விருந்தியா யிருந்துசாப் பிட்டுவந்த
விதமான ஒட்டைமிக உடைத்தெடுத்து
வருத்தியாய்ப் பூநீரில் பிச்சுப்போட
வளமாகத் தெளியுமது நாட்டங்கேளே. 124

நாட்டமாய்க் கெந்தியது பலமும்பத்து
நலமாகத் தெளிந்தநீர் தன்னைவிட்டு
வாட்டமாய்க் கருங்காலிக் கட்டையாலே
வசமாக அயக்கரண்டி தன்னிலிட்டு
காட்டமா யெரித்திடவே மெழுகுமாகும்
கனமான மெழுகுதனைப் பதனம்பண்ணி
நீட்டமாய்ச் செம்பென்ற தகட்டிற்பூசி
நிலையாகப் புடம்போடத் தங்கமாகும். 125

தங்கமாம் லோகமெல்லாந் தடவிப்போட
தன்மைபெற்ற தங்கமாம் நல்லவித்தை
எங்கள்குல நபிமார்கள் செய்வார்பாரு
இதமாக நான்கண்டு உலகோருக்கு
உங்களுக்காய்ச் சொல்லிவைத்தே னிரக்கமாகி
உண்மையாய் மெழுகதனை ஒட்டகப்பாலில்
சங்கமா யிருக்கவென்றால் மண்டலந்தான்
சாப்பிடவே காயசித்தி வலுக்கும்பாரே. 126

வலுதியாய்த் தேகமது செவ்வலரிபோலாம்
வகையான உன்சடலங் கற்றூணாகும்
சலுதியாய் மெழுகதனை உண்டுபாரு
சதியான நோயொன்று மில்லையில்லை
உறுதியா யுன்வயது நூறுமட்டும்
உண்மையாய் தேகமது கஸ்தூரிவீசும்
தறுதியாய் நரம்பதுவு முருக்குமேறும்
தானறிந்து யாகோபு கருச்சொன்னேனே. 127

கருவென்ன சொல்லுகிறேன் உனக்குமேகேள்
கவலையது கெந்தியினில் துருசைக்கொல்ல
உருவென்ன சத்தாகும் உடைத்துப்பாரு
உணர்வாக வெங்கலம்போ லுறுதியாகும்
செருவாகும் வெங்கலம்போல் சத்தாய்நின்ற
செம்பெடுக்க வகையொன்று சொல்லக்கேளு
தருவாக வாழ்மடந்தை சத்திற்பாதி
சரிசேரு அரைத்துகனல் மீதில்வாட்டே. 128

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போடச் சிவக்கும்பாரு
சுட்டியே சிவந்தபின்பு மடையன்தன்னைக்
குணமாகப் பாதிதான் கூடச்சேர்த்து
வாட்டியே அரைத்துவில்லை முன்போல்வாட்டி
வடிவாக வில்லையைத்தான் கதிரில்வைத்து
காட்டியே புடம்போடக் கெந்தியீயம்
கலமான சத்துமே நலமதாமே. 129

நலமாகக் கொடியோனைச் சேர்த்துப்பின்பு
நாடியே அரைபொடியைப் பழச்சாற்தன்னில்
சலகமாக மூன்றுநா ளூறவிட்டு
சரியாகப் புடம்பேராட்டுச் சத்திற்சேர்த்து
கலமாக அரைத்துரவி காயவைத்து
கடிதாகப் புடம்போட்டு எடுத்தாயானால்
தலமாகக் கறுப்பாகும் கறுப்பினோடே
தடையறவே வண்டிலது பாதிசேரே. 130

பாதிநீ சேர்த்துமே முன்னீராலே
பதிவாக அரைத்துவில்லை காயவைத்து
நீதியாய்ப் புடம்போட்டுக் குகையிலிட்டு
நினைவாக உருக்கியே பார்க்கும்போது
வாதிகாள் சரியான செம்புமாகும்
வடிவான செம்புதனை மதியதெட்டில்
காதியாய் ஒன்றுகொடு வேதைகாணும்
கருணைபெற யாகோபு கருச்சொன்னேனே. 131

கருத்தாகத் தங்கம்ரெண்டு சேர்த்துப்பாரு
கருணைபெற மாத்தேழு காணுமப்பா
உருத்தாக யிதைவித்துச் செலவுசெய்து
உண்மையுள்ள நபிமார்கள் போலிருந்து
பெருத்ததொரு பூவுலகில் யெளியோர்போலப்
பேசாம லிருந்துமே செம்பைச்செய்து
வருத்தமில்லா திருக்கயா கோபுசொன்னார்
வண்மையிந்தச் செம்புதனை நாடிப்பாரே. 132

சிங்கிமுறை

நாடிப்பார் மிருதாரு சிங்கிதன்னை
நபிமார்கள் ஒளித்திட்ட நட்பைக்கேளு
கூடிப்பார் சிங்கியது பலமும்பத்து
கூசாமல் வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
வாடிப்பார் யிரண்டிடைதான் கூட்டிநீயும்
வளமாக அன்னமென்ற பாலாலாட்டி
தாடிப்பார் புடமைந்து போட்டுக்கொண்டு
தடையறவே கல்வமதிற் போட்டுக்கேளே. 133

போடவே தாளகமும் ரசமும்நேரே
போகமாய் நாலிலொன்று இட்டுநீயும்
நீடவே அன்னமென்ற பாலாலாட்டி
நிதியாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாடவே புடம்போடப் பவளமாகும்
நலமாஞ்செந் தூரம்ரவி நூற்றிற்றாக்க
பாடவே கொடுத்திடவே மாத்துப்பத்தாம்
பதமாகப் பணவிடைநா னுண்ணக்கேளே. 134

உண்ணவே மணடலத்திற் காயசித்தி
உறுதியாய்க் காயமது செவ்வலரிபோலாம்
நண்ணவே காயமது பெலத்துப்போகும்
நலமாகச் சாவில்லை வயதோமெத்த
துண்ணவே சந்திரன்போற் காந்தியாகும்
துடியாக நரம்புகளு முறுக்குமேறும்
கண்ணவே தேகமது பவளமாகும்
கருணையுடன் யாகோபு கருச்சொன்னேனே. 135

கருணையோ டெழுநூற்றிற் சொன்னமார்க்கம்
        கடைசிதனி லிந்நூலைக் கருதிச்சொன்னேன்
வருணைய்யா யெல்லோரு மெந்தன்நூலை
        வகையாகப் பார்த்துமே கருத்துணர்ந்து
தருவான கருவையெல்லா மனதிலெண்ணித்
        தாட்டிகமாய்ப் பாகமுடன் செய்துகொண்டு
உருவாக நீடுழி காலம்வாழ்ந்து
        உற்றசினம் போலிருந்து வாழ்வார்தானே. 136

இருந்துமே வெள்ளிவித்தை முன்னேசெய்து
        இதமாகப் பின்புதான் சத்துமார்க்கம்
வருந்தியே நீகண்டு உப்பைச்செய்து
        வடிவான கைபாக வரிசையாக
அறிந்துமே செய்துபின் செந்தூரத்தை
        ஆட்டியே வைத்துமே நாடிக்கேளு
பறிந்துமே திரியாதே நூலைப்பாரு
        பதிவான யாகோபு பலன்சொன்னாரே. 137

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால்
        சொற்பெரிய நரகத்தில் வீழ்ந்துமாள்வார்
நன்னயமா யொருவருட பேச்சைக்கேட்டு
        நலமாகச் சுட்டாக்கால் கெட்டுப்போவாய்
இன்னிலத்திற் சாஸ்திரங்கள் பொய்தானென்றால்
        இனிதாக நரகமது எய்துமப்பா
கன்னல்போ லின்னூலை யெல்லாம்பார்த்துக்
        கருத்தாகச் சுட்டாக[illegible]யெல்லாமாமே. 138

வாதமா மயச்சத்து முன்னேபார்த்து
        வகையாகச் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
தூதமாய்ச் சேர்த்தூதத் தங்கமாகும்
        துணையாகச் செலவுக்கு வைத்துக்கொண்டு
ஊதமாய்குலந் தழைக்கச் சோறுபோடு
        ஒருவருக்குஞ் சொல்லாதே உண்மைசொன்னேன்
வாதமதுசெய்து செம்பொன் தேடிக்கொண்டு
        [illegible]ங்களமாயிருந்து நல்லமதியைக்காணே. 139

காணவே இன்னமொரு களங்குகேளு
கனிவான செம்பால்கீழ் மூடிபண்ணி
தோணவே அயத்தாலே மேல்மூடிபண்ணி
சுகமான நாகமது பலமுமெட்டு
வாணவே உருக்குமுகந் தன்னிற்றானும்
வளமான சூதமஞ்சு தொந்தித்தேதான்
தாணவே கெந்தியது பலமுமஞ்சு
தடையறவே மூன்றுபலந் தாளகமும்நன்றே 140

நன்றாக வீரமது பலமும்ரெண்டு
நலமாகக் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
கன்றாக அயச்செம்புக் குள்ளேபோட்டு
கருவாக மூடியே சீலைசெய்து
வன்றாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
வண்மையுள்ள மேல்மூடி வெட்டையாகும்
தொன்றாக கண்டதுபோல் குகையிலிட்டுத்
துணிவாக உருக்கையிலே சத்துமாமே. 141

சத்தான சத்துக்குள் காரமிட்டுத்
தடையறவே யுருக்கியதைச் சாய்த்துப்பாரு
முத்துகளுமுடைந் தாப்போற் சத்துமாகும்
முனிந்துமே சத்திடைக்குக் காரஞ்சேர்த்து
சித்தான கல்வமதி லிட்டரைத்து
திடமான அன்னத்தால் சாமம்நாலு
நத்தாக அரைத்துவில்லை காயவைத்து
நலமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
பத்தாகச் சிவந்ததுவுஞ் சத்துமாகும்
பதமாக யெடுத்துமே பாகங்கேளே 142

பாகங்கேள் யெடுத்துமே கொடியோன்தன்னைப்
பதிவாக அன்னத்தா லாட்டிக்கொண்டு
தாகமாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
சரிந்தபுடம் போடச்செந் தூரமாகும்
நாகமாய்ச் செந்தூரந் தனையெடுத்து
நபிமார்கள் சொன்னபடி நாட்டம்பார்த்து
யூகமாய் வெள்ளியெட்டில் ரெண்டுசேர்த்து
உறுதிபெறத் தங்கமது ரெண்டுசேரே. 143

சேர்த்துமே ஊதிப்பார் செம்பொன்னாகும்
சிறப்பாகச் செம்பொன்னை வித்துநீயும்
கார்த்துமே உண்டுடுத்திக் கந்திரிகள்செய்து
கடிதான ஞானயோ கத்தைப்பாரு
நார்த்துமே ஆண்டவனைத் தியானஞ்செய்து
நலமான நபிமார்கள் பாதம்போற்றி
பார்த்துமே யிருவென்று யாகோப்சொன்னார்
பதம்பெற்ற போதகரைப் பணிந்துபோற்றே. 144

பணிந்துமே சாஸ்திரமுஞ் சூஸ்திரமும்பாரு
பரிபாஷை நாமமது வெளுத்துப்போகும்
கணிந்துமே நூலிலுட மர்மங்கொண்டு
கருத்துவைத்து நூலதனைக் கண்டுபார்த்து
தனிந்துமே தம்பிரான் தன்னைத்தானும்
தாட்டிகமாய்த் துதிசெய்து கருத்தில்உண்ணி
வனிந்துமே சரக்கெல்லாம் ஊணிப்பாரு
வகையாகக் குருவாகும் வணங்கிப்பாரே. 145

வழங்கவே யென்பேரு ராமதேவன்
வகையாகப் பெருநூல்கள் பாடினேன்பார்
தழங்கவே மறைவாக மறைத்துப்போட்டேன்
தாட்டிகமாய் மக்காவின் தேசமேகி
துளங்கவே மகமதுவின் மார்க்கந்தன்னில்
சுகமாகக்கூடியே சுருக்கமெல்லாம்
விளங்கவே சொல்லிவிட்டேன் சத்துமார்க்கம்
விதமான செம்பெடுக்க வழிசொன்னேனே. 146

சொன்னதொரு செந்தூரம் தைலமோடு
துடியான செம்புவகை துடியாய்ப்பாடி
நன்னயமாய்க் கைபாக வரிசை பாடி
நலமாக நபிமார்கள் பிழைக்கவேண்டி
பின்னமது மில்லாமல் உலகத்தோர்க்கு
பிணக்கறவே ரசவாதம் பார்த்துத்தேறி
கன்னல்போற் சொல்லிவிட்டேன் நூலைப்பாரு
கருத்தோடே நூற்கோர்வை பிலனாய்ப்பாரே. 147

பிலனாக முன்னிருந்த நிலமைகண்டு
பெரிதான மக்காவின் தேசம்புக்கி
வலமாக நபிமாரை நாமுங்கண்டு
வசமாக யென்னையவர் சேர்த்துக்கொண்டு
நலமாக நபிமார்கள் சொல்லச்சொன்னார்
நாட்டிலுள்ளோர் பிழைக்கவே நானுஞ்சொன்ன
தலமாகச் செந்தூரம் பாடச்சொன்னார்
தாட்டிகமா யிதைப்பின்பு பாடினேனே. 148

பின்புதான் மலைதேசம் புக்கிப்பின்பு
பிரபலமாய் வகாரமது பின்புபாட
அன்பாக எல்லோரு மென்னைவேண்டி
அடைவாக யெடுத்துரைத்தார் கர்த்தாவென்று
தென்புடனே சத்துடைய மார்க்கங்கண்டு
செல்வமாய்ச் சொல்லிவிட்டேன் னதிகநன்மை
சுன்னமாய் முன்னூறும் பின்னேபாடிச்
சூட்சமாய் யெல்லோருங் கண்டார்பாரே. 149

கண்டுபா ரின்னூலைப் பொருக்கியானும்
கனமாக நூற்றியம் பதுவும்பாடி
தொண்டுபட்டு முப்புமுதற் சொன்னேன்பாரு
தொல்லுலகில் ரசவாதிக் காகச்சொன்னேன்
பண்டான சாஸ்திரமும் பார்த்துத்தேறி
பதிவாக உலகத்தோர் பிழைக்கவேண்டி
தொண்டுபட யிந்நூல் நூற்றைம்பதாகத்
துணையாக யெல்லாமுஞ் சித்தியாமே. 150

யாகோபு வைத்திய சூஸ்திரம் 150 முற்றிற்று.

உ

கடவுள் துணை

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

செந்தூரம் 150-க்கு

எடைபாகஞ் சொல்லக்கூடிய

சூஸ்திரம் - 55.

நித்தியமாய் நிறைந்தகுரு நபிமார்பாதம்
　　நீணிலத்திற் றான்பணிந்து துதியேசெய்து
பத்தியுடன் நூற்றியன்பது வுந்தானும்
　　பாருலகிற் பாடியே யதைச்சுருக்கி
புத்தியுட னன்பதாய்ப் பாடினேன்பார்
　　புகலரிய சத்துகளைப் பிரித்தேனின்னூல்
சத்தியமாய்ப் பார்ப்பவர்க்குச் சத்திலுள்ள
　　சரியான செம்பெடுப்பார் தரணியோரே. 1

தரணிதனி லயச்செம்பு கெந்திச்செம்பு
　　தாக்கான காரீயச் செம்பினோடு
பரணிதனில் சொர்ணத்தின் செம்பினோடு
　　பதிவாக யிவையெடுக்குங் கைபாகங்கள்
வரணிப்பாய்ச் செந்தூரஞ் செய்யும்பாகம்
　　வாதிக்கி யின்னூலில் வரிசையாக
முரணியாய்ச் சொல்லிவிட்டேன் சுத்தியாக
　　முத்தியா யாகோபு மொழிந்தேன்யானே. 2

தொழியென்ன உலகத்தில் வாதிமார்கள்
　　மோகமுற்று ரசவாதம் வேணுமென்று
பழியாகச் செம்பினுடன் கெந்திசேர்த்து
　　பாகமா உருக்கிடவே சத்துமாகும்
வழியாக யிச்சத்து தனைப்பிரித்து
　　வகையாகச் செம்பெடுக்க மாட்டாமற்றான்
கழிவாகச் செம்புவெள்ளி தன்னைச்சேர்த்து
　　கணக்கிட்டு உளறிடவே காணார்காணே. 3

காணாமற் கண்டுதான் செம்பெடுக்கக்
கருதியே அயச்செம்பு கருதிக்கேளு
நாணாமல் நல்லசெம்பு பலமும்பத்து
நல்லகுகை தன்னிலிட்டு உருக்கிக்கொண்டு
வாணாக அதையெட்டிப் பார்க்கும்போது
வண்மையாய்ப் பச்சைபோல தெளிவாய்க்காணும்
தோணாக யிப்படியே சமயம்பார்த்து
தொக்கவே செம்பினிடை கெந்திதானே. 4

கெந்தியைத்தா னாலாகப் பிரித்துக்கொண்டு
கெடியாக ஒருபங்கு செம்பில்தாக்கு
சுந்தரமாய் கெந்தியது சுளித்துஉள்ளே
சொக்கியே யிருந்திடுங்கான் குகையைமூடி
முந்தியே உருகியது ஆடும்போது
முனிவாகக் குகைகொஞ்சந் தூக்கிவைத்து
நந்தியே சிலாகையால் குத்திப்பேறு
நலமாகத் தொப்பிபோற் கிளம்பும்பாரே. 5

கிளம்புமென்ற சத்தெடுநீ சிலாகையாலே
கீர்த்திபெறப் பின்புதான் ரவியுருக்கி
தளம்புகழப் பின்புமொரு பங்குகெந்தி
தாக்கிட்டு மூடியபின் னுருகியாடும்
வளமாகக் குகையைத்தான் கொஞ்சந்தூக்கி
வைத்துமே சிலாகையால் பேர்த்துக்கொண்டு
துளமாக யின்னுமொரு பங்குகெந்தி
துடியாகக் கொடுத்துமுன்போல் பேர்த்துக்கொள்ளே.6

பேர்த்துமே யிப்படிக்கிச் சத்தையெல்லாம்
பெருமையாய் மாவாக்கிக் குகையிலிட்டு
சார்த்துமே உருக்குமுகந் தன்னிற்றானும்
தாட்டிகமாய்ப் பொரிகாரங் கொஞ்சமிட்டு
பார்த்துமே உருக்கிடவே சத்துமாகும்
பதிவான சத்துவெங் கலம்போலாகும்
கார்த்துமே யிச்சத்துப் பெருமைதன்னை
கருணைபெற நபிமார்கள் கண்டார்தானே. 7

சூஸ்திரம் 55

கண்டுமே அடியாற்குச் சொன்னேன்சத்தை
காரணமாய்ச் செம்பெடுக்கச் சொல்லவில்லை
பண்டுமே சகலநூ லறிந்துபார்த்து
பதிவாகச் செம்பெடுத்து வேதைபோட்டேன்
முண்டுமே பண்ணாமல் சத்தைப்பார்த்து
முடியமட்டுஞ் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
உண்டிடவே பாச்சிவிட்டுப் பொன்னைச்சேரு
உறுதியாய்ப் பொன்னாகும் உத்துப்பாரே. 8

உத்துப்பார் முன்செய்த சத்துதன்னை
உறுதியாய்ச் சேரொன்று கல்வத்திட்டு
சித்துப்பார் சந்தானி சேருஒன்று
சிறப்பாகப் பொரித்திடவே நாலதாகும்
நத்துப்பார் யிரண்டாகப் பிரித்துக்கொண்டு
நலமாக ஒருபங்கு கல்வமிட்டு
சித்துப்பார் செவ்வரளிப் பூச்சாறாட்டிச்
சிறப்பாக வில்லைதட்டிக் கதிரில்போடே. 9

போட்டுமே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்து
பிரபலமாய்ப் புடமென்ன கோழியாகும்
காட்டுமே யெடுத்துநீ கல்வமிட்டு
கனிவாகப் பொரித்தவெங் காரங்கூட்டி
நாட்டுமே முன்னீரா லரைத்துக்கொண்டு
நலமாக முன்போலே புடத்தைப்போடு
வாட்டுமே நிறுத்துப்பார் பாதிருபி
வகையாகச் சேர்த்துநீ பாணிஊத்தே. 10

ஊத்தியே அரைத்திட்டு சாமம்நாலு
உறுதியாய் வில்லைதட்டிப் புடத்தைப்போட்டு
பார்த்துயெடு கல்வமிட்டுப் பின்புகேளு
பதிவாக அரைபொடியைப் பழச்சார்விட்டு
நாத்துமே மூணுநா ளூறவிட்டு
நலமாகப் புடம்போட்ட வில்லைக்கித்தான்
காத்துமே கால்வாசி சேர்த்துக்கொண்டு
கருணைபெறப் பழச்சாற்றிற் சாமம்மூன்றே. 11

சாமந்தான் மூன்றரைத்து வில்லைதட்டிச்
சரியாகப் புடமிட்டு யெடுத்துக்கொண்டு
ஏமந்தான் வெங்காரங் கொடுத்தசத்தை
எழுநூற்றிற் சொல்லிவிட்டேன் குகையில்வைத்து
நாமந்தா னுருக்கிடவே சொன்னேன்பாரு
நலமில்லை குகையுருக்கிச் செம்புவீணாம்
தாமதமில் லாமலே நாலத்திட்டு
தப்பாமல் மேலூத்தா யுருக்கிக்கொள்ளே. 12

உருக்கிடவே செம்பாகுஞ் செம்புதன்னை
உத்துயெடு புதுக்குகையி லிட்டுப்பின்பு
நருக்கிடவே யுருக்கிச்சாய் பஞ்சமித்திரம்
நலமாகுச் செம்பாகுஞ் செம்புதன்னை
கருக்கிடவே நொறுக்குவெள்ளி போடாமற்றான்
கனமான வெள்ளிதனை நாலத்திட்டு
வருக்திடவே கொடுத்தூதி வங்கந்தன்னை
வகையாகச் சுண்ணாம்பு போலஊதே. 13

ஊதியே யெடுத்துப்பார் ஈயம்போக
ஊதாட்டால் யீயமது போகாதப்பா
பாதியே செம்பைத்தான் கொடுத்தாயானால்
பரிவாகப் பழுக்காது பரிந்துபார்த்து
நாதியே துப்புரவா யூதிவெள்ளி
நலமாக நாலுக்கு ஒன்றுசெம்பு
கோதியே கொடுத்துருக்கி ஊதிப்போட்டு
குணமாகப் பொன்னிடைக்குச் சேர்த்திடாயே. 14

சேர்த்திடவே எடைசமனாய்ச் சேர்த்துருக்கி
சிறப்பாக யெடுத்துப்பார் மாத்துயேழு
ஆர்த்திடவே புடமிறங்கும் லாபமாகும்
ஆதரவாய் வைத்திட்டுச் சிலவுசெய்து
கார்த்திடவே நொறுக்குவெள்ளி வைத்துக்கொண்டு
கனிவாக யிச்செம்பைக் கொடுத்துப்பொன்னை
நேர்த்தியாய்ச் சேர்த்திடவே காயைப்போலே
நிசமாக யெட்டரைதா னாகும்பாரே. 15

சூஸ்திரம் 55

ஆகுமே முன்னூறு செந்தூரத்தில்
அடைவாகச் சொர்ணசெந் தூரஞ்செய்து
ஏகுமே கொடுத்திடவே ரெம்பலாபம்
ஏழைமதி போகாமல் செய்துகொள்ளு
வாகுபெறத் தங்கமா மருவிப்பாரு
வடிவாக மிதப்பான நினைவைவிட்டு
பாகுபெறச் செய்தாக்கால் பலனுமாகும்
பதிவான யாகோபு தான்சொன்னேனே. 16

தானென்ற சத்தினுட கிராசச்செம்பு
தடையறவே சொல்லிவிட்டேன் தன்மைபாரு
வானென்ற அயச்செம்பு மார்க்கங்கேளு
வகையான துருசியது பலமும்பத்து
கானென்ற கெந்தியது பலமுமொன்று
காரணமாய் வீரமது பலமுங்கால்தான்
நானென்ற பழச்சாறு விட்டுஆட்டி
நலமாக மூவேழு நாள்தானாட்டே. 17

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
ஆனபின்பு உப்புநேர் சுண்ணங்கூட்டி
வாட்டியே அரைத்துமே வில்லைமேலே
வகையாகக் கவசமிட்டுப் புடத்தைப்போடு
நாட்டிலே சொல்லாமற் கவசந்தன்னை
நலமாகப் பிரித்துமே தள்ளிப்போட்டு
கூட்டியே உள்ளிருந்த மருந்துதன்னை
குணமாகப் பார்த்திடவே கருப்புமாமே. 18

கருப்பாக உள்ளிருந்த மருந்தினோடே
கருப்பியைத்தான் வில்லைக்கி அரைக்கால்சேரு
துருப்பாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
துப்புரவா யரைத்துவில்லை கதிரிற்காய்ந்து
நறுப்பாகப் புடமிட்டு யெடுத்துக்கொண்டு
நலமாகச் சந்தாணி பொரிகாரத்தை
விறுப்பாகச் சேர்த்துமே அரைத்துப்போடு
விதமாக யிப்படிக்குப் புடமுமஞ்சே. 19

புடமைந்து போட்டவுட னெடுத்துநீயும்
        புகழாக குகையில்வைத்து உருக்கவேண்டாம்
திடமாக நாளத்தில் வைத்துநீயும்
        திட்டமா யுருக்கியெடு திரமாஞ்செம்பு
வடிமாகச் செம்புதான் சத்தியாகும்
        வடிவமென்ன யிச்செம்பை மதியிலெட்டு
கூடமாக ரெண்டிட்டு உருக்கிப்பின்பு
        கருத்தாகச் சொல்லுகிறேன் கண்டுபாரே. 2

கண்டுபார் மாத்தெட்டு உள்ளபொன்னை
        கருத்தாக இடைசேர்த்து உருக்கித்தீரு
வண்டுபார் சீவனத்துக் கிடமேயாகும்
        வகையாக முன்னூறில் சொன்னேனப்பா
துண்டுபா ரிச்செம்பில் தங்கம்சேர்த்து
        துடியாக உருக்கியே தகடாய்த்தட்டி
வண்டுபார் நாத்தமொடு கெந்திசேர்த்து
        வடிவாக வீரனுமே கூடச்சேரே. 2

கூடவே சேர்த்தவுடன் சொல்லக்கேளு
        குமரியாஞ் சோரதிலே விட்டுஆட்டி
ஆடவே தகட்டிற்கு மேலேபூசி
        அடைவாகப் புடம்போடச் சிவந்துபோகும்
நாடவே மதிதனிலே இருபதுக்கொன்று
        நாட்டிடவே தசமாத்தாம் நாடிபாரு
வாடவே பாகத்தை வகையாய்க்கண்டு
        வடிவாகச் சேர்த்திடவே வழக்கமாமே. 2

வழக்கமாஞ் சத்துக்குத் துருசுவேணும்
        வகையான கெந்திதா னயமும்வேணும்
தழக்கமாஞ் செம்புதான் பிரிக்கவேறாய்
        தடையில்லாச் சந்தாணி கொடியோன்வேணும்
பழக்கமா யிவைகூடாப் போனதாலே
        பழிகாரச் செம்பதுவும் பாரிலில்லை
கழக்கமாய்ச் சத்துவகை போட்டுப்போட்டு
        காரணமாய்ப் பொய்யாகு மென்பார்பாரே. 2

பாரப்பா நிர்மூட வாதிதானும்
பதிவாக ஒன்றோடே ஒன்றைச்சேர்த்து
நேரப்பா பெரும்படியாய்ப் போட்டுப்போட்டு
நிலைக்கவில்லை யென்றுமே சொல்லிச்சொல்லி
தூரப்பா திரிவார்க ளலைந்துசுத்தி
துடிவாக மாத்தில்லை யென்பார்தோசி
ஆரப்பா யெனைப்போலே சொல்லப்போரா
அறிவில்லா மூடர்களே அறிந்துபாரோ. 24

அறிந்துபா ரின்னமொரு நாகச்செம்பு
அடைவாகச் சொல்லுகிறே னறிந்துகேளு
செறிந்துபார் துருசதுவும் பலமும்பத்து
திறமான கெந்தியது பலமும்பத்து
பறிந்துபார் எலுமிச்சம் பழச்சார்விட்டு
பதிவாக நாளாறு அரைத்துச் சேர்த்து
கறிந்துபார் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
கனமாக உப்புநேர் சுண்ணங்கூட்டே. 25

கூட்டியே வில்லைக்கி அரைத்துக்கட்டி
குணமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நாட்டிலே சொல்லாதே கறுத்துப்போகும்
நலமாகக் கல்வமிட்டுச் சந்தாணிகூட்டி
வாட்டியே அரைத்துவிடு பழச்சாற்றாலே
வளமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
மாட்டியே புடம்போடு அஞ்சுதானும்
வடிவாக யெடுத்தபின்பு பாகங்கேளே. 26

பாகமென்ன செல்லுகிறேன் பாகங்கேளு
பதிவாக நாகரசம் உடனேசேர்த்து
வேகமாய் வில்லைக்குக் காலுமாகும்
விருப்பமாய்ப் பழச்சாறு விட்டுஆட்டி
ஆகமாய்க் கதிரில்வைத்து காயப்போடு
அடைவாக உப்புநேர் சுண்ணங்கூட்டி
தாகமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
தண்மையா யாகோபு தாக்கினாரே. 27

தாக்கியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
தடையறவே குகையிலிட்டு உருக்கிம்பாரு
நோக்கிப்பார் பொன்போலே கண்விட்டாடும்
நுட்பமாய்ச் செம்பெடுத்து மதியிற்பத்து
வாக்கிப்பார் ரெண்டிட்டுத் தங்கந்தானும்
வடிவாக யிடைசமனாய்ச் சேர்த்துநீயும்
பாக்கியமா யூதியெடு பொன்னதாகும்
பலனாக யாகோபு பதிந்தவாரே. 28

பதிவாக நாகத்தின் செம்பினோடே
பலனாகத் தங்கமது யிடையேசேர்த்து
கதியாக உருக்கிமெள்ளத் தகடாய்த்தட்டி
கணக்காக நாத்தமுடன் கெந்திசேர்த்து
விதியாகக் கல்வமிட்டு அரைத்து நீயும்
விதமாகப் பூசியேப்புட மூன்றிட்டால்
நிதியாக நொறுங்கியே தூளுமாகும்
நீனிலத்தில் யாகோபு சொன்னவாரே. 29

சொன்னபடி நொறுங்கியதோர் குருவைத்தானும்
சுருதிபெற மதியெட்டில் ரெண்டுதாக்கு
நன்னயமாய்த் தங்கமது பாதிசேரு
நலமாக ஆணிக்கு யெட்டேயாகும்
இன்னிலத்தில் பிழைப்பாகு மிந்தவேலை
இதமாக நபிமார்க ளாடுமாட்டு
கன்னல்போல் சொல்லிவிட்டேன் கருணைவைத்து
கருத்துணர்ந்து யாகோபு கண்டவாரே. 30

கண்டுயெடு நாகத்தின் செம்புதன்னை
கதிபெறவே பொன்னாகும் ஆணிக்கொக்கும்
தொண்டுபடும் வேலையெல்லா மதன்பின்பாரு
தொல்லுலகில் ரசவாதம் நிலைக்கும்பாரு
பண்டு நபிமார்கள் தானாடுமாட்டு
பத்திரமாய்க் கண்டிடவே பலனுமாகும்
முண்டுதான் பண்ணாம லின்னூல்தன்னை
முழுதுமே சோதித்தா லுறுதியாமே. 31

உறுதியாய் மட்டத்தில் பொன்னைத்தானும்
உண்மையாய் சேராதால் மாத்துமில்லை
அறுதியாய்த் தெரியாம லலைந்துகெட்டார்
அடைவாக அலையாமல் நுணுக்கங்கண்டு
தறுதியாய் ஆணும்பெண் சேர்ந்துபெற்ற
தனையொக்கு மட்டத்தில் பொன்னுசேர்ந்தால்
கறுதியே பிள்ளைபெற்ற பலனுமொக்கும்
கைகண்ட யாகோபு கருணைதானே. 32

தானென்ற கெந்தியுட செம்பைக்கேளு
சமுசயமில்லாத தொரு கருத்தைவைத்து
நானென்ற துருசதுவும் பலமும்பத்து
நளினமாய் கெந்தியது பலமும்பத்து
வானென்ற பழச்சாறு விட்டரைத்து
வகையாக யிருசாமஞ் சென்றபின்பு
கானென்ற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
கனிவாக யாகோபு கருவாய்த்தானே. 33

கருவாக வில்லைக்குக் கவசங்கேளு
கனிந்துமே உப்பிட்டுச் சுண்ணஞ்சேர்த்து
திருவாக ஆட்டியே கவசங்கட்டி
திறமாகப் போட்டெடுக்கக் கரியாய்நிற்கும்
தருவாக யெடுத்துமே காரங்கூட்டி
தகுந்ததொரு மணியாக வுருக்கிக்கொண்டு
விரும்பியே யிப்படிக்குக் காரங்கூட்டி
வேண்டியே யரைத்துப்புட மிட்டிடாயே. 34

இட்டிடவே யிப்படிக்குக் காரங்கூட்டி
இதமாகக் கொடியோனைப் பாதிசேர்த்து
கட்டிடவே பாணி தன்னாலாட்டிக் கொண்டு
கனிந்துமே உலரவைத்துப் புடமுமிட்டு
பட்டிடவே யெடுத்துருக்கச் செம்புமாகும்
பதிவாக பஞ்சமித் திரத்திற்சாய்த்து
கொட்டிடவே செம்பெடுத்து வைத்துக்கொள்ளு
கோடிகவ ரோடுமிது குணமாய்த்தானே. 35

குணமாகக் கருக்கன்வெள்ளி தன்னிலேதான்
குரூரமாய் வங்கத்தை ஓட்டிரெட்டி
தணமாகக் குடுத்தூதத் தங்கம்போலாம்
தாக்கிடவே யெடுத்துமே வைத்துக்கொண்டு
கணமாக மதியேழு செம்புமூன்று
கணக்காக யிவ்விரண்டு மிடையேசேரு
வணமாக மாத்தென்ன யெட்டுமாகும்
வடிவான யாகோபு சொல்லுவேனே. 36

சொல்லுவே னிச்செம்பை வைத்துக்கொண்டு
சுருதியே நபிமாரைத் தோத்தரித்து
நல்லதொரு மட்டமிடை பொன்னைச்சேர்த்து
நலமாக வுருக்கியெடு தங்கமாகும்
கல்லுவார் சிறிதுபேர் செம்பெடுத்து
கருதியே வெள்ளிதனிற் கொடுத்துப்பார்த்து
அல்லுவார் மாத்தில்லை யென்றுதள்ளி
அலைவார்கள் கையூணாக் கரணந்தானே. 37

கையூணாக் கரணமென்ன மட்டமாச்சு
காரணமாம் பொன்னுதான் தாயுமாச்சு
வையகத்தி லிரண்டுமே சேர்த்துநீயும்
வகையாக உருக்கிப்பார் லாபமாகும்
மெய்யாக விம்மொழிகள் நிசமதாகும்
விருதாவாய்ப் பார்த்தாக்கால் பலனுமில்லை
சையோகஞ் செய்வதுபோல் மனதையூனி
தவிக்காமற் செய்துநீ பாகம்பாரே. 38

பாகமாய் மட்டத்தில் பொன்னைரெம்பப்
பரிவாகச் சேர்த்தாக்கால் பலனுமாகும்
ஆகமாம் புடத்துக்குத் தங்கந்தானும்
அருகுகட்டும் பேராசைப் படவும்வேண்டாய்
யூகமாய்ப் பார்த்துமே செய்துகொள்ளு
உடலுயிர்போல் வேண்டியே யுகந்துசெய்தாற்
போகமாய்ப் பெருவாழ்வு வருகும்பாரு
புத்தியுள்ள வாதிகளே புகலக்கேளே. 39

புகலவே தேன்பூச்சி கொஞ்சங்கொஞ்சம்
புகட்டியே தேனெடுத்து ரெம்பச்சேர்க்கும்
அகலவே மட்டமதில் தங்கத்தாயை
அடைவாக மிதக்கவே சேர்த்துக்கொண்டால்
நகலவே ஆணிக்குக் கூர்மையாகும்
நலமாகுங் குற்றமில்லை நாட்டுள்ளோர்க்கு
சகலமுந்தான் பாடுபட்டால் பலனுமாகும்
சரியாக யாகோபு சொன்னவாரே. 40

சொன்னதென்ன வாதத்திற் காதியாக
சுருதியா யெழுநூறுங் களங்குஞ்சொன்னேன்
நன்னயமா யதைக்குருக்கிச் சத்துமார்க்கம்
நலமாக இரண்டுமுன் னூறுஞ்சொன்னேன்
இன்னிலத்தி லதைக்குருக்கி நுற்றன்பதாய்
இருந்துரைத்தேன் நூற்றன்ப துங்குருக்கி
கன்னல்போ லன்பத்தி யைந்துதன்னை
கருத்துவைத்துப் பார்த்தாக்கால் சித்தன்தானே. 41

சித்தராய்ப் போகவே சுண்ணக்காண்டம்
சிறப்பாக அறுனூறு பாடல்சொன்னேன்
முத்தரா யென்பாடல் சகலத்திற்கும்
மும்மூலச் சாவியைப்போல் முன்னூர்தன்னில்
நித்தியமா மித்திரத்தின் மார்க்கத்தோடு
நிலையாகப் புடமார்க்கம் எரிப்பின்மார்க்கம்
சத்துநிற மரிதலோடு குறிப்பின்மார்க்கம்
சாங்கமாய் வகைதுகையாய்ச் சொன்னேன்பாரே. 42

சொன்னதொரு நூலெல்லாம் பாண்டமாகும்
சுருதியென்றபஞ்சமித்திர முன்னூற்தானும்
கன்னல்போற் தடியாகும் பார்த்துதேரு
கருதியே தானுழைத்துப் பலனைக்காண்பாய்
முன்னமே சத்தைத்தான் பண்ணித்தேர்ந்து
முக்கியமாய்ச் செம்பெடுத்து மதியிற்சேர்த்து
நன்னயமாய் மட்டமிடை தங்கஞ்சேர்த்து
நாடியே விற்றிடவே சிலவுக்காமே. 43

ஆமென்ற பின்னுமொரு செம்புமார்க்கம்
அறைகிறேன் நபிமார்க ளறியக்கேளு
காமென்ற நல்லசெம்பை உருக்கிக்கொண்டு
கருத்தாக யிந்திடைக்குக் கெந்திதாக்கு
வாமென்றே வாங்கியது சத்துமாகும்
வகையான சத்தெடுத்துப் பலமுமெட்டு
தாமென்ற வீரமது பலமுங்காலாம்
தடையறவே யிட்டுமே பாணிவிட்டே.

விட்டுமே யறைத்துப்பார் மஞ்சள்போலாம்
விதமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நட்டுமே வில்லைதான் காய்ந்தபின்பு
நலமான உப்பதுவைக் கவசங்கட்டி
பட்டுமே காடையென்ற புடத்திலிட்டு
பதிவாக யெடுத்துமே கல்வத்திட்டு
சுட்டுமே புடம்போட்ட யிடைக்குக்கேளு
சுழுவான கருப்பியைத்தான் ஊறப்போடே.

ஊரவே எலுமிச்சம் பழச்சார்தன்னில்
உற்பலமாய் நாளாறு சென்றபின்பு
காரவே முன்போட்ட மருந்தினோடே
கருத்துறவே சேர்த்தரைத்துப் பழச்சார்தன்னில்
சேரவே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
திறமாகக் கோழியென்ற புடத்திலிட்டு
வாரவே வெங்காரம் பாதிசேர்த்து
வகையாக அரைத்துவில்லை கட்டிடாயே.

கட்டியே புடம்போட்டு யெடுத்துப்பாரு
கருணைபெற்றச் சிவந்திருக்கும் வில்லைதன்னை
தட்டியே சரவுலையில் வைத்துருக்கு
தனிச்செம்ப தாகுமே யிந்தச்செம்பு
பட்டியே கடைசிதனில் சொல்லிப்போட்டேன்
பதிவான நபிமார்க ளாடுஞ்செம்பு
துட்டியே செம்பெடுத்து வெள்ளிதன்னில்
துடியாகப் பச்சைவெள்ளி தன்னில்கேளே. 47

தன்னிலே எட்டிரண்டு போட்டுருக்கி
தடையறவே எட்டரையா மாத்துப்பொன்னை
பன்னியே சேர்த்துருக்கு தாய்போலாகும்
பதிவான வாசறுமே நல்லசெம்பு
கன்னியமாய்ப் பார்க்குமந்தச் செம்பைவைத்து
கதிபெறவே சிலவுசெய்து நபிமார்போல
முன்னியே யிருந்துவிடு யாகோபுசொன்னார்
முடிவாகும் பத்தைந்தை யுணர்ந்துபாரே. 48

உணர்ந்துபார் கெந்தியுடன் துருசுச்செம்பு
உத்துமே சேர்த்துவிடச் சத்துமாகும்
கணர்ந்துமே சத்திலுள்ள செம்பைத்தானும்
காரணமாய்ப் பொரிகாரி பண்ணைசேர்த்து
வணர்ந்துமே புடம்போட்டுச் செம்புருக்கி
வகையாக மதியெட்டில் தாக்குவீறாய்
தணர்ந்துமே யேமமதை இடையேசேர்த்து
தாக்கிடவே பொன்னாகுந் தன்மைபாரே. 49

தண்மையா யிருந்துமே செம்பைக்கண்டு
தாட்டிக மாயெடுத்துநீ சார்வுபார்த்து
உண்மையா யொருவருக்குஞ் சொல்லாமற்றான்
உத்துமே செய்துவிட்டு முடித்துநீயும்
வண்மையாய் வணக்கமாய் நினைவுகொண்டு
வடிவாக மனமதுவைச் செலுத்தியேதான்
கண்மையாய் செம்பதுவைப் போசித்துப்பார்
கருதியே யாகோபு கருணைதானே. 50

கருணையா யயச்செம்பு சாஸ்திரத்தில்
கருத்தாகச் சொல்லவில்லை நானுங்கண்டு
வருணைபார் மக்காவின் தேசம்புக்கி
வடிவாக நூலெல்லாஞ் சோதித்தேன்பார்
தருணமா யிந்த நூல் தன்னிற்தானும்
தடையறவே சொல்லிவிட்டேன் சார்ந்துபார்த்து
பருணையாய் கைபாக வரிசைபாடி
பதியாக யாகோபு பகர்ந்தார்தானே. 51

பதிவாகப் பொன்னில்லா வாதமெல்லாம்
பதியைவிட்டு யெரிந்துவிடு பாரிலோர்க்கே
கெதியாகத் துருசில்லாச் சத்துவெல்லாம்
கெட்டியாய்த் தூரயெரி கேள்வியாலே
விதியாகச் சத்துதனில் செம்பைத்தானும்
விதமாக யெடுத்தாக்கால் விளக்கமாகும்
சதியாகக் கைபாக வரிசையில்லாச்
சதியான பாகமெல்லாந் தடையுமாமே. 52

தடையில்லா என்னூலை முழுக்கப்பார்த்து
சஞ்சலத்தை விட்டுமே படித்துத்தேரு
படையில்லா வேலையெல்லாம் பொய்யதாகும்
பார்த்தங்கு செய்யாட்டால் பலனுமில்லை.
இடையில்லாக் குகைபாகம் பருவங்கண்டு
இதமான உலைபோடும் விதமறிந்து
கடையான உலைக்கூடங் கருணைபார்த்து
காதலாய்ச் செய்திடவே கண்டுபாரே. 53

கண்டில்லா நூலினுட மர்மங்கண்டு
காதலாய் குணபாகங் கருத்தைப்பூண்டு
வண்டிலுள்ள செம்பதுவின் சத்துச்சேர்த்து
வடிவான செம்பெடுக்க வழக்கங்கண்டு
பண்டுள்ள மனம்போல நினைவைவைத்து
பதிவாகப் பார்த்திட்டு பதிவுகண்டு
தண்டித்து வேலைசெய்தாற் பாகமாகும்
தாட்டிகமா யாகோபு தாக்கினாரே. 54

தாக்கியே யிந்நநூ லன்பத்தஞ்சும்
சரிவரவே பார்த்திட்டுப் படித்துக்கொண்டு
நோக்கியே மனதிலெண்ணிச் சோதித்தேரு
நுணுக்கமாய் பாகமதைக் கண்டுதேரு
பாக்கியமாம் பாடலைத்தான் கண்டுதேர்ந்து
பார்த்துநீ பரிவாகக் கண்டபின்பு
வாக்கினிலே நினைந்திட்டுச் செய்துகொள்ளு
வடிவான யாகோபு நூல்தான்முற்றே. 55

செந்தூரம் 150-க்கு சூஸ்திரம் 55-ம்

உ
கடவுள் துணை.

சுண்ணம் 300 க்கு
சூஸ்திரச்சுருக்கம் 155

முத்தனிற சூல்பாதந் துதியேசெய்து
முந்நூறு சுண்ணமென்ற காண்டந்தன்னை
வித்தகமாய்ச் சுருக்கியே சுருக்கமாக
வினையமாய் நூற்றன்பத் தஞ்சதாக
சித்தம்வரச் சுண்ணமுடன் செந்தூரங்கள்
செயமாகக் கருவோடு செய்கைபாகம்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னிந்தநூலை
தனையோ தவாதவருந் தகமையாமே. 1

தகமைபெற்ற யிந்தநூற் றன்பத்தஞ்சில்
தாட்டிகமாய் முன்சொன்ன சுண்ணம்வைத்து
உகமையாய் சரக்குகளைக் கட்டிநீயும்
உறுதிபெறக் களங்குச்செந் தூரம்பண்ணு
பசுமையில்லா வாதம்வரும் புடமிறங்கும்
பருதியுள்ள மட்டுக்கும் வாழலாகும்
செகமேய்க்கும் உண்டுடுக்க லாகுங்கண்டாய்
சீர்பெறவே யாகோபு சொன்னார்தானே. 2

சொன்னதொரு முன்னூரில் துத்தந்தன்னை
சுகம்பெறவே சொல்லிவிட்டேன் திறமைதன்னை
நன்னயமா யிந்த நூற் றன்பத்தஞ்சில்
நாடியே துத்தத்தைச் சுண்ணம்பண்ணி
கன்னலென்ற தாளகத்தைக் கட்டிநீயும்
கருத்துறவே வங்கத்திற் சேர்த்துக்கட்ட
முன்னியே ரவிபழுக்கும் வேதையாகும்
முக்கியமா யாகோபு மொழிந்தவாறே. 3

மொழிகோட்டு நபிமார்கள் யாகோப்பென்று
முக்கியமாய் கைகூடுத்து முத்தமிட்டு
வழியாகச் சொன்னதொரு யிந்தநூலை
வண்மையாய்க் கிழிக்கவே சொன்னபோது
பழியாகச் சொன்னர்க ளென்றுசொல்லி
பத்தியே நானொழித்து வைத்துத்தானும்
விழிபோல உலகத்து வாதிக்கித்தான்
வீம்பாகக் குடுத்துவிட்ட விதமுமாமே. 4

விதமாக யேழையாம் வாதிமார்கள்
விரும்பியே யிந்தநூல் தன்னைப்பார்த்து
அதமாகச் செய்திட்டுப் பிழைக்கவென்று
அடைவாக அல்லாவுக் கொப்பாய்ச்சொன்னேன்
நிதமாகக் கைபாக வரிசைகண்டால்
நீநிலத்திற் பெரியநபி யாகுவீர்கள்
அதமாக யெப்பொருளும் பார்த்துத்தேற
ஆதியாங் குருவாமென் றறையலாமே. 5

துருசுச்சுண்ணம்

அறையுறேன் தூரிசினுட சுண்ணந்தன்னை
ஆண்மையாய் அல்லாவுக் கொப்பாயப்பா
பறையாதே உலகத்திற் முரட்டுவாதி
பாகத்தைச் சொல்லாதே பலனுமில்லை
சிறைபோலக் காத்திருந்த வாதிக்கித்தான்
சீராகச் சொல்லிவிடத் திறமுமாகும்
முறைபோலச் செய்திடுவான் முடிப்பானப்பா
முத்தியா யாகோபு விளக்கமாமே. 6

விளக்கமா யாகோபு சொன்னநீதி
விதமாக ரசவாதஞ் செய்யவென்றால்
பழக்கமா யிந்தநூல் தன்னைப்பார்த்து
பதிவாகச் சத்ருமித் துருவரிந்து
தளக்கமாய்ச் சரக்குகளைப் பார்த்துநீயும்
தடையறவே சரக்குகளைச் சுட்டுச்சுட்டு
இளக்கமாய்க் கைபாக வரிசைகண்டு
யிதமாகச் செய்திடவே யியற்கையாமே. 7

இயற்கையாய்ச் சரக்கதனைச் சுட்டுப்பாரு
யிதமான சாஸ்திரத்தை யெடுத்துஓது
அயற்கையாய்ச் சொன்னபடி பார்த்துநீயும்
அடைவாக அனல்தனிலே சரக்குக்கட்டி
நயற்கையாய் கைபழகு பணத்தைப்போட்டு
நயமாகச் சுட்டுமே நாட்டிற்தானும்
துயற்கையா யலைந்துடுமே கேட்டுநீயும்
துடியாகப் பாகமாய்ச் செய்திடாயே. 8

செய்திடவே துரிசினிட சுண்ணங்கேளு
துடியாகுங் கைபாக வரிசைகேளு
பைதிடவே சவுக்கார மில்லாப்போனால்
பதையாமற் கொல்லாது துருசுதன்னை
வெய்திடவே வெல்லாது நீரிடாது
வேதையுந்தான் வாராது வெற்றியில்லை
கைதிடவே சவுக்காரம் யெண்ணைவாங்கக்
கதிபெறவே சொல்லுகிறேன் கண்டுகொள்ளே. 9

சவுக்காரம் யெண்ணெய் கழட்ட

கண்டுகொள்ளு பூனீறு படியும்ரெண்டு
சுற்சுண்ணம் படிரெண்டு சட்டியிட்டு
பண்டுபடப் பாணியது படியும்யெட்டு
பதிவாக யிட்டுமே கலக்கிநீயும்
துண்டுபடத் திரிநாள்வை பின்புநீயும்
துடியாக நீருதனை யிருந்துப்பின்பு
கொண்டுபடத் துத்தமது சேருஒன்று
குணமாகக் கரியில்வைத்து ஊதிக்கொள்ளே. 10

துத்தச்சுண்ணம்

ஊதியே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
உடனெடுத்து முன்னிருத்த சவுக்காரத்தில்
வாதியே துத்தமென்ற சுண்ணமிட்டு
வடிவாக ஒட்டயெரி குளம்புபோல
நாதியே அக்ப்பையினால் துளாவிக்காய்ச்சி
நலமாகச் சேருபோல் பருவம்பார்த்து
கோதியே சாம்பலது பொடித்துநீயும்
குணமாகச் சுளகுதனி லிட்டிடாயே. 11

இட்டுமே சாணுசாஞ் சாம்பல்தன்னில்
யிதமாக அதின்பேரில் துணிவிரித்து
கட்டுமே சட்டிதனில் காய்ச்சுகின்ற
கனிவான சவுக்காரக் குளம்புதன்னை
பட்டுமே அகப்பையினால் மொண்டுஊத்து
பதிவாகப் பத்துண்டை யாகஊத்து
தட்டுமே மேலுமந்தச் சீலையிட்டு
தடையறவே யெடுத்துமே பார்த்திடாயே. 12

பஞ்ச சுண்ணம்

பார்த்திடவே எண்ணைக்கும் உண்டைபோலே
பதிவான விளாங்காய்போ லுருட்டிநீயும்
ஏத்திடவே ரவிதனிலே காயவைத்து
யேழைமதி பாகாமல் பின்புநீயும்
சோத்திடவே அஞ்சுசுண்ணம் வைக்கக்கேளு
குணமாகக் கிழிஞ்சியொடு அண்டஞ்சங்கு
நாத்திடவே நத்தையொடு சுக்கான்கல்லு
நலமாக வகைக்கிஒரு சேருஒன்றே. 13

சேரொன்று கல்வத்தி லிட்டுநீயும்
சிறப்பாகச் சுண்ணாம்புத் தண்ணீர்விட்டு
பாரென்று யிருசாம மறைத்துவில்லை
பதிவாகத் தட்டியே காயவைத்து
நானென்று கரியில்வைத்து நல்லாயூது
நலமாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரு
வாரென்று அஞ்சுசுண்ண மாகும்பாரு
வடிவாக வகையதனை வழுத்தக்கேளே. 14

சவுக்காரச் சுண்ணம்

வழுத்தவே முன்வைத்த சவுக்காரத்தில்
வகையாக உண்டைமேல் சொல்லக்கேளு
நழுத்தவே அஞ்சுசுண்ணங் கவசமிட்டு
நலமாகக் கட்டியே காயவைத்து
அழுத்தவே பத்தெருவி லடுக்கிப்போடு
அன்பான சவுக்காரச் சுண்ணமாச்சு
பழுத்தவே மேற்கவசந் தள்ளிப்போடு
பதிவாக உண்மைதனைப் பதியவாங்கே. 15

வாங்கியே பீங்கானி லிட்டுப்பாரு
வடிவாகப் பூப்போலே பொருமிநீரும்
தாங்கியே சகலமுந்தான சுண்ணமாகும்
தடையில்லாச் சவுக்காரம் ஆடுமாட்டும்
ஏங்கியே வழலையென்ற சுண்ணமாச்சு
எளிதாகத் துருசதுவுஞ் சுண்ணமாகும்
பாங்கியே துத்தத்தின் மார்க்கந்தன்னை
பதிவாக பார்த்திடிலோ பலனுமாமே. 16

பலனாக வழலைதா னிதுவேயாச்சு
பத்தியாய்ச் சவுக்கார மிதுவேயாச்சு
கலனாக வெள்ளையென்ற சாரையாச்சு
கருத்துள்ளே நபிமார்கள் வைத்துக்கொண்டு
தலமாச் சவுக்காரம் வேறேயென்று
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டார் உலகவாதி
பலமாகப் பூனீற்றை யெடுத்துக்காய்ச்சி
பத்தியா யலைந்துமே மாளாவாரே. 17

துருசுச் சுண்ணம்

மாளாமல் முன்வைத்த சவுக்காரத்தை
மதியாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
தேளாக வீரமது நாலத்தொன்று
சேர்த்துஅரை சிவப்பாகும் பின்புநீயும்
காளாகத் துருசியென்ற கட்டிமேலே
காரியமாய் லேபித்துக் கதிரில்வைத்து
பாழாகப் போகாமல் அதிலேபின்பு
பதிவாக அஞ்சுசுண்ணங் கவசங்கட்டே. 18

கட்டியே கதிரில்வைத்துக் குக்குடத்தில்
கனிவாகப் போட்டுமே பின்புநீயும்
தாட்டிப்பார் துருசதுவுங் கொக்குப்போலே
தான்இருக்கும் அல்லாவைத் தொழுதுபோற்று
முட்டியே கொஞ்சமெடு கையில்வைத்து
முனையான பாணிதனைக் கொஞ்சம்விட்டால்
துட்டியா யாயிரந்தேள் கொட்டல்போல
துடியாக யிருந்திடுமீ துண்மைதானே. 19

உண்மையா யித்துருசு காலனொக்கும்
உறுதியால் நபிமார்கள் துருசுதன்னை
தண்மையாய்ச் சுண்ணத்தை வைத்துப்பின்பு
தடையறவே மக்காவின் மேலவாசல்
வண்மையாய்க் கோட்டையது கட்டினார்கள்
வடிவாக மதிலெல்லாந் தங்கமாகும்
பெண்மையாய்த் துருசினுட சுண்ணப்போக்கை
போக்கோடே ஒருவருக்கும் பேசொண்ணாதே. 20

தாளகச் சுண்ணம்

பேசவே துருசினுட சுண்ணந்தன்னை
பெலமாகப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு
தாசமாய்ப் புகைநீரை விட்டுஆட்டி
தாளகத்தைப் புரட்டியே குறட்டினாலே
வாசமாய்க் கதிரில்வைத்துப் பின்புநீயும்
வடிவாகக் குக்குடமாய்ப் போட்டுப்பாரு
நாசமாய்த் தாளகமுஞ் சுண்ணமாகும்
நமன்விலகும் பாருலகில் நடத்தையாமே. 21

நடத்தையாய்த் தாளகமும் நீறிற்றானால்
நாடுதனில் மண்ணோடு விண்ணுமெல்லாம்
படத்தையாய்ப் பொன்னாகும் லோகந்தன்னில்
பதிவாகப் பாய்ச்சிடவே நீறிப்போகும்
கடத்தையா யுபரசங்க ளெல்லாம்நீறும்
கணக்குண்டோ எச்சரக்குங் கட்டிநீறும்
குடத்தையிட்டுத் தண்ணீரை முகத்தல்போலே
கொள்ளையே கொள்ளையிதில் வாதந்தானே. 22

தங்கச் சுண்ணம்

தானென்ற தாளகநீர் களஞ்செடுத்து
தடையறவே உமிநீரால் மத்தித்தேதான்
வானென்ற ஏமத்தைத் தகடுவாங்கி
வடிவாக அதன்பேரி லப்பிப்பின்பு
கானென்ற காடையென்ற புடத்திலிட்டால்
கதிபெருக யெடுத்துப்பார் யேமராசன்
பானென்றே நீறிவிடும் பகரப்போகா
பத்திமுத்தி தாளகத்தி நீறுதானே. 23

நீறுதான் யேமமென்ற நீறுதன்னை
நிலையாக ரவிநூறு ஒன்றுருக்கி
காறுநீ ஒன்றிட்டு உருக்கிப்பாரு
கண்கொள்ளா மாத்தாகுங் கண்டுகொள்ளு
பாறுமேபோகாது யிடைதான் வெள்ளி
பாய்ச்சியிட்டு உருக்கிநீ யெடுத்துப்பாரு
ஆறுமே மாத்தென்ன பத்துமாகும்
அடைவாகப் புடமிறங்கும் ஆண்மையாமே. 24

ஆண்மையால் சவுக்காரம் வைத்துநீயும்
ஆடினால் நபிமார்கள் அன்புமெத்த
தாண்மையாய்த் துருசதுவை நீத்திப்பின்பு
தடையறவே தாளகத்தைப் பின்னேநீத்தி
பாண்மையா யதின்பின்னே தங்கம்நீத்தி
பாருலகில் நபிமார்கள் தங்கஞ்செய்தார்
வாண்மைபெற யிப்படிக்கிப் பார்த்துத்தானும்
மதிப்பான நபியிலெட்சம் பகரலாமே. 25

பகரவே வழலைவிட்டால் வாதம்பொய்யாம்
படிப்படியா யேறுதற்குப் பலிதமில்லை
உகரவே கட்டினமு முருக்கின முமில்லை
ஓடாசுக் கானில்லாக் கப்பலாகும்
தகரவே பாயில்லாக் கப்பலாகும்
தாட்டிகமாய்க் காலில்லா மனிதராகும்
துகரவே மரமேறிக் கைவிட்டாக்கால்
துடியொக்குஞ் சவுக்காரம் விட்டபேர்க்கே. 26

விட்டபேர் தனையொக்கும் வாதமாட்டு
விதமாக வழலையென்ற சுண்ணத்தாலே
பட்டமது சீர்தப்பில் பாங்காய்ப்பாரு
பதிவாகத் தானாடும் வழலைமார்க்கம்
கெட்டபேர் தான்விட்டுப் புலம்புவார்கள்
கேள்விதா னறியாத்மல் சுட்டுக்கெட்டு
முட்டவே நூல்களெல்லாம் பொய்தானென்று
மூதறிவு யில்லாமற் பேசுவாரே. 27

பேசுவா ருலகத்தில வாதிதானும்
பிரித்துமே சாஸ்திரத்தைப் பாராதாலே
ஏசுவார் அழுதிடுவார் துப்பிவைவார்
ஏதுமில்லா உலுத்தரவர் வாதிதானும்
காசுபணம் போச்சென்பார் சவுக்காரத்தைக்
காணோமென்பார் கைபாகந் தெரியாதாலே
வேசிதான் சொன்னதுபோல் சொல்லிச்சொல்லி
வேதாந்த மார்க்கமாய்த் திரிகுவாரே. 28

திரிகுவார் சண்டைசெய்வார் சீசமாவார்
திட்டியே கெட்டமென்பார் நூலைக்காணார்
பிரியமாய்ச் சொல்லிவிட்டுப் பிரட்டுப்பேச்சை
பேதையர்போல் புலம்பியே பிரண்டுருண்டு
விரியமாய்ப் பின்னையொன்று பார்ப்பமென்பார்
விதமில்லார் பதமில்லார் விருப்பமில்லார்
சரியாக காரியத்தை யறியான்றன்னை
தானடிப்பாய் ஆயிரத்தின் காலிதானே. 29

தாம்பூரச் சுண்ணம்

தானென்ற தாளகநீர் தனையெடுத்து
தாட்டிகமாய்க் கல்வமிட்டு வாய்நீராலே
கானென்ற தாம்பூரத் தகட்டில்பூசி
கனியவே காடையென்ற புடமுமிட்டால்
நானென்ற தவம்போல் நீறுமாகும்
நாடியே நவலோகம் நூற்றுக்கொன்று;
பானென்று யிட்டுருக்கு யெல்லாந்தங்கம்
பதிவாக யெடுத்துவித்துச் செல்வுசெய்யே. 30

சூதக்கட்டு

செல்வுசெய்து நீபிரெளத்தைத் தின்றுநீயும்
திடமாக யிருந்துமே சொல்லக்கேளு
நவமாக விரானலியிலை தனைப்பிடுங்கி
நன்மையாய்த் தாம்பரத்தின் சுண்ணங்கொஞ்சம்
வலமாக யிட்டுமே பிசைந்துவைக்க
வடிவாக நீராகும் வண்மைபாரு
கலனில்லா நீரையிறு பின்புதானும்
கனிவாகச் சூதமொரு சேருவாங்கே. 31

வாங்கியே சுரண்டியிட்டு விராலிநீரை
வகையாக விட்டுநீ மார்க்கங்கேளு
தாங்கியே சூதந்தான் முழுகவிட்டு
தளம்பவே அடுப்புதனில் கொதியிட்டாக்கால்
தூங்கியே சூதமது கட்டிப்போகும்
துடியாக உருக்கியே மத்தங்காயில்
நீங்கியே வுள்வைத்துப் புடமும்பத்து
நீதமாய்ப் போட்டுநீ யெடுத்துப்பாரே. 32

ரசமணி

எடுத்துப்பார் பால்போலே தானிருக்கும்
யிதமாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
அடுத்துமே வெள்ளிபோல் கண்விட்டாடும்
அதையெடுத்துச் சுண்டக்கா யளவதாக
படுத்துமே மணியிருபத் தொன்றுருக்கி
பதிவாகக் கயரதனில் கோர்த்துநீயும்
தடுத்துமே முடிச்சுத்தான் யிருபத்தொன்று
தப்பாமல் போட்டுமே தாக்கிடாயே. 33

தாக்கிடவே கையதனில் வைத்துநீயும்
தடையறவே மகமதுவை நோக்கிப்பின்பு
வாக்கிட்டுப் பிஸ்மில்லா ரகுமானென்று
வகையாக ஐந்துதிரந் தொழுதுநீயும்
நோக்கிட்டு கால்மடித்துக் கையைநீட்டி
நுணுக்கமாய்க் காதுதொட்டு கண்ணைத்தொட்டு
சொக்கிட்டுத் தொழுதுநீ போற்றப்போற்ற
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுமாமே. 34

களங்கு

தொழிலாகக் கட்டினதோர் சூதம்நாலு
தோத்தரித்து யெடுத்துமே குகையிலிட்டு
வழியோடே உருக்கிடவே உருகிநிற்கும்
வடிவாக நாலுக்கு ஒன்றுதங்கம்
துழியாகத் தங்கமிடை நாகம்போட
துப்புரவாய் வாங்கியே உருகிநிற்கும்
பழியாக யெடுத்துப்பார் களங்குமாகும்
பாய்ச்சிடவே நவலோகம் யேமமாமே. 35

ஏமமாம் நூற்றுக்கு ஒன்றுயிய
யென்நபிமார் சொன்னதிது ஆணிக்கொக்கும்
வாமமாம் உப்புக்குங் காவிக்கப்பா
வடிவாக யிருந்துவிடும் வண்மைமெத்த
தாமமா யிதைவித்துச் செலவுசெய்து
தாக்கிட்டுச் செந்தூரம் பண்ணக்கேளு
நாமமாய்ச் சூதமுண்ட களங்குதன்னை
நாடியே பலம்நிறுத்துக் கல்வத்திட்டே. 36

வெடியுப்புத் திராவகம்

இட்டுமே புகைநீர்தான் ஒன்றுகேளு
யிதமாக வெடியுப்பு பலமும்பத்து
கட்டுமே சீனமது பலமுங்கேளு
கனிவாக யிருபத்து அஞ்சுமாகும்
நட்டுமே கல்வத்தி லிட்டுக்கேளு
நலமாகப் பொடியாக்கிக் கலையத்திட்டு
முட்டுமே வாலையென்ற சட்டிமூடி
முனிவாக உளுந்தாலே சீலைசெய்யே. 37

செய்துமே அடுப்பில்வைத்து யெரித்துவாங்கு
செயமாக முன்னீர்தான் வெள்ளையாகும்
பைதுமே வெள்ளையைத்தான் தள்ளியிட்டு
பாங்குபெற மஞ்சள்நீர் வருகுமப்பா
வைதுமே மஞ்சளது நீரைத்தானும்
வடிவாகப் பிடித்துமே குப்பிதன்னில்
நைதுமே அடைத்துவைத்து மறுநாள்தானும்
நலமாகச் சொல்லுகிறே னாட்டுள்ளோரே. 38

களங்குச் செந்தூரம்

நாட்டியே முன்வைத்த களங்கிலிட்டு
நலமாக யிருசாமங் கரையஆட்டி
வாட்டியே பீங்கானில் உமியில்வைத்து
வடிவாக வருத்துமே காசிக்குப்பி
நாட்டியே அரைவாசி அரைத்துநீயும்
நலமாகச் சீலைமண்தான் பிலக்கச்செய்து
பூட்டியே பணிரெண்டு சாமந்தீதான்
போட்டாத்தி யெடுக்கச்செந் தூரமாமே. 39

செந்தூர மாகுமது முருக்கம்பூப்போல்
செல்வமது நவலோகம் நூற்றுக்கொண்டு
பந்தூர மிட்டுமே உருக்கிப்பாரு
பகலவன் போல் நிறமாகும் பத்துமாத்து
நந்தூரம் உப்புக்குங் காவிக்குந்தான்
நலமாக யிறங்குமது நபிமார்செய்வார்
கந்தூரம் வித்துமே செலவுசெய்து
கர்த்தனைத்தான் துதித்துமே கண்டுகொள்ளே. 40

கண்டுகொள்ளு பணவிடைதான் தேனிலுண்ண
கனிபோலா மண்டலத்திற் காயந்தானும்
பண்டுபடும் செவ்வலரிப் பூப்போலாகும்
பதிவாக நரம்பிறுகும் பலிதமுண்டாம்
குண்டதுவுஞ் சதைதனிலே நுலைந்திடாது
குணமாகும் நபிமார்கள் தேகமாகும்
விண்டுமுன்னே மலைதனிலே குத்தினாக்கால்
விதமாகத் தவிடுபொடி யாகுந்தானே. 41

பூரச்சுண்ணம்

ஆகுமே முன்வைத்த தாளகத்தை
அடைவாகக் கல்வமிட்டு உமிநீர்விட்டு
வேகுமே அதைக்குலைத்துப் பூரமேலே
விதமாக மத்தித்துக் கவசங்கட்டி
நாகுமே காடையென்ற புடமும்போட
நலமாக நீறிவிடும் நாட்டிலோர்க்கு
பாகுபெறப் பூரத்தின் நீறுதன்னை
பதிவாக யெடுத்துமே பாகங்கேளே. 42

வங்கச்சுண்ணம்

பாகமாய் வெள்ளீயந் தகடடித்து
பதிவாகப் பூரநீர் தன்னைப்பூசு
யோகமாய்ப் புடம்போடு வங்கம்நீறும்
ஆத்துயெடு கல்வமிட்டு உறுதிகேளு
தாகமாய் நாகமதைச் சுத்திசெய்து
தாட்டிகமாய் வில்லைதன்னைச் சாய்த்துநீயும்
மோகமா யதின்மேலே வங்கநீற்றை
மூதிச்சுக் கட்டியே புடமும்போடே. 43

நாகச்சுண்ணம்

போட்டெடுத்த நாகமது சுண்ணமாகும்
புகலரிய சுண்ணமதை யெடுத்துநீயும்
நாட்டிலே செம்புநூ றொன்றுக்குத்தான்
நாடியே ஒன்றுகொடுத் துருக்கிப்பாரு
கூட்டியே மாத்துத்தான் பதினாறாகும்
கூகூகூ நபிமார்போல் கொள்ளைகொள்ளு
மூட்டியே வித்துநீ செலவுசெய்து
முடிவான பள்ளிதனைக் கட்டிவையே. 4

கட்டிவைத்தால் பலபேர்கள் தொழுதுகொள்வார்
கனிவாகும் நபிமார்கள் பத்திவந்து
குட்டியே உனக்குமே வரங்கள்தந்து
கூட்டியே மக்காவின் தேசத்துக்கு
முட்டியே கொண்டுபோய் அல்லாவோடே
முடியவே தெரிசனங்கள் காட்டுவார்பார்
நாட்டியே மகமதுவைக் காட்டுவார்பார்
நலமான பாகமிது நாடிப்பாரே. 4

நாடிப்பார் வாதங்கள் வந்துதானால்
நபிமாரை உறுதியாய்த் தொழுதுகொள்ளு
கூடிப்பார் நூலொத்த குரானைத்தானுங்
குணமாகப் படித்தோதக் குணமுமாகும்
வாடியே திரியாமல் தொழுதிரைஞ்ச
மார்க்கத்துக் கழகாகும் வடிவுமாகும்
கோடிபேர் நபிமார்கள் கண்டுபேசக்
குணமாகும் யென்வசனம் கூறுமாமே. 4

லிங்கச்சுண்ணம்

கூறாக நாகநீற் றனையெடுத்து
குணமாகக் கல்வத்தி லிட்டுநீயும்
காறாக உமிநீரைக் குத்திப்பாரு
கருத்தாகக் குளைத்துமே லிங்கத்துக்கு
பாறாகப் பூசிபுட மிட்டுப்பாரு
பதிவாக லிங்கமது நீறுங்கண்டாய்
தூறாகச் சொல்லாதே லிங்கநீற்றை
துடியாகத் தங்கமதைத் தகடுதட்டே. 4

தங்கச்சுண்ணம்

தட்டியே லிங்கநீர் தனையேபூசி
தாக்கிடவே குக்குடத்தில் தங்கம்நீறும்
முட்டியே தங்கநீர் தனையெடுத்து
முடிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
வட்டியே யிட்டிடவே மாத்துக்கேளு
வடிவாக ஆயிரத்தி யெட்டுமாத்து
கட்டியே திரியாதே யிந்தவித்தை
கனிவாகச் செய்யாதே கண்டுகொள்ளே. 48

சாரக்கட்டு

கண்டுமே லிங்கநீர் தனையெடுத்து
காரணமாய்ச் சாரத்தின் கட்டிமேலே
பண்டுபட அரைத்துமே கவசங்கட்டி
பதிவாகக் குக்குடத்திற் போட்டுவாங்கு
தொண்டுபடும் நவச்சாரம் தந்தம்போலாம்
துடியாக யெடுத்துமே வைத்துககொள்ளு
வண்டுபோல் நாகமதை உருக்கிநீயும்
மயமாக யிலுப்பெண்ணை தன்னில்சாயே. 49

நாகக்களங்கு

சாய்க்கவே நாகமது யெண்ணைகக்கும்
சரியான நாகமது சேருஒன்று
மாய்க்கவே குகையிலிட்டு உருக்கிநீயும்
மயமாக உருக்குமுகந் தன்னிலேதான்
வாய்க்கவே கட்டினதோர் சாரந்தன்னை
வடிவாக முகந்தன்னிலே தூவினாக்கால்
ஏய்க்கவே நாகமது கரியிலாடும்
யிதமாகப் புகையாது உறுதிதானே. 50
உறுதியாய்ப் புகையாது நாகந்தானும்
உத்துமே பலம்நாலும் வைத்துருக்கி
அறுதியாய்த் தங்கத்தை யிடையேசேரு
அடைவாக உருக்கியே யெடுத்துநீயும்
வறுதியா யுடைத்துமே செம்புபோட்டு
வடிவாக ஒன்றிட்டு உருக்கிப்பார்த்தால்
குறுதிபோல் மாத்தெட்டு காணும்பாரு
குணமாக உப்புகா விக்குந்தானே. 51

காவிக்கித் தானிறங்குந் தங்கந்தானும்
கனிவாக வித்துமே செலவுசெய்து
நாவியாய் நபிமார்கள் வணங்கத்தானே
நல்லபள்ளி வாசல்தான் கட்டிவைத்து
பாவியாய்ப் போகாமல் தொழுதுநீயும்
பதிவாகப் போற்றியே பணிந்துநீயும்
தாவியே அல்லாவைப் போற்றிநீயும்
தடையறவே யாகோபு சாற்றினாரே. 52

சரக்குகட்ட செயநீர்

சாற்றினார் தாளகத்தின் சுண்ணத்தோடே
சரியாக நவச்சாரம் பாதியிட்டு
வாத்தியே அரைத்திட்டுப் பனியில்வைக்க
வடிவாகப் பலபலெனச் செயநீராகும்
பாத்தியாய் சரக்குகளைத் தோய்ச்சுத்தோய்ச்சு
பதிவாகச் சூடனுட தீயில்வாட்டி
ஊத்தியே உருக்கிடவே உருகிநிற்கும்
உத்துப்பார் வெகுதொழில்க ளாடலாமே. 53

ஆடவே கட்டினதோர் சரக்குதன்னை
அடைவாக நவலோகந் தன்னிலீய
கூடவே நவலோக மெல்லாந்தங்கம்
குற்றமறப் புடத்துக்கு யிறங்கும்பாரு
வாடவே வித்துமே செலவுசெய்து
வடிவாகத் தொழுதுமே போற்றிசெய்து
ஊடவே உலகத்தில் சொல்லவேண்டாம்
உற்றுப்பார் வேதைமுகம் அறிவார்பாரே. 54

அறிவார்கள் தானிருந்தால் வாதமாகும்
அசடர்க்குச் சொன்னதினா லாபமில்லை
வறிவாகப் பொய்சொல்வார் நிலைத்தவாதி
வாதத்தை வழியோடே மிகவும்பார்த்து
குறிவாகக் கைபாக வினைகளெல்லாம்
கூறியே பார்ப்பார்கள் குணமுள்ளோர்கள்
செறிவாகச் சவுக்காரச் சுண்ணத்தாலே
செகத்திலே சகலமெல்லாம் நீத்திவாழே. 55

நீத்திடவே சரக்கெல்லாம் நீறிப்போகும்
நிலையான சரக்கெல்லாம் நேராய்க்கட்டும்
பார்த்திடவே சகலமெல்லாம் நீத்திப்போடும்
பதிவாகப் பொன்னாகும் பாரிலோர்க்கு
ஏத்திடவே பணமாகும் யில்லாப்போனால்
யிதமில்லை சதமில்லை யிடும்புமாகும்
கூத்திமகன் போலவே அலைவாரிந்தக்
கொடுமைக்கு யென்செய்வோம் கூறினோமே. 56

கூறினோம் புலவரிவாய்ச்சுடவும் வேண்டாம்
குடிகெடுத்த வாதிகளே சொல்லக்கேளு
பாரிலே பாகமாய்ச் செய்துகொள்ளு
பத்தியே உத்தமரைப் பார்த்துத்தேறி
ஊரிலே நூலறிந்து வினையறிந்து
உத்துமே பார்த்திடவே உறுதியுண்டு
நீரிலே சவுக்காரச் சுண்ணம் வைத்து
நேராகப் பிழைப்பதற்குப் பண்ணிடாயே. 57

பண்ணவே முன்வைத்த தாளகத்தைப்
பதிவாக நீறெடுத்து வீரங்காலாம்
உன்னிடவே சத்துஅரை உமிநீர்விட்டு
உறுதிபெற அயத்தகடு தன்னிற்பூசி
நன்னிடவே குக்குடத்திற் புடமுமிட்டால்
நாடியே தும்பைமலர் போலேநீரும்
கண்ணிடவே நவலோகம் நூற்றுக்கொன்று
காரணமா யிட்டுப்பார் கருத்துள்ளோரே. 58

கருத்துள்ளே நினைத்துமே யெடுத்துப்பாரு
கனிவாகத் தங்கமது பத்துமாத்து
உருத்தாக யெடுத்துமே வித்துநீயும்
உறுதிபெறச் சவுக்காரம் உண்மைபார்த்து
நருத்தாக வைத்துமே தாளகத்தை
நலமாக வைத்துநீ சரக்கெல்லாந்தான்
பொருத்தவே நீத்திவிடு புலம்பவேண்டாம்
பூவுலகில் ரசவாதம் பேணிப்பாரே. 59

பேணியே செந்தூரங் களங்குபண்ணி
　　பெலமாக நலலோகம் பழுக்கச்செய்து
ஆணியே வித்துமே செலவுசெய்து
　　அடவாகப் பாகமதை அறிந்துகொள்ளு
ஊணியே ஒருவேலை செய்துநீயும்
　　உறுதியாய் வித்துமே செலவுசெய்து
காணியே கைக்கடங்கப்பண்ணி நீயும்
　　கருதியே திரிந்துநீ வைத்துக்கொள்ளே. 60

கொள்ளவே நபிமார்கள் சொன்னநீதி
　　குணமாகக் கண்டுமே நூலைக்கண்டு
துள்ளியே திரியாதே நூலைப்பாரு
　　துடியோடு செய்யாமற் கொண்டுநீயும்
புண்ணியமா யருவருப்பைத் தள்ளிநீக்கி
　　புலப்படவே செய்திட்டுப் பொருமையாக
நண்ணியே பார்க்கவே உருவுமாகும்
　　நலமாக யாகோபு நலஞ்சொன்னாரே. 61

நலமான வழலையத்தான் முன்னேசெய்து
　　நாடியே துரிசுதனை நீத்திப்பின்பு
பெலமாகத் தாளகத்தை நீத்திநீயும்
　　பிரபலமாய் நவலோக மெல்லாம்நீத்தி
வலமாக ரசங்கட்டி மணியேசெய்து
　　வடிவாகத் தொழுதிரைஞ்சி வடிவங்கண்டு
குலமாகக் குலத்திலே கூடிவாழு
　　கூக்குரலாய் ரசவாதம் யேவலாமே. 62

ஏவலாய் முன்வைத்த துரிசுச்சுண்ணம்
　　யிடைநேரே வீரத்தை விட்டரைத்து
காவலாய்க் காரீயத் தகட்டிற்பூசி
　　கனமாகப் புடம்போடப் பூப்போல்நீறும்
தாவலே தனையெடுத்து நவலோகத்தில்
　　தடவியே புடம்போடத் தங்கமாகும்
நாவலே தங்கமென்ன நூறுமாத்து
　　நலமாக யாகோபு சொன்னவாரே. .. 63

சொன்னதொரு நூல்தனிலே உழைத்துநீயும்
சுயமாகச் சவுக்காரச் சுண்ணம்பண்ணி
நன்மையாய்த் துருசுதனை நீத்தித்தேர்ந்து
நலமானார் நபிமார்கள் கோடாகோடி
இன்னிலத்தில் நபிகளிடம் சேர்ந்துபோயி
யிதமாகப் பாகமதைக் கேட்டுக்கொள்ளு
முன்னமே சொல்லிவிட்டேன் சவுக்காரத்தை
முடிவாகப் பார்த்தாக்கால் முத்தியாமே. 64

முத்தியாஞ் சவுக்கார மில்லாச்சுண்ணம்
மூலையிலே போட்டிடுநீ முத்திமுத்தி
சித்தியாய்த் துரிசினுட சுண்ணத்தாலே
சிறப்பாக ரசங்கட்டும் துடியுமெத்த
துத்தியமாய்த் தாளகத்தை விட்டால்வர்ணம்
துடியில்லாத் திடமில்லை சூதுகண்டு
புத்தியாய்க் கண்டுமே பிடித்துக்கொள்ளு
புலம்பியே திரியாதே போக்குமாமே. 65

போக்கான மவுனமா யிருந்துகொண்டு
புகலறிய சவுக்காரம் வைத்துத்தேறு
வாக்காகக் கைபாக வரிசையாலே
வகைகண்டு துகையாக வளப்பமாக
நீக்காகப் பொருளறிந்து நிலைமைபார்த்து
நீநிலத்தில் சரக்கைத்தான் மிகவும்நீத்தி
பாக்கியமா யுலகத்தி லிருந்துவாழு
பத்தியுடன் செய்திடவே முத்திதானே. 66

முத்தியாய்ச் சவுக்கார வைப்புதன்னை
மூவுலகு மெய்க்குமே நபிமார்சொன்னன
புத்தியாய்க் கண்டுமே தேறிநீயும்
பிசகாமல் கைபாக வரிசைகண்டு
நித்தியமாய் வைத்துமே செய்துபாரு
நீநிலத்தில் வணங்கியே சொல்லக்கேளு
சத்தியமாய்ச் செய்திடவே சித்தியாகும்
சரியான பாகமிது செய்துபாரே. 67

வங்கச் செயநீர்

செய்துபார் காரியம் பலமும்பத்து
செயமாக புதுச்சட்டி தன்னிலிட்டு
பைத்துமே உருக்கியே வெடியைமாட்டு
பத்தியா யுருக்கியது சுண்ணமாகும்
வைத்துமே சுண்ணயிடை துத்தந்தன்னை
வடிவாக யிடைசமனாச் சேத்தரைத்து
கைத்துமே சுண்ணாம்புத் தண்ணீராலே
சுணக்காக அரைத்துவில்லை கதிரில்வையே. 68

கதிரிலிட்டுக் காய்ந்தபின்பு உலையிலிட்டு
கணக்காக ஊதிடவே கொடியசுண்ணம்
பதியாக யெடுத்துமே சாரஞ்சேர்த்து
பத்தியாய்ப் பீங்கானிற் பனியிலிட்டு
நிதிபெறவே நீராகும் நீருதன்னை
நிலையாக யிருந்துமே குப்பிதன்னில்
விதியாக உளத்தியே களஞ்சிவீரம்
விதமாக யிட்டுமெள்ளப் பனியில்வையே. 69

பனியில்வைக்கப் பலபலெனச் செயநீராகும்
பதிவாக நீர்தெளியும் பத்திநீரை
கனிவாக யெடுத்துவைத்துப் பின்புதானும்
காரணமாய்த் தாளகத்தை அயச்சட்டியிட்டு
தனியாகச் சுருக்கிட்டுச் சாமம்நாலு
தடையறவே யெடுத்துமே கவசங்கேளு
துணிவாக பிட்டுவங்கந் தனையரைத்து
துடியாகக் கன்னிப்பால் தன்னாலாட்டே. 70

ஆட்டியே யிருசாமஞ் சென்றபின்பு
அதைவில்லை கதிரில்வைத்துப் புடமுமிட்டு
நீட்டியே யிப்படிக்குப் புடமும்அஞ்சு
நேராக யிட்டுயெடு கொஞ்சந்தானும்
காட்டியே யெடுத்துவைத்துக் கரியினுள்ளே
கனிவாக உருக்கிப்பார் சிவந்துஆடும்
தாட்டிகமா யுடைத்துப்பார் வெட்டையாகும்
சரியாகப் பாகநலம் சரியாய்த்தானே. 71

சரியாக முன்னீயம் போலேநின்று
சல்தியா யுருக்கினால் தாரந்தன்னை
பரியாகச் சத்தில்லா உருக்கிற்றானால்
பதமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
விரிவாகச் சுருக்கிட்ட தாரமேலே
விரும்பியே ஒன்றுக்கு நாலாக்கட்டு
குரிபோல மேற்கவசங் கட்டிநீயும்
குணமாகச் சேவலென்ற புடத்தில்வையே. 72

வைத்துமே யெடுத்துநீ கல்வமிட்டு
வாகாகப் புகைநீரா லரைத்துநீயும்
முத்துமே தாளகத்தின் மேலேகட்டு
முனிவாகக் கதிரில்வைத்துக் காயப்போடு
சித்துமே குக்குடத்தில் போட்டுத்தீரு
திறலாயாக் கல்வமிட்டுப் பின்புநீயும்
நத்திபே புகைநீரை விட்டுஆட்டி
நலமாகத் தாளகத்தின் மேலேகட்டே. 73

கட்டியே யிப்படிக்குத் தரமும்அஞ்சு
கனிவாக புடமிட்டுயெடுத்துப்பாரு
முட்டியே கருஞ்சிவப்பு மாகும்பாரு
முனிவாகச் செப்புதனி லிடையேதாக்கு
குட்டியே தாங்கோடு கட்டினாப்போல்
குணமாக யிருக்குமது தாளகந்தான்
பட்டியே நவலோகந் தன்னிலீய
பதிவாக நொறுங்குமது பண்புமாமே. 74

பண்பாக னொறுங்கியதோர் லோகத்தூடே
பாய்ச்சிடு தங்கமதைப் பரிவாய்த்தானும்
உண்பாகக் கல்வமிட்டுப் புகைநீர்விட்டு
உறுதிபெற யிருசாமம் அரைத்துநல்லாய்
நன்பாக உமிநெருப்பில் வறுத்துப்போடு
நலமாகக் காசியென்ற மேருக்கேத்தி
வன்பாகப் பஞ்சிரண்டு சாமந்தீதான்
வடிவாக யெரித்திடவே வர்ணமாமே. 75

வரணமா முருக்கம்பூப் போலேவர்ணம்
வடிவாக யெடுத்துமே வகையைக்கேளு
தறணமாய்த் தங்கமேன்ற சிமிளில்வைத்து
தடையறவே நவலோகம் நூற்றுக்கொன்று
கறணமா யிட்டிடவே மரத்துப்பத்து
கனிந்துமே மகமதுவைத் தொழுதுபோற்றி
பறணமாய் வித்துமே செலவுசெய்து
பதிவான் காயத்தை நிறுத்திடாயே. 76

நிறுத்திடவே பணவிடைதான் மண்டலத்தில்
நினைவாக உண்டுவரக் காயந்தானும்
பறுத்திடவே சடமிறுகிக் காயசித்தி
பதிவாகச் செவ்வலரிப் பூப்போலாகும்
வறுத்துமே நோய்தவிடு பொடிகளாகும்
வடிவாகச் செவ்வலரிப் பூப்போற்கண்கள்
நறுத்துமே யிருந்துவிடு விந்துயேறும்
நலமான வாசியாம் நாட்டிலோர்க்கே. 77

நாட்டிலே வங்கத்தை முன்னூர்தன்னில்
நலமாகச் சொல்லிட்டேன் றெண்டும்ஒத்து
கூட்டியே கழித்துமே பின்புநீயும்
குணமாகச் சரக்குகளை குறித்துப்பார்த்து
தாட்டிகமாய்ச் செய்துவிடத் தங்கமாகும்
தனியாக்ச் செய்தாக்கால் டலனுமில்லை
ஏட்டிலே யெழுதினது பொய்யென்பார்கள்
யிதமாக யாகோபு சொன்னவாறே. 78

சொன்னதொரு நூல்பார்த்து விதத்தைக் கண்டு
சோதித்தால் பலன்ருகுஞ் செய்துபாரு
கன்னல்போல் ருசியாகப் பார்த்துத் தேற
கனிவாகப் பிலனாக்க் கண்டுகொள்ளு
தன்னிலே திரியாதே சொன்னேனப்பா
தடையாகா வகையாக வரிசைக்கண்டு
முன்னமே சொல்லிவிட்ட நூலைப்பார்த்து
முடிவாகச் செய்தாக்கால் முத்தியாமே. 79

முத்தியாம் சுண்ணமென்ற காண்டத்துள்ளே
முடிவாக அறுநூறுஞ் சோதித்தேதான்
புத்தியாய் சோதித்து முன்னூர்பார்த்து
புலன்படவே யிந்தநூல் நூற்றன்பத்தைந்து
சத்தியமாய்ப் பார்த்துமே செய்தாயானால்
தவமாகும் வாதவருந் தடையேயில்லை
சித்திபெற யாகோபு சொன்னநீதி
சிறியோர்கள் செய்துமே பிழைக்கநன்றே 80

பிழைக்கவே ரசவாதிக் காகச்சொன்னேன்
பேருலகில் பிரளாமல் செய்துபாரு
உழைக்கவே உழுதாக்கால் பலனுமாகும்
உறுதியா யுழையாத வாதிதானும்
கழைக்கவே யிருந்துண்டு சுத்திச்சுத்தி
கனிவாகப் பொய்கள்தான் சொல்வான்பாரு
தழைத்தமரம் போலவே யிருக்கவேணும்
தாட்டிகமா யாகோபு சொன்னவாரே. 81

சொன்னதொரு யென்னூலில் யெல்லாமெய்யாம்
சொற்பெரிய நபிமார்க ளாடும்ஆட்டு
கன்னல்போல் கரும்புருகி போலச்சொன்னேன்
காரணமாய் நபிமார்கள் என்மேற்கோபம்
இன்னிலத்தில் யெல்லோருங் கோபமாச்சு
யிருந்திடத்தி லிருந்துமே வேலைசெய்து
தன்னகரில் சித்தியே பெறலாமென்று
தாட்டிகமா யாகோபு தான்சொன்னாரே. 82

சொன்னதொரு சுண்ணங்கள் பொய்யேயென்றால்
சொற்பெரிய வேதமெல்லாம் பொய்யேயாகும்
கன்னல்போல் வேதமெல்லாம் நிசமதாகும்
கனிவாக வாதம்பொய் யென்றபேர்க்கு
நன்னயமா யவர்வாயில் மண்தான்பேர்ட்டு
நலமாக பள்ளிதனில் சமாதுவைப்பார்
இன்னிலத்தி லவர்பேச்சே வேண்டாமென்று
யிருந்துரைத்தார் யாகோபு யிதமதாமே. 83

இதமாக நிலைத்ததொரு வாதிதானும்
யின்பதுன்ப மில்லாது பொய்கள்சொல்லார்
பதமாகச் செய்திடுவா ருலகத்திற்றான்
பத்தியாய்க் குருமுடிக்குங் காலங்காண்பார்
நிதமாக அனுசரிப்பார் நேர்மையாக
நிலைதப்பார் தப்பினா லின்னமொன்று
விதமாகச் செய்வார்கள் நிலைத்தவாதி
வித்தகரம் யாகோபு விளம்பினாரே. 84

கற்சுண்ணச் சவுக்காரம்

விளங்கியதோ ரின்னமொரு சுண்ணங்கேளு
விதமாக வெகுசுருக்கு முன்னேபாரு
நளங்கியே வெள்ளைக்கல் தனையெடுத்து
நலமாகப் பச்சையாய்க் கல்லைத்தானும்
வுளங்கியே ஆயிரங்கல் லெடுத்துநீயும்
உவர்மண்ணு சுண்ணாம்பு நேராய்க்கூட்டி
துளங்கியே பாணிபடி யெட்டுஊத்தி
துடியாகக் குமுறவே யெரித்திடாயே. 85

எரித்திடவே வெள்ளைக்கல் கட்டிப்போகும்
யிதமாகக் காளவாய் தன்னிலிட்டு
விரித்திடவே நீத்தியதைப் பாணிகேளு
விதமாக ஒன்றுக்கு நாலுதண்ணீர்
முரித்திடவே விட்டுஅதை மண்டலந்தான்
முட்டியா யிட்டுவைக்க உப்புத்தானும்
குரித்திடவே உப்பாகும் உப்பெடுத்து
குலமாக வைத்துமே சொல்லக்கேளே. 86

சொல்லவே மடையனைத்தான் கரியிலிட்டு
சுகம்பெறவே ஊதிவிடக் கடுஞ்சுண்ணமாகும்
மெல்லவே ஊதினதோர் துத்தச்சுண்ணம்
மேன்மையாய்ப் பலம்நாலு கல்வத்திட்டு
நல்லதொரு கற்சுண்ணத் துப்புதன்னை
நாடியதோ ரிடைக்கிடைதான் சேர்த்தரைத்து
பல்லதொரு சுண்ணநீர் விட்டரைத்து
பதிவாக வில்லைதட்டிக் கதிரில்வையே. 87

கதிரதனில் வைத்துமே காய்ந்தபின்பு
கனிவாக அஞ்சுகண்ணக் குகையில்வைத்து
நிதிபெறவே புடம்போட்டு யெடுத்துப்பாரு
நிலையாகச் சவுக்காரச் சுண்ணமாச்சு
விதியாகத் துருசுதான் உடனேநீறும்
விதமாகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
கெதிவேறு யில்லாமல் வாதமார்க்கம்
கேட்டவுடன் தெண்டனிடும் கிருபையாமே. 88

கிருபையாய் முன்வைத்த சவுக்காரத்தை
கெருவமா யெடுத்துமே நாலத்தொன்று
தறுபமாய் வீரமது சேர்த்துநீயும்
தடையறவே அறைந்துமே துருசுக்கப்பி
கறுமையாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
கனமாகத் துருசதுவுஞ் சுண்ணமாச்சு
உறுவமாய்ச் சரக்கெல்லாங் கெஞ்சியாடும்
உத்தமனே வெகுபோக்கு உறுதிதானே. 89

உறுதியாய் நீறினதோர் துருசுச்சுண்ணம்
உத்துமே பலம்நாலு யெடுத்துக்கொண்டு
குறுதியாம் வீரமது பலமும்ஒன்று
குணமாக ரெண்டுமொன்றா யரைத்துத்தானும்
பறுதியாய் மனோசிலையின் மேலேகட்டு
பதிவாக கதிரில்வைத்துப் பின்புதானு
முறுதியாய்க் குக்குடத்தில் புடத்தைப்போட்டு
முத்துமே மனோசிலையுஞ் சுண்ணமாமே. 90

சுண்ணமா மனோசிலையின் சுண்ணத்தோடே
சுகமாக ஆட்டியரை நாலுக்கொன்று
வன்னமா யரைத்துமே வாய்நீராலே
மத்தித்துத் தங்கமென்ற தகட்டிற்பூச
நன்னயமாங் குக்குடமாய்ப் புடத்தைப்போடு
நாட்டியே தங்கமது நீறிப்போகும்
கன்னல்போல் நவலோகந் தன்னிலீய
காரியமாய்ப் பார்த்திடவே கணக்குமாமே. 91

கணக்கா நவலோக மெல்லாந்தானும்
காரணமாய்ப் பழுக்குமே கருத்துள்ளோர்க்கு
தணக்கமாய் மனோசிலையின் சுண்ணம்போலே
தனியாக வேலையில்லை தரணியோர்க்கு
குணக்காகச் சொல்லாதே புடமிறங்கும்
குறியாக மனோசிலையின் குறிப்புமெத்த
துணக்காக மனோசிலையின் சுண்ணத்தோடே.
துடியாக வீரமது ஒன்றுகூட்டே. 92

கூட்டியே வாய்நீரா லரைத்துநீயும்
குடியாகச் செம்பென்ற தகட்டில்பூசி
நாட்டியே குக்குடமாய்ப் போட்டுவாங்கு
நலமாகத் தாம்பூரஞ் சுண்ணமாகும்
பாட்டியே தாம்பூர சுண்ணந்தன்னை
பதிலாக கதலிதான் பழத்திற்கொஞ்சம்
தூட்டியே களஞ்சியிட்டுச் சாமம்வைக்க
துடியாகக் காய்போலே துணையுமாமே. 93

துணையாகத் தாம்பூர பற்பந்தன்னை
துடியாக விராலியிலை தன்னிலீய
அணையாக விராலியிலை தண்ணீராகும்
அடைவாகச் சாறுதனைச் சீஷாதன்னில்
வணையாக அடைத்துமே பின்புநீயும்
வடிவாகச் சூதமது சேருவிட்டு
மணையாக அயக்கரண்டி தன்னிலிட்டு
வாகாக அடுப்புதனிற் காயவையே. 9

காயவைத்து யெடுத்துப்பார் சூதந்தானும்
கடிந்துமே யிட்டிலிபோல் கட்டிப்போகும்
மாயவே யெடுத்துமே உண்டைபண்ணி
மயமாக யெலுமிச்சம் பழத்துள்வைத்து
நரயமரர் சொன்னபடி புடத்தைப்போடு
நலமாக யிப்படிக்குப் புடமுங்கேளு
ஏயமே யிருபத்தி ஒன்றுபோட்டு
யெளிதாக யெடுத்துமே சொல்லக்கேளே. 9

சொல்லவே கரியில்வைத்துச் சூதந்தன்னை
சுகமாக உருக்கிப்பார் சூதந்தானும்
கல்லவே கரியில்நின்று ஆடுமாடும்
கணக்காக ஆடினதோர் சூதந்தன்னை
மெல்லவே பலம்நாலு வைத்துருக்கி
விருப்பமாய்த் தங்கமொன்று நாகம்ஒன்று
கொல்லவே உருக்கிடவே களங்குமாகும்
கூட்டியிடை நவலோகம் நூற்றுக்கொன்றே. 96

ஒன்றாக யிட்டுமே உருக்கிப்பாரு
ஒகோகோ மாத்தென்ன பத்துமாகும்
தன்னான மலைதனில்சஞ் சரிக்கலாகும்
தடையறவே சூதமுண்ட பேர்க்குத்தானும்
கன்னான செவ்வலரி போலாந்தேகம்
கனிவாகப் பாகமாய்ச் செய்துதேற
நன்னாகப் பாகம்வந்தால் பலனுமாகும்
நாடியே யாகோபு நலஞ்சொன்னாரே. 97

சொன்னதொரு மனோசில்லயின் சுண்ணந்தன்னை
சுகமாகக் களஞ்சிநால் தனைநிறுத்து
பன்னகமாம் பித்தளையின் தகடுதன்னில்
பதிவாகக் கட்டியே புடமுமிட்டால்
நன்னயமாய் வெண்ணீறாய் நீறிப்போகும்
நலமாக நவலோகந் தன்னிலீய
கன்னல்போல் மாத்தென்ன பத்துமாகும்
கடிதாகப் புடமிறங்குங் கண்டுகொள்ளே. 98

கண்டுகொள்ளு யிதைவித்துச் செலவுசெய்து
கனிவாகப் பள்ளிதனில் போய்த்தொழுது
தொண்டுபடு வேதத்தைப் படித்துத்தேறு
துப்புரவாய் அல்லாவுந் துணையேசெய்வார்
பண்டுமே மனோசிலையின் சுண்ணத்தாலே
பாக்கியங்க ளுண்டாகும் பதிவுமெத்த
முண்டுமே செய்யாமற் செய்துகொள்ள
முக்கியமா யாகோபு மொழிந்தவாரே. 99

மொழிந்திடவே மனோசிலையின் சுண்ணந்தன்னை
        முனையான வாய்நீரால் மத்தித்தேதான்
வழிந்திடவே துரிசின்மேல் கட்டிநீயும்
        வடிவாகக் குக்குடத்தின் புடத்தைப்போடு
நழுந்திடவே வெண்ணீராய்ப் பொறுமிப்போகும்
        நாதாந்த சாரமுடன் யெளிதிழாலம்
கழிந்திடவே துரிசதுவுஞ் சுண்ணமானால்
        காடாகும் வாதமெல்லாங் கண்டுகொள்ளே.100

கண்டுமே துருசதுவின் சுண்ணத்தாலே
        கனமான சூதத்தைக் கரண்டியிட்டு
பண்டுமே துருசதுவை விராலிக்கிட்டு
        பதிவாக நீர்முறித்து நீரைவிட்டு
முண்டுமே கொதியிடவே கட்டிப்போகும்
        முடிவாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
வண்டுபோ லுருக்கியது ஆடும்நேர்மை
        வடிவாக வெள்ளிபொன்போ லாடலாமே. 101

ஆடுகின்ற சூதமது பலமும்நாலு
        அடைவாகத் தங்கமொன்று நாகமொன்று
கூடுகின்ற குகையில்வைத்து உருக்கிப்பாரு
        குணமாக யெலலாமுங் களங்கமாகும்
நாடுமே யிதைஉடைத்து நவ்லோகத்தில்
        நாட்டிடவே நூத்துக்கு ஒன்றுதாக்க
பாடுமுன்னே தங்கமது உடனேயாகும்
        பத்தியாய் உப்புக்குங் காவிதானே. 102

காவிக்கு உடனேதான் தங்கந்தானும்
        கனிவாகப் புடமிறங்குங் கருத்துள்ளோர்க்கு
பாவிக்குக் கிட்டாது வாதமார்க்கம்
        பதிவாக நல்லோற்குக் கிட்டுங்கிட்டும்
தாவிக்குக் கிட்டினால் தர்மம்பண்ணு
        தடையறவே ஞானத்தை மிகவேபாரு
கோவிக்குங் கைகண்ட வித்தைபோல
        குணமாகு மணமாகுங் குறுக்குமாமே. 103

குறுக்காகத் துருசுனுட சுண்ணம்வைத்து
குணமாகச் செய்தாக்கால் குறிப்புமாகும்
பறுக்காகச் சவுக்காரச் சுண்ணமில்லா
பதிவாகத் துருசதுதான் நீறமாட்டா
நறுக்காகச் சூதமது கட்டமாட்டா
நலமாகக் கட்டியே வேலைசெய்தால்
முறுக்காக யெல்லாமுஞ் சித்தியாகும்
மூதுணர்ந்து பார்த்தாக்கால் யெல்லாமாமே. 104

எல்லாமு மாகவே சவுக்காரத்தை
யிதமாக வைத்துமே வேலைசெய்தால்
பொல்லாமை வாராது துருசுநீறும்
போக்கோடே கருவிதுதான் புகலக்கேளு
நல்லறிவாய்த் தானகத்தை நீத்திக்கொள்ளு
நானிலத்தில் நவலோக மெல்லாம்யேமம்
கல்லாத மனிதரிடஞ் சேரவேண்டும்
கண்டுமே யாகோபு சொன்னவாறே. 105

வாறேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வகையான சவுக்காரத் தாலேயாச்சு
கூறேது கருவாச்சு கோடிவேதை
குணங்கெட்டுத் திரியாதே கொள்கியாடு
பார்தனிலே சித்தரெல்லாஞ் சவுக்காரத்தை
பாடியே மறைத்துவிட்ட பரிசுதன்னை
வீறேது உங்களுக்குச் சொல்லிவிட்டேன்
விதமான சவுக்கார மேவிடாயே. 106

வெடியுப்புச் சுண்ணம்

மேவியே வெடியுப்பு சுண்ணந்தன்னை
மேதினியோர் மெய்க்கவே சொல்லக்கேளு
காவியமாய் வெடியுப்பு அஞ்சாங்காச்சல்
கனிவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
ஒவியமாய்க் கல்லுரலில் போட்டுநீயும்
உத்துமே சீனமது பலமும்பத்து
தாவியே யெலுமிச்சம்பழம் பிழிந்து
தள்ளியே சக்கையது பலமும் அஞ்சே. 107

அஞ்சோடு யிதுமூன்றும் உரலிலிட்டு
ஆதியா யுலக்கையினா லிடித்துநைய
பிஞ்சோடு மெழுகுபதமா யெடுத்து
பேசாமல் புதுச்சட்டி அடுப்பிலிட்டு
கொஞ்சவே வில்லைபண்ணி அதனிலிட்டு
கொடியாகத் தீப்போடு நாலுச்சாமம்
மிஞ்சவே சங்குபோல் வெளுத்திருக்கும்
மீறாமல் சொல்லுகிற பாகங்கேளே. 108

பாகமாய் கொஞ்சமெடு மஞ்சள்தன்னில்
பதிவாக யிட்டுப்பார் உண்ணிரெத்தம்
யோகமாய்ச் சிவந்தாக்கால் பாகமாகும்
உறுதிபெறச் சிவக்காட்டால் திரும்பத்தானும்
மோகமா யெரித்திடவே சுண்ணமாகும்
முடிவான வெடியுப்புச் சுண்ணமாச்சு
தாகமா யெடுத்துவைத்துப் பின்புநீயும்
தடையறவே யின்னமொன்று சாத்துவேனே. 109

ரச பதங்கம்

சாத்துவேன் ரசபதங்கஞ் சொல்லக்கேளு
சரியாகச் சூதமது சேருஒன்று
போத்தவே கல்லுப்பு படியும்நாலு
புகலரிய செங்கல்மா ரெண்டுமாகும்
ஏத்தவே யிதுரெண்டு மிடித்துச்சட்டி
யிதமாக அடிகனத்த சட்டிதன்னில்
நாத்திசையு மெய்க்கவே அமுக்கிநீயும்
நலமாக நடுவிலே பள்ளம்பண்ண. 110

பள்ளமாய்ப் பண்ணியே சூதமிட்டு
பதிவாக மேற்சட்டி மூடிநீயும்
துள்ளாமல் யேழுசீலை மண்ணுஞ்செய்து
துப்புரவா யடுப்போத்தி யெரிக்கக்கேளு
விள்ளாதே ஒருவருக்குந் தீபமாகும்
விதமாகக் காடாக்கினி யாயெரித்து
தள்ளாதே பனிரெண்டு சாமந்தீதான்
தாட்டிகமா யெரித்தாத்து தருணமாமே. 111

ஆத்தியே சட்டிதனைத் திறந்துபாரு
அமர்ந்துமே உயரஅது யேறித்தானும்
கூத்திபோல் தும்பைமலர் போலிருக்கும்
குணமான பற்பமிது காரம்றெம்ப
சாத்தியே மயிற்குச்சி யால்வழித்து
தடையறவே சேரொன்று நிறுத்துநீயும்
பாத்திபனார் மெய்க்கவே கல்வத்திட்டு
பதிவாக யின்னமொன்று பகரக்கேளே. 112

பகரவே முன்வைத்த வெடியுப்புச்சுண்ணம்
பதிவான ரசபதங்க மிடையேசேர்த்து
நகரவே பழச்சாற்றால் சாமமாட்டி
நலமாகச் சூடனைத்தான் கொழுத்திவிட்டு
உகரமே வில்லைதனை வாட்டிநீயும்
உத்துமே யெடுத்துநீ கல்வமிட்டு
தகரவே சாரமது யிடையேசேர்த்து
தாட்டிகமாய் ரவிதனிலே வைத்திடாயே. 113

வைத்திடவே பலபலெனச் செயநீராகும்
வாகான யின்னீரில் வீரமிட்டு
கைத்திடவே சீஷாவி லடைத்துநீயும்
கனமான நபிமாரைத் தொழுதுபோற்றி
எத்திசையு மெய்க்கவே தொழுதுநீயும்
எனையாண்ட அல்லாவை யிறுதயத்தில்
முத்திபெறத் தொழுதுமே யிருந்தபின்பு
மூவுலகுக் கரசாநீ முயற்சிகேளே. 114

முயற்சியாய் வெடியுப்புச் செயநீராலே
மூவுலக மெய்க்கவே கல்லுப்புத்தான்
அயர்ச்சியாய்த் தெரிப்படங்கிக் கட்டிப்போகும்
அறிவான துருசியது சுண்ணமாகும்
நயற்சியாய்க் காரமுதல் கட்டிப்போகும்
நவச்சாரங் கட்டியே தந்தமாகும்
துயற்சியா யின்னீரிற் பாஷாணந்தான்
துடியான சுண்ணமாந் தோய்ந்துபாரே. 115

துருசுச் சுண்ணம்

தேர்ந்துமே செயநீரைப் பீங்கானிட்டு
துடியான துருசியது பலமும்நாலு
ஆய்ந்துமே வெடியுப்புச் செயநீர்தன்னில்
அன்பாகத் தோய்த்துமே பட்சம்போடு
காய்ந்துமே கதிரவன்முன் போட்டுவாநீ
கடிதான பசப்பத்து வெள்ளையாகும்
நாய்ந்துமே முன்வைத்த சவுக்காரத்தை
நலமாக மேல்கட்டிப் புடத்தைப்போடே. 11

போடவே துருசதுவுஞ் சுண்ணமாகும்
புகலறிய சுண்ணத்தால் வேதைகோடி
ஆடவே அண்டரண்டந் துளைத்துஆடும்
ஆதியாம் வெடியுப்புச் செந்நீராலே
கூடவே பொன்பிறந்து துருசியாலே
குணமான தாளகத்தால் பொன்னுரெம்ப
நாடவே சகலமுந்தான் சித்தியாகும்
நாதாந்த சாரமெல்லாம் நொடிக்குள்ளாச்சே. 11

ஆச்சப்பா துருசுதான் சுண்ணமானால்
அண்டரண்ட பேரண்டம் கொடிக்குள்ளாச்சு
நீச்சப்பா வெகுநீச்சு யென்றுசொல்லி
நிலையில்லா தென்றுமே சொல்லவேண்டாம்
காச்சினதோர் பால்போலே ருசிக்குங்கண்டாய்
கண்கொள்ளா வேதையாங் கண்டுகொள்ளு
பாச்சப்பா வெகுசுளுக்கு பரிவாஞ்சுண்ணம்
பத்தியுடன் செய்தவர்க்கு முத்திதானே. 11

தாளகச் சுண்ணம்

முத்தியாந் தாளகமும் பலமும்பத்து
முனிவான சுண்ணாம்பு நீரில்சுத்தி
நித்தியமாய் அயச்சட்டிக் குள்ளேயிட்டு
நிலையாக வெடிநீரைச் சுருக்குப்போட்டு
சத்தியமாய் யிருசாமஞ் சுருக்குப்போட்டு
சரியான முன்துருசுச் சுண்ணந்தன்னை
பத்தியாய்க் கட்டியே புடமுமிட்டால்
பதிவாகத் தாளகந்தா னீறுமாமே. 11

நீறான தாளகத்தைக் கல்வத்திட்டு
நீலையாகத் துருசியொரு பலத்தின்மேலே
காறான் கவ்சமது கட்டிநீயும்
கனமில்லா தெருவடுக்கிச் புடமுமிட்டால்
வற்றான் கொக்கது போல் நீறிப்போகும்
வடிவான துருசினுட நீறுதன்னை
தாறான நவலோகம் நூற்றுக்கொன்று
தாட்டிகமா யிட்டிடவே யேமமாமே. 120

ஏமமாந் தாளகத்தை நீத்தினாக்கால்
எளிதிலே தங்கமாம் யின்பமுண்டு
காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டு
கைப்போடு புளியுப்பு யெண்ணைவிட்டு
தாமமாம் பணவிடைதா னுண்டுவாநீ
தாக்கிடவே மேனியது தங்கமாகும்
வாமத்தை யுண்ணாதே யென்றுசொல்லி
வகையான யாகோபு வழுத்தினாரே. 121

பாஷாணச் சுண்ணம்

வழுத்தவே வெள்ளிவித்தை ஒன்றுகேளு
வாகாக வெள்ளையென்ற பாஷாணந்தான்
அழுத்தவே வெள்ளாவி தன்னிற்றானும்
அடைவாகச் சுத்திசெய்து யெடுத்துநீயும்
பழுத்தவே அயச்சட்டிக் குள்ளேயிட்டு
பண்பாக வெடியுப்புச் சுருக்குச்சாமம்
தழுத்தவே போட்டுமே யெடுத்துநீயும்
தண்மையா யதின்மேலே கவசங்கேளே. 122

கவசமென்ன துருசினுட சுண்ணத்தாலே
கனிவாகக் க்வசமிட்டுக் கட்டிநீயும்
துவசமாய்க் குக்குடமாய்ப் போட்டுவாங்க
துடியாக வெள்ளைப் பாஷாணந்தானும்
தவசமாய் நீறியது சுண்ணமாகும்
தடையில்லாச் சுண்ணமது ஆச்சுதென்று
குவசமாய் வெள்ளீயம் நீறைவாங்கும்
கூக்குரலாம் வெள்ளியது கொள்ளையாமே. 123

கொள்ளையாம் வெள்ளீயம் நூற்றுக்கொன்று
கொடுத்திடுவா யுருக்குமுகந் தன்னிற்தானும்
பள்ளையாம் வெள்ளியது ஆடும்பாரு
பதிவாக வங்கமது கொடுத்துஊது
தள்ளையாம் சுயவெள்ளி யாகும்பாரு
தனையெடுத்து வித்துமே செலவுசெய்து
துள்ளையா யுண்டுடுத்தித் தொழிலைப்பாரு
துடியான பாகமிது தோய்ந்துபாரே. 124

தோய்ந்துபார் வெள்ளைப் பாஷாணநீற்றை
துடியாக மத்திக்குத் துருசுக்கப்ப
வாய்ந்துபார் கதிரில்வைத்துக் காயப்போடு
வடிவாகக் குக்குடத்தில் சுண்ணமாகும்
நாய்ந்துபார் துருசுனுட சுண்ணந்தன்னை
நலமாகப் பித்தளையில் நூற்றுக்கொன்று
பாய்ந்துமே கொடுத்திடவே வெள்ளிதானும்
பதினாறு மாத்தாகும் பண்புமாமே. 125

பண்பாகத் துரிசினுட நீறுதன்னை
பதிவாக யிரும்புதனைத் தகடடித்து
உண்பாக மேல்தடவிப் புடமுமிட்டால்
உறுதிபெற வெள்ளியாம் உத்துப்பாரு
தன்மையாம் நவலோக மெல்லாம்வெள்ளி
சரியான பாகமிது கண்டுகொள்ளு
வண்மையா யிந்தவெள்ளி வித்துநீயும்
வடிவான பள்ளிதனைக் கட்டிவையே. 126

கட்டிவைத்து உள்ளேநீ சென்றுபுக்கு
கனிவாக மேல்நோக்கி அல்லாவைத்தான்
துட்டியாய்த் தொழுதிரஞ்சிப் போற்றிசெய்து
துடியாக மனதுள்ளே புக்கிச்சென்று
குட்டிபோ லிரையாதே மகம்மதுவை
குணமாகத் தொழுதிரைஞ்சு குணமதாக
நாட்டியே திரியாதே மிதப்பதாக
நலமாகப் பின்னுமே நாட்டங்காணே. 127

காணவே கைபாகந் தப்பிற்றானால்
கனிவாகத் தங்கமில்லை கண்டுகொள்ளு
வாணவே சுருக்காலே சரக்குச்சாகும்
வடிவான சுண்ணமதைக் கவசங்கட்ட
தோணவே சவுக்காரத் தாலேயாச்சு
துடியான தாளகத்தா லெல்லாமாச்சு
வேணபடி செய்யாம லுண்மையாக
விருப்பமாய்ச் சகலமுந்தான் சித்தியாமே. 128

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பான சவுக்காரச் சுண்ணத்தாலே
முத்தியாய் வெடியுப்புச் சுண்ணத்தாலே
முனிவான சகலசரக் கதனைக்கட்டும்
பத்தியாய்ச் சுண்ணத்தைப் பண்ணிநீயும்
பதிவாக நவலோகங் குடுத்துத்தீரு
நித்தியமாய் நவலோகம் பழுக்கும்பாரு
நீனிலத்தில் யாகோபு சொன்னவாரே. 129

சொன்னதொரு யிக்காண்டந் தன்னிற்தானும்
கருதிபெற நூற்றன்பத் தஞ்சுதன்னில்
நன்னயமாய்ச் சவுக்காரம் வைத்துநீயும்
நலமாகக் கருவாகச் சொன்னேன்பாரு
இன்னிலத்திற் கருவாக யெண்ணிப்பாரு
யிதமாகச் சகலமெல்லாஞ் சித்தியாகும்
தன்னகரில் கைபாக வரிசைகண்டு
தாக்கிடவே யெல்லாமு நன்மையாமே. 130

கல்லுப்புக் கட்டு

நன்மையாய்க் கல்லுப்புக் கட்டுக்கேளு
நலமாகக் கல்லுப்பு மணியாய்வாங்கி
உண்மையாய்ச் சீவியெடு விளாங்காய்போலே
உறுதியாய்ச் சீவியே பின்புநீயும்
தன்மைபெற வெடியுப்புச் செயநீர்தன்னில்
தாட்டிகமாய்ப் பச்சமொன்று வைத்துப்போடு
வண்மையாய்க் கதிர்தனிலே காயவைத்து
வடிவாக மேல்கவசம் வண்மைகேளே. 131

வண்மையாய் முன்வைத்த சவுக்காரத்தை
வளமாகக் கட்டியே கதிரில்வைத்து
உண்மையாய்க் குக்குடத்திற் புடத்தைப்போடு
உறுதிபெறக் கவசத்தைப் பிரித்துநீயும்
தண்மைபெறக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
தடையறவே கரியில்நின்று பொன்போலாடும்
கண்மையா யாடது போனால்பின்பு
கனிவாக முன்போலே துவைத்துப்போடே. 132

போட்டுமே சவுக்காரங் கவசங்கட்டி
போக்கோடே முன்போலே புடத்தைப்போடு
நாட்டுமே யெடுத்துப்பார் தங்கம்போலே
நலமாகக் கரியில் நின்றுஆடும்பாரு
பூட்டுமே யிதுபூட்டுச் சொன்னேன்
புகலரிய கைபாக வரிசையாலே
காட்டுமே காணுநீ யெல்லாந்தானும்
கரியில்வைத்து கல்லுப்பு மணிபோலாமே. 133

மணியான உப்புநின்று உருகும்போது
மாட்டுமே நாலுக்கு ஒன்றுதங்கம்
தணியான தங்கமது ஒன்றுபோடு
தாக்குகின்ற தங்கயிடை நாகம்போடு
பணியாக உருக்கிடவே யெல்லாம்சேர்த்து
பதிவாகக் களங்கரகும் யெடுத்துவைத்து
நணியாக நபிமாரைத் துதியேசெய்து
நாடியே பின்புதான் நாட்டங்கேளே. 134

நாட்டமாய் நவலோகம் நூற்றுக்கொன்று
நாடியே யிட்டிடவே மாத்துப்பத்தாம்
கூட்டமாய்ப் புடத்துக்குங் காவிக்குந்தான்
குணமாக யிறங்கிவிடுங் கூர்மைமெத்த
தாட்டமாய் யிதைவித்துச் செவுசெய்து
துணையாகச் சேர்ந்திக்கி யெல்லோர்க்குந்தான்
முட்டவே குடுத்துவிடு பின்புநீயும்
முனிவாக அதன்பின்னே சொல்லக்கேளே. 135

செந்தூரம்

சொல்லவே களங்கதுவும் பலமும்நாலு
துடியான கல்வமிட்டுத் தொக்கவேதான்
மெல்லவே வெடியுப்புச் செயநீர்விட்டு
விதமாகச் சாமம்ரெண்டு விரசாயாட்டி
கல்லவே உமிநெருப்பில் வறுத்துநீயும்
கனிவாகக் காசியென்ற மேருக்கிட்டு
வல்லமையா யெரித்திடவே முருக்கம்பூப்போல்
வடிவாகச் சிவப்பாகும் வாதமாமே. 136

வாதமாம் நவலோகந் தன்னிலீய
வடிவான மாத்தென்ன பதினாறாகும்
நீதமாய்ப் பணவிடைதான் தேனிலுண்ண
நிலையாத காயமிது காயசித்தி
பேதமில்லா னோவெல்லாந் தவிடுமாகும்
பிரபலமா யாகோபு சொன்னநீதி
சாதகமா யிம்மொழிகள் நிசமாகும்
சரியான பாகமிது சார்ந்துபாரே. 137

சார்ந்துபார் உப்பைவிட்டு வாதம்பார்த்தால்
சரியான வாதமில்லை தயங்குவார்கள்
பார்ந்துபார் சுட்டுமே தவிப்பாரப்பா
பகராிய வெடியுப்புச் சுண்ணமில்லா
தார்ந்துமே சாக்கடையி லெரியலாகும்
தவித்துமே திரிந்தலைவார் சவங்கள்வாதி
உளர்ந்துமே நட்டப்பார்க ளொன்றுங்காணார்
உலுத்தரச வாதிதா னுண்மையாமே. 138

தானென்ற நூல்தனிலே வெடியுப்பைத்தான்
தடைபடவே சொன்னார்கள் உலுத்தரப்பா
ஊனென்ற வாதிமார் செய்துபார்த்து
உப்புத்தா னின்னதென்று அறியாமற்றான்
கானென்ற புளியறியார் மலத்தைத்தானே
கடுமையா யெடுத்துமே சுண்ணஞ்செய்து
ஊனென்று கருத்துமே யெரிவாரப்பா
உத்துணர்ந்து பாராதார் உறுதிதானே. 139

உறுதிதா னறியாமால் உலுத்தமாண்பர்
ஒருகோடி வேதைகளும் பார்த்துப்பார்த்து
அறுதியே கூட்டியே சுட்டுக்கெட்டு
அடைவாகப் பொய்சொல்லிச் சோறுமில்லா
குறுதிபோல் கக்கியே திரிவார்பாரு
குணமில்லார்க் கொன்றுமில்லை குறுக்கிச்சொல்லி
நிறுதியாய்ப் பொய்சொல்லிப் புலம்புவார்கள்
நிலையில்லார்க் கொன்றுமில்லை நிலைமையாமே.140

நிலைமையா யிருந்துமே பாகமாக
நிறுத்தியே நூலதனைப் படித்துத்தேறி
அலையாமல் கைபாக வரிசைகண்டு
ஆதியாய்ச் செய்துமே கடையில்விற்பார்
உலையாமற் சாஸ்திரத்தைப் பேசுவார்பார்
உறுதிமிகச் சொல்லியே புலம்பிநிற்பார்
கொலைகளவு மிவ்வாதி செய்யாரப்பா
கூடாதே யென்வசனம் பொய்போகாதே. 141

போகாதே சவுக்காரச் சுண்ணத்தாலே
புகழ்பெரிய சகலசித்து மாடாகும்
வாகாமல் வெடியுப்புச் செயநீராலே
வடிவான சரக்கெல்லாங் கட்டலாகும்
தாகாகத் துருசினுட சுண்ணத்தாலே
சகலசித்து மாடலாந் தடையேயில்லை
வேகாத காலேது சாகாக்காலு
வெந்தாக்கால் சுண்ணமெல்லாம் விருப்பமாமே. 142

வெடியுப்பு மோர்

விருப்பமாய்ச் சவுக்காரப் பலமும்பத்து
விதமான வெடியுப்புச் செயநீர்பத்து
அருப்பமா யிதுரெண்டுங் கலக்கிவைக்க
அன்பாகத் தயிர்போலே யிருக்கும்பாரு
குருப்பாக மத்தினால் கடைந்துபாரு
கொள்கியே வெண்ணெய்தான் வருகுமக்காள்
திருப்பார்வை யாகவே வெண்ணெய்தன்னை
சீக்கிரமா யெடுத்துவைத்துச் செயலைக்கேளு. 143

கேளுமே அடியில்நின்ற மோருதன்னை
செயமாக தாளகத்தில் சுருக்குத்தாக்கு
பாளுமே போகாதே சாமமொன்று
பதிவாக தாக்கியே ரவியிற்போட்டு
நாளுமே வெண்ணெய்தனை மேலேபூசி
நலமாகக் காயவைத்துப் பின்புநீயும்
வாளுமே சூடனுட தீயில்வாட்டு
வடிவம்போ லுருகியது மஞ்சளாமே. 144

மஞ்சளாங் கரிதனிலே வைத்துருக்கு
வடிவாக ஓடாது ஒளிந்திடாது
துஞ்சவே அரிதாரங் கட்டிப்போகும்
துடியான தாளகத்தின் கட்டுநாலு
தஞ்சமாய்க் குகையில்நின்று உருகும்போது
தாட்டிகமாய் நாலுக்கு ஒன்றுதங்கம்
வஞ்சமாய்த் தங்கமிடை நாகம்போடு
வடிவாகக் களங்காகும் வண்மையாமே. 145

வண்மையாய் நலலோகம் ஆயிரத்துக்கொன்று
வடிவாக யிட்டிடவே மாத்துக்கேளு
தண்மையாம் மாத்தது ஆயிரத்தியெட்டு
தடையில்லா தெல்லாம்நீ தாங்கிப்பாரு
உண்மையாய் விற்காதே சிலவாகாது
உறுதியாய் வைத்துமே பள்ளிதன்னில்
கண்மையாய்த் தொழுதிரைஞ்சிக் குரான்தன்னை
கருதியே பூசிக்கக் கருதுவாயே. 146

கருதியே பூசித்துக் குளிகைதன்னை
கனமாக வாயில்வைத்துப் பார்க்கும்போது
வருதியே ஆயிரத்தி யெட்டுமாத்தை
.வடிவாகக் கைதனிலே வைத்துநீயும்
உறுதியாய் நபிமார்க ளுண்ணைக்காண்பார்
உற்றுமே யிம்மாத்தைக் கண்ணிற்கண்டால்
பருதியே நபிமார்க ளுன்னைத்தானும்
பார்த்துமே தொழுவார்கள் பலன்சொல்வாரே. 147

சொல்வார்கள் கைலாகு கொடுப்பாரப்பா
சுருதிபெற உபதேச மிகவுஞ்சொல்வார்
வெல்வார்கள் தானிருக்கு மிடத்தைச்சொல்வார்
விதமாக நிசஞ்சொல்வார் விருப்பமாக
நல்லோர்கள் நலமாகப் பேசுவார்கள்
நாணிலத்தி லுன்னைத்தான் நம்புவார்கள்
கல்லுமையாய் வேதங்கள் ரெம்பச்சொல்வார்
கனிந்துமே பலனுண்டாங் கணக்குமாமே. 148

கணக்காகத் தாளகத்தைக் கட்டிநீயும்
கனிவாக உருக்கியே தங்கஞ்செய்து
வணக்காகச் செந்துரம் பண்ணக்கேளு
வடிவாகப் புகைநீரை விட்டுநீயும்
பணக்காக ஒருகோடி வித்தைக்காகும்
பதிவாகச் செந்தூரம் பண்ணிஉண்ணு
கணக்கமாம் காயசித்தி உடனேயாகும்
கண்டுரைத்தார் யாகோபு கருத்தில்தானே. 149

தானேதான் நூல்தனிலே யாகோப்சொன்ன
சரியான வாதத்தை நன்றாய்கண்டு
நானேநா னென்றுசொல்லிப் பாகமாக
நாடியே வைத்துமே வேலைபாரு
கானகத்தி லிருந்துமே கண்டுகொள்ளு
கருதியே ஒருவேலை தெரிந்துபின்பு
ஊனேநீ காயசித்தி உடனேபண்ணு
உருதியா யாகோபு ஓதினாரே. 150

ஓதினேன் சகலநூ லெல்லாம்பார்த்து
உற்றுமே கைபாக வரிசைகண்டு
நீதியாய் நிலையறிந்து செய்தாயானால்
நீனிலத்தில் ராசாவாம் நேர்மையாகும்
ஊதியே சரக்குகளை அனலிற்போட்டு
உறுதியாய்க் கொளுத்தினால் நாகமெய்தும்
வாதியாய்ப் பேரெடுக்க வேண்டாமப்பா
வடிவான பொன்னைத்தான் வாங்கார்தானே. 151

வாங்கார்கள் வாதங்கள் கிடைத்தபோது
வடிவாகப் பொய்யென்பார் மடையரப்பா
தூங்கியே வயித்தியன்போல் நின்றுநீயும்
துடியான வாதத்தைச் செய்துபாரு
ஏங்கியே திரியாதே நூலைப்பாரு
எளிதல்ல ரசவாதம் இருந்துநீயும்
தாங்கியே ஊமைபோ லுண்டுடுத்தி
தாட்டிகமா யிப்புத்தி அறிவில்செய்யே. 152

அறிவிலே வைத்துமே பொன்னைவிற்று
அடைவாக ஒருவருக்குங் காட்டொணாது
குறியாகக் கண்டானால் உன்னைத்தானும்
குடிகேடு செய்வார்கள் உலகோரப்பா
பிரியமாய்ச் சொல்லிவிட்டேன் தலைகள்போகும்
போக்கோடே புத்திகள் தான் மிகவுஞ்சொன்னேன்
வறியவர்போ லிருந்துமே வாதம்பாரு
வண்மைதான் யாகோபு வழுத்தினேனே. 153

நூல் தொகுப்பு

வழுத்தினேன் சுண்ணமென்ற காண்டந்தன்னை
வடிவாக அறுநூறு முன்னேபார்த்து
தழுத்தவே அதன்பின்னே முன்னூர்பார்த்து
தடையறவே வரிவரியாய்ச் சோதித்தேறி
கழுத்திலே ஆபரணம் போட்டாப்போலே
கனிவாக நூற்றைம்பத் தைந்தையுந்தான்
பழுத்துமே பார்த்துப்பின் மற்றென்னூலை
பதிவாகப் பார்த்தாக்கால் பண்புமாமே, 154

பண்பாக யிந்தநூற் றன்பத்தஞ்சில்
பதிவான சவுக்காரச் சுண்ணஞ்சொன்னேன்
நண்பாகத் துருசினுட சுண்ணஞ்சொன்னேன்
நாடியே கைபாக வரிசைகண்டு
உண்பாகச் செய்துமே செந்தூரித்து
உடனுண்ணு காயசித்தி உடனேயாகும்
கண்பாகத் தங்கங்கள் மிகவுஞ்செய்ய
காதலா யாகோபு கருதினேனே. 155

கருதியே அல்லாவைத் தொழுதுபோற்றி
கருத்துணர்ந்த நபிமாரைத் தொழுதுபோற்றி
வருதியே மகமதுவைத் தொழுதுபோற்றி
வடிவான வேதத்தைத் தொழுதுபோற்றி
உருதிபெறக் கருவாக யிந்தநூலை
உண்மையாய்ப் பாடிவிட்டேனுலகந்தன்னில்
இருதயத்திற் கற்றுணர்ந்தால் வாதமாகும்
எழுதினேன் நூற்றிஅன்பத் தைந்துமுற்றே.

யாகோபு நபியார் அருளிச்செய்த சுண்ணக்காண்ட சூஸ்திரம் 155 முற்றிற்று

உ
குருவேதுணை

யாகோபு அருளிச்செய்த
சூஸ்திரச் சுருக்கம் 57.

நாத னாகிய நல்லதோர் சித்தர்தம்
பாதந் தன்னைப் பணிந்திந்த மக்கத்தில்
வேதமாக விளங்குமெய்ஞ் ஞானியை
நீதமாக நிதந்தொழு தேத்துவாம்

ஏரியதோர் வளர்ந்தபிண்டம் சுண்ணம்நாலு
இதமாகப் படியளந்து தோண்டியிட்டு
மீரியதோர் தோண்டிதனி/லிட்டமுக்கி
மேதினியிற் நவச்சாரம் பலந்தான்பத்து
கூரியதோர் பொடியாக்கி நடுவில்வைத்துக்
குணமாக மேற்றோண்டி கவிழ்த்துமுடி
நாரியதோர் சிலைசெய்து அடுப்பிலேற்றி
நலமாக யெரித்திடுவாய் சாமம்பத்தே. 1

பத்திட்டுக் கடுமையா யெரித்துஆத்திப்
பணியவெடு பிரித்திடவே மேலேயேறிச்
சத்துநிற்கும் பார்க்குச்சி தன்னாற்றானே
தனைச்சுரண்டி பீங்கானிற் பனியில்வைக்க
நித்தியமாம் செயநீராம் வெள்ளம்போலாம்
நிலைக்கவெடு சீஷாவி லடைத்துநீயும்
முத்திபெருந் துருசுதன்னைத் தோய்த்துப்போட்டு
முதன்மைபெற வெட்டுநாட் டோய்த்துப்போடே. 2

போட்டுமே சுண்ணாம்பு வீரம்நேரே
பொருந்தமஞ்ச ளாந்துருசு மேலேகட்டு
நாட்டுமே கவசமிட்டு அங்கியிட்டு
நலமாகக் குக்குடத்தில் நீறிப்போகும்
கூட்டுமே நீலனிடை சூதம்போட்டுக்
கூட்டியரை சாரநீ ரதனினாலே
வாட்டுரச கற்பூரம் நாலுத்கொன்று
வகையாக நிறுத்திட்டு அரைத்துக்கொள்ளே. 3

கொள்ளப்பா முன்னீரா லரைத்துசாமம்
குணமாகக் குக்குடமாய்ப் போட்டெடுக்கத்
தெள்ளப்பா குருவாகுந் துருசுசெம்பில்
திறமாக உருக்கியிடை குருவைத்தாக்கு
மெள்ளப்பா அதைவாங்கித் தட்டத்தூளாம்
வெள்ளியது நால்சேர்த்து ஊதிப்போடு
நல்லதங்க மூதினதோ ரிடைக்குச்சேரு
நலமாக உருக்கியே தகடுதட்டே.

மெல்லவே கல்லுப்புப் பலமும்நாலு
மேன்மைபெற்ற செங்கல்மா மூன்றுமாகும்
கொல்லவே பொடித்துமிதற் குள்ளேவைத்துக்
கொடுமையாய் மூன்றுபுடம் போட்டுவாங்கு
மல்லாத்திப் புடமிறக்குந் தங்கந்தானும்
மயமாகுங் கொண்டிடவே வெண்மையாக
எல்லார்க்கும் மேலான குருவைப்பேணி
இன்னமதின் பாகமதை யியம்பக்கேளே. 5

கனகமது கொண்டிடைதா னுருக்குமந்தக்
கனகத்தை யெடுத்துமெள்ள வித்துக்கொள்ளு
இனமத்த யிடந்தனிலே நின்றுவாழும்
இனிதான ஞானத்தி னியல்புபாரு
உனவுடனே ஆறுதல மேறிப்பாரு
உத்தமித்தாய் வந்துநிற்பாள் உலகந்தன்னில்
சனகனருள் பெறுவீரா யிந்தப்போக்குத்
தாஷ்டிகவான் யாகோப்புச் சொன்னவாறே. 6

சட்டியிட்டு யிரும்புஅரப் பொடியும்பத்துத்
தாக்கிவிடு தாளகமவ் விடையேசேர்த்துக்
கொட்டிவிடு கலயத்தி லிட்டுப்பாணி
குணமாக நாளொன்று அரைத்தெடுத்து
முட்டியிட்டு யிரும்குஅர பொடியும்பத்து
முடிவாகக் காரத்தமவ் விடையேசேர்த்து
ஒட்டிவிடு குகையிலிட்டு உருக்கிப்பாரு.
உறுதிபெறக் கால்நிற்கும் உற்றுப்பாரே. 7

எடுத்துப்பா ரிருப்பதுவும் கழிந்துநல்ல
இதமான தாளகத்தி னீயமாகும்
அடுத்துநிறு காலாகும் வீரம்போட்டு
அதையரைத்துப் பொற்றலையின் நீரினாலே
விடுத்துப்பார் வில்லைபண்ணிப் புடமூன்றிட்டால்
விதமாகச் செந்தூரம் பூப்போலாகும்
கொடுத்துப்பார் துருசுனுட செம்பில்நூறு
குணமாக வொன்றிடவே யேமமாமே. 8

ஏமமாம் பணவிடைதான் தேனிலுண்ண
இருந்தவிடந் தெரியாது சிலேற்பனங்கள்
காமமா மிகுதியுறும் வாயுவெல்லாங்
கடல்புக்கும் பித்தமுந்தான் காணாதோடும்
வாமமாம் பெண்கள்தான் மயங்குவார்கள்
வடிவதுதான் செவ்வலரி போலாம்மேனி
சோமன்போ லாகுமிந்தச் செந்தூரந்தான்
சொல்லரிது யாகோபு சொன்னதாமே. 9

கருநாகந் தனைக்கரண்டி தன்னிலிட்டுக்
கரிதனிலே யுருக்கி அசம் நீறிற்சாய்த்து
வழிநாகஞ் சுத்தியதாம் குகையிலிட்டு
வகையாக உருக்கியிடை அரிதாரத்தைப்
பரிவாகக் கிராசமிடு நொறுங்கும்நல்லாய்ப்
பார்த்துயெடு கல்வமிட்டு அரையன்னத்தால்
சிறுகாக வில்லைபண்ணி அங்கியிட்டுத்
திடமாக மாளமட்டும் புடத்தைப்போடே. 10

போட்டுபுடஞ் சிவக்கமட்டும் போட்டெடுக்கப்
பொறுமையுடன் செம்புருத்தம் பூப்போலாகும்
தாட்டிகமா யெடுத்துவைத்துத் துருசுச்செம்பில்
தனையுருக்கி யிடைகொடுக்கத் தூளாய்ப்போகும்
காட்டாதே யித்தூளை மதியில்நாலில்
கணக்காக வொன்றிட்டு ஊதிப்போட்டு
வாட்டமுடன் யேமமிடை சேர்த்துருக்கு
வகையாகத் தகடுதட்டிப் புடத்தைப்போடே. 11

இறங்குமது திரியிடையி லொன்றுதப்பும்
இதமாக யெடுத்துவித்துச் செலவுசெய்து
நிறங்களது குன்றாமற் செந்தூரத்தை
நிர்ணயமா யுண்டிடவே காயந்தானும்
உறங்குமது தாதுக்க ளிறுகிப்போகும்
உதிரத்தின் நோயெல்லா மொழிந்துபோகும்
வரங்களது முண்டாகு மயக்கந்தீரும்
வழுத்தினேன் யாகோபு வளமாய்த்தானே. 12

எப்படியும் பிழைப்புக்கு வாதஞ்சொன்னேன்
இறசூலின் கிருபையதா லின்னஞ்சொல்வேன்
செப்பமுள்ள மக்கமதீ னத்துக்கேகி
திரும்புகையில் மெய்யென்ற சேகந்தன்னை
இப்புவியில் நெடுநாளா யிருப்பதற்கு
எத்தனையே பாகமது சொல்லிவைத்தேன்
முப்பொருளை யறிந்துநீ சுண்ணமுப்பு
முடிப்பதற்கு வகையான சூத்துத்தானே. 13

கூத்தனிடை வாழ்மடந்தை யிடையேசேர்த்துக்
குழிக்கல்வ மிட்டரைத்து யெருக்கம்பாலால்
நேத்தியதா யரைத்துருட்டிக் கதிரில்வைத்து
நேருள்ள அப்பிரகம் வீரங்காலாம்
பார்த்துமரை பாணியதால் வெண்ணெய்யாகும்
பதிவாகப் புடமிட்டு யெடுத்துக்கல்வம்
சேர்த்துஅரை பாணியுமுண் ணுண்டைமேலே
செப்பியிடு உண்டையொன்று கவசம்நாலே. 14

கவசமது கட்டிஅன்னந் தன்னிலிட்டுக்
கனியவதை மேல்மூடிச் சுண்ணத்தாலே
துவசமெரி அடுப்புதனிற் கடூரமாகத்
தூக்கியிரு சாமமெரித் தெடுத்துப்பாரு
நவசமது மேற்கவசம் பிரித்துத்தள்ளி
நாடியெடு குழிக்கல்வ மிட்டுநன்றாய்
உவசமதா யுண்டையிடை யிரதஞ்சேர்த்து
உண்மையுள்ள வீரமது அரைக்கால்போடே. 15

போட்டுபச்சைக் கற்பூர மரைக்காலிட்டுப்
புகலரிய அன்னமென்ற சோத்தாலாட்டி
நீட்டுவில்லை அங்கியிட்டு யெடுத்துமேலே
நிலவரமாய்த் துணிசுத்திச் சுண்ணமுப்பும்
காட்டுமதை யரைக்கட்டு பெரியதாகக்
கருத்துறவே புடம்போடக் குருவுமாகும்
தேட்டிவரும் சொன்னேன்யா கோபுயானும்
திறமாக களங்கமிது செய்துபாரே. 16

களங்கத்தைத் துருசுடனே செம்பிரண்டிற்
கணக்காக வொன்றிடவே பொடியுமாகும்
உளங்குளிர மதியதனை ஊதிப்போடு
உண்மையுள்ள பட்டமதிற் பாதியேயாம்
தளம்பவதைத் தகடடித்துப் புடங்களிட்டால்
தப்பாமல் யேமமாம் தாக்கியாடும்
பழம்பழுத்த வாறொக்கும் வாதமாகும்
பதிவான யாகோபு பலன்சொன்னாரே. 17

பொய்யாது வாதங்கள் களங்குமார்க்கம்
போக்கோடே செய்தாக்கால் யேமமாகும்
வையகத்திற் காட்டாதே செயலைத்தானும்
வடிவான பொருளறியார் மாடுமொக்கும்
மெய்யாகச் சொன்னாலும் விருத்தமாண்பர்
மேதினியிற் பொய்யென்பார் முழுமூடர்தான்
கைதனிலே வெண்ணெய்தனை வைத்துக்கொண்டு
கனிவாக வுருக்கறியார் கருத்திலாரே. 18

அரிதாரம் நாற்களஞ்சி அயமும்நேராய்
அதையரைத்து உருக்கிமெள்ளக் கல்வத்திட்டு
பெரிதான நாகமது களஞ்சிநாலாம்
பிசகற்றால் வீரமிட்டு நையத்தட்டி
விரிவாக அரைத்துநாக மல்லிச்சாற்றால்
விதமாக வில்லையங்கு புடமுமிட்டால்
குறிபோலா மஞ்சளது யெல்லாம்பற்பம்
கூட்டியெடு முன்அயத்தி லிடையேசேரே. 19

இடைசேர்த்துப் பொற்றலையா லாட்டிவில்லை
எடுத்துகதிர் காயவைத்துப் புடமூன்றிட்டுத்
தடையறவே சிகப்பூரகு மெடுத்துநல்ல
தக்கமுள்ள துருசுரவி மட்டம்போலாம்
விடையாகச் சேர்த்திடவே யேமமாகும்
வெற்றிபெறப் பணவிடைதான் தேனிலுண்ணத்
தடைபடா நோயெல்லாந் தவறிப்போகும்
தாட்டிகமாய் யாகோபு சொன்னவாரே. 20

குருட்டுநாய் ஈசலைத்தான் தாவித்தாவி
குணமற்று ஊளையிட்ட குணமதாகும்
திருட்டுநாய் சிறுவீட்டி னுள்ளேசென்று
திடமாகக் கதவடைத்து அடிபட்டாப்போல்
இருட்டறைக்குட் புகுந்தகள்ளன் யிடிபட்டாப்போல்
இனமாகக் கைபாகந் தெரியாமாண்பர்
உருட்டுகின்ற தேங்காயை நாய்போலொக்கும்
உண்மையாய்ச் சொன்னேன்யா கோபுதானே. 21

சரக்கதனை யரைக்கவதன் காரந்தாக்கிச்
சரியாகக் கண்சிவந்து குதறிற்றானால்
பாக்கவெடு வெண்கலத்தின் கிண்ணிதன்னைப்
பாங்காகக் கவிழ்த்துபழச் சாற்றையூத்தி
உரக்கவுரைத் துருப்பிடித்த வட்டிதன்னில்
உரைத்துமே களிம்பாக்கிக் கண்ணிலிட்டால்
குரைகண்ணி லிட்டிடக்கண் வலியும்நீங்கும்
குற்றமற யாகோபு குணஞ்சொன்னாரே. 22

வாதவயித் தியந்தன்னை யொருவருக்கும்
வகைகாட்டில் நாகமது உனக்குமாகும்
வேதமது நால்வேதத் தொகுப்பாய்நின்ற
வினையமுள்ள கைபாக மறியவேணும்
யோகம்வந்து ஒருபொருளைக் கற்றுக்கொண்டால்
ஊமையதை ஒருவருக்கும் சொல்லப்போகா
சூதமுனி யிம்மார்க்க மருளிச்சொன்னார்
சுயமாக யாகோபு சொன்னவாறே. 23

வாருனக்கு உலகத்தில் வாதஞ்சொல்லி
வகையான பண்டிதமும் வகையுஞ்சொன்னேன்
சாருவேன் கைபாகம் வரிசைபாரு
சரிவரவே களங்குமுதற் சாட்சிசொன்னேன்
பேருலகு தனில்மாட்டு நடப்பும்பார்த்துப்
பேதாபே தங்களெல்லாம் பெருமைகண்டு
காருலவு பரிகாரம் முன்னேசெய்து
கர்த்தனுட வாதத்தைப் பின்புசெய்யே. 24

வாசுகியி னிடைசமமாய்க் காரிசேர்த்து
வட்டமிட்டு உருக்கியிடு அன்னந்தன்னில்
நீசமறச் சாய்த்துயெடு ரெண்டுபத்து
நிலவரமாய்க் களிம்புஅருங் குகையிலிட்டு
ஆசையுடன் அரிதார மிடையேதாக்கு
அதுகருக்குங் கல்வமிட்டு அன்னந்தன்னால்
தாசமற அரைத்துவில்லை கரியில்வைத்துத்
தாட்டிகமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரே. 25

எடுத்தன்ன மிதிலிட்டுச் சாமமெட்டு
இழுத்தரைத்து இப்படியே சிவக்கமட்டும்
அடுத்துவிடு செந்தூரம் முருக்கம்பூப்போல்
அதையெடுத்துத் துருசுரவி நூறொன்றிட்டால்
கொடுத்துவைத்த யேமமா மிந்தவித்தை
கொள்ளைகொள்ளை யாயிருக்கும் வாதமாட்டு
தொடுத்தகை பாகத்தை மறக்கவேண்டாம்
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுமாமே. 26

கண்டுயெடு பணவிடைதான் தேனிலுண்ணக்
கதிர்மதியாந் தேகமது கற்றூணாகும்
தொண்டுசெய்வா ருலகத்தோர் சொல்லவேண்டாம்
தோகையர்தான் வசமாவார் துலங்கத்தானும்
பண்டுசெய்த பழவினைகள் தீர்ந்துநல்ல
பதிவான பிணியகலும் கடலேபுக்கும்
வண்டுமயிர் போலாகும் பாகமாக
வழுத்தினார் யாகோபு வண்மையாமே. 27

நாகமது பவளம்போற் களங்குதானும்
நற்சிகப்புச் செந்தூரம் அலரிப்பூப்போல்
பாகமது சுண்ணமுமல் லிகைப்பூப்போலாம்
பதிவான மெழுகதுதா னிளக்கமாகும்
தங்கமது தயிலந்தான் நிறங்கறுப்பு
தாஷ்டிகமாய் நிறங்களறி மருந்துதன்னை
யோகமது வந்திடுங்காண் பாகமாகும்
யூகமாய் யாகோபு உரைத்தேன்பாரே. 28

சத்தெடுத்தாற் கறுப்பாக விருக்கும்பாரு
சரியான வயஞ்சேர்த்தா லிப்படிக்கு
முத்தான வெண்காரஞ் சேர்த்துருக்க
முடிவான அயக்கசட்டை நீக்கும்நீக்கும்
நத்தியே சத்திநிறஞ் சிவந்துகாணும்
நலமில்லை யென்றுமே யெரியவேண்டாம்
சித்தான அயத்திலுள்ள செம்பெடுத்தாற்
சீமானாய்ப் போகலாந் தெளிந்துபாரே. 29

நல்லாகச் சிவந்தசத்தைக் கல்வத்திட்டு
நலமான புகைநீரை விட்டுப்பார்க்க
எல்லாமுந் துருசதுபோல் நீலமாகும்
இதனைவைத்து உருக்கினா லோடிப்போகும்
வல்லமையாய்க் கேசரியைச் சட்டியிட்டு
வகையாக உருக்குமுகந் தன்னிலீயச்
சல்லாப மாய்ச்சாமம் வைத்தெடுத்துத்
தாம்புரத்தில் மெய்க்களங்கு தாக்கிடாயே. 30

இழுத்ததொரு செம்பைத்தான் காரஞ்சேர்த்து
இயல்பாக உருக்கிப்பார் செம்புமாகும்
வழுத்தவே மதியேழு செம்புமூன்று
வகையாகச் சேர்த்துருக்கித் தங்கஞ்சேர்த்து
அழுத்தமுள்ள தங்கமடா ஆணிக்கொக்கும்
அடைவான செம்பிடைக்குத் தங்கங்கூட்டிப்
பழுக்கஅடி தகடாக அடித்துநீயும்
பாங்காக் களங்குபண்ணிற் சித்தியாமே. 31

அடுத்துநின்ற அயச்செம்பிற் றங்கந்தானும்
அடைவாகப் பிறந்ததினால் நிறத்தைக்கேளு
கொடுத்துவைத்து பசுமையாம் நிறங்குன்றாது
குணமான யீயத்திற் பிறந்ததங்கம்
நடுத்தரமாம் நிறங்கேளு ஆணிக்கொப்பாம்
நலமான தாளகத்திற் பிறந்ததங்கம்
பழுத்துமே பழுப்பான தங்கமாகும்
பகராிய கெந்தகத்தின் பரிசுகேளே. 32

நல்லாகச் சாணாக் காசுமாகும்
நல்லதங்க மாயிருக்கும் நாட்டம்பாரு
சொல்லான முன்னோர்கள் சொன்னசொல்லலைத்
துப்புரவாய்ச் சோதித்துப் பார்த்துச்சொன்னேன்
எல்லாமுஞ் சூதத்திற் பிறந்ததங்கம்
இயல்பான பீர்க்கம்பூ நிறமுமாகும்
பல்லாமல் வீரத்திற் பிறந்ததங்கம்
பாலான வெள்ளைநிற மாகுந்தானே. 33

உண்டான தங்கத்திற் பிறந்ததங்கம்
உறுதிபெற நிறமதுவை சொல்லக்கேளு
கண்டான தங்கம்போல் நிறமுமாகும்
கருத்தான தாயைப்போற் பிள்ளையாகும்
பண்டான நிறஞ்சொன்னேன் பதிவுகண்டு
பக்கமுள்ள வேதைமுகங் கண்டுயாகோப்
பாகமதைச் சொல்லுகிறேன் பரிந்துகேளு
பக்குவமாய் எல்லாமும் நீற்றத்தானே. 34

எல்லாமும் நீற்றுதற்கு உபாயங்கேளு
எரிபுளுகு வீரமொடு பூரம்வண்டு
வல்லான உரஞ்சூதஞ் சவுக்காரந்தான்
வகையான கார்முகியுஞ் சூடனோடு
நல்லாக யிதுசேரிற் பொருமிநீறும்
நாதாக்கள் சொன்னதிந்த நாட்டப்போக்குச்
செல்லாத யிடங்களிலே செலுத்தாதென்று
செப்பினார் யாகோபு திறமிதாமே. 35

உண்டான களங்குகள்தான் செய்தபோது
உறுதிபெறப் புடம்போட லாகாதென்று
கண்டவுடன் சரக்கெல்லாஞ் சேர்த்தரைத்துக்
கனிவாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டுப்
பண்டான சுடர்க்கொடியோன் பலமெடுத்துப்
பதிவாக நாலாகப் பிரித்துநீயும்
முண்டாகக் கொழுத்தியே களங்கையிட்டு
முதிராம லஞ்சுதரம் வாட்டிக்கொள்ளே. 36

வாட்டியே குகையிலிட்டு உருக்கித்தீரு
வகையாகக் காரமது கூடச்சேர்த்து
கூட்டியே உருக்கிடவே சத்தில்நின்ற
குணமான கசடகலும் சிவந்துநிற்கும்
தாட்டிகமாய்ப் புகைநீரை விட்டுநீயும்
தன்மைபெற நாளெட்டுப் பார்க்கும்போது
நீட்டிவிடும் நீலம்போற் குழம்பாய்நிற்கும்
நேராக வொட்டிடவே யெரித்திடாயே. 37

நல்லாக யெரித்திடவே உருகிநிற்கும்
நாட்டிலே யிச்செம்பை யெடுக்கக்கேளு
வல்லமையாய்த் துருசுனுட செம்புருக்கு
வகையாக இடைக்கிடைதான் கிறாசம்போடு
வெல்லவதை யிழுத்திடுங்காண் மட்டஞ்சேரு
விதமாகத் தங்கத்தைச் சேர்த்துவூத
எல்லாமுந் தங்கமாம் நேர்மைபாரு
இதமான யாகோபு யெழுதினாரே. 38

சொன்னபடி செம்புதான் வருகாப்போனால்
சொற்பெரிய வங்கத்தை வெடியுப்பாலே
முன்னமே சொன்னபடி வறுத்துச்சேர்த்து
முக்கியமா யுலரவைத்துச் சத்தினோடே
நன்னயமாய்ச் சேர்த்தரைத்து உருக்கித்தீரு
நல்லசெம்பு பிடித்திழுக்கு மதியிற்றாக்கு
கன்னல்போல் மதிதன்னிற் றாக்குந்தங்கம்
கனிவாகச் சேர்த்தூதத் தங்கமாமே. 39

நல்லாகச் சத்தில்நின்ற செம்புதானும்
நாடியே வருகாமற் போனாற்கேளு
உல்லாச மானகே சரியைத்தானும்
உக்குமே சட்டியிட்டு உருக்கும்போது

வில்லாகப் புகைநீரிற் பிரிந்துநின்ற
உறுதியாய்க் குழம்புதன்னை யதிலேதாக்கு
கல்லாகச் சேர்த்தசெம்பை யிழுத்துக்கொள்ளும்
கழிந்துமே மதிதனிலே தாக்கிப்பாரே. 40

அடுத்துநின்று சேர்த்தசெம்பு மதியிற்றானும்
அடைவாகச் சென்றுபுக்குந் தங்கஞ்சேரு
கொடுத்துருக்கித் தகடுதட்டிப் புடத்தைப்போடு
குணமுள்ள தங்கமிரண் டிடையும்நிற்கும்
படுத்துமே போகாது களங்குதங்கம்
பார்கடையில் சொல்லிவிட்டேன் கைபாகந்தான்
எடுத்தாக்கா லெப்படியும் பலனுமாகும்
ஏழையாம் வாதிக்குச் சொன்னவாறே. 41

சத்திலுள்ள செம்பெடுக்க யீயச்செம்பு
சரியான கேசரியு மூன்றுபேரும்
நத்திபிடித் தெடுத்துமெடுக் காமற்போனால்
நலமான தங்கமில்லை பிரட்டிலோர்க்கு
முத்திபெறச் சத்திலாச் செம்பைச்சேர்த்து
மூவுலகும் மெச்சமதி தன்னிலீந்தால்
சுத்திநிற்கும் தீயைவிட்டுச் செம்புதானும்
துரிதமாய்க் கழன்றுவிடுந் திண்ணந்தானே. 42

களங்குசெய்து புடம்போட்டு யெடுக்கவேண்டாம்
கனிவாகச் சூடனுட தீயில்வாட்டு
உளங்குளிரச் சாகாது உயரும்மாத்து
உயர்வான லோகமுந்தான் பழுத்துப்போகும்
வளங்களாய் வாட்டையிலே நெருப்புமிஞ்சில்
வடிவாக வில்லையது உதித்துப்போகும்
தளங்கள்பெற வுறத்தூது நன்றாய்த்தானே
தடையறவே தப்பினாற் கறடுமாமே. 43.

நல்லறிவாய் யுபரசங்கள் நவலோகங்கள்
நாடதிலே பாஷாணங் காரசாரம்
சொல்லுமுனே சூதமுதற் செந்தூரிக்கச்
சுருதிபெற மால்தேவி சிலைதான்ஜெந்தி
கல்லான கெவுரியப் பிரகந்துத்தம்
கடிதான வெடியுப்பு யிவைகள்சேரில்
உல்லாச மாகவிது சேர்த்தானாகில்
உணமையா யெல்லாமுஞ் சிவந்துபோமே. 44

சாயமா யினச்சரக்கைச் சாற்றக்கேளு
தடையற்ற வுப்போடு நாகந்தங்கம்
மாயமதா யிரும்போடு நிமிளைசூதம்
வடிவுபெறக் கெவுரியுட வர்ணமாகும்
நாயமா ரிதையறிந்து சொன்னாரப்போ
நான்பார்த்து உங்களுக்கு நடத்தைசொன்னேன்
காயமது நிலையில்லை கண்டுமுன்னே
கணக்காகச் செந்தூர முண்டுதேறே. 45

எச்சரக்குங் கட்டவொரு செய்திகேளு
இனியவெடிச் சுண்ணத்தாற் சாக்குக்கட்டும்
தசையற்ற திராவகத்தால் சரக்குக்கட்டும்
திற்செயலாந் தயிலத்தாற் சரக்குக்கட்டும்
இச்சையுடன் செயநீராற் சரக்குக்கட்டும்
இதமான மெழுகாலே சரக்குக்கட்டும்
நச்சரவ மூலிகையாற் சரக்குச்சாகா
நாகரீக யாகோபு நலஞ்சொன்னாரே. 46

சத்துருக்குங் காலமதைச் சாற்றக்கேளு
சரியான ஐப்பசிக்கார்த் திகையுமாகும்
பத்துருக்கு மார்கழியு மிக்காலத்திற்
பதியவே உருக்கியெடு எலும்புபோலாம்
நத்தியே உபரசங்க ளெல்லாஞ்சத்தாம்
நலமாக முன்னோர்கள் சொன்னசொல்லை
நித்தியமும் பார்த்தறிந்தே னிவைகளெல்லாம்
நிதானித்தேன் யாகோபு நிசஞ்சொன்னேனே. 47

குருமுடிக்குங் காலமது மாசியாகும்
குணமாகும் பங்குனியுந் தையுமாகும்
வருகுமது செயநீருங் கேணிநீர்போல்
வாகாக யெடுக்கெடுக்க வெள்ளமாகும்
திருமுகமாஞ் சரக்கெல்லாங் கட்டுங்காலம்
க்ஷணத்திலே வாதமுமாஞ் செயலோமெத்த
உருக்கினமுங் கட்டினமும் நல்லதாகும்
உளத்துமுறை யாகோபு வோதினாரே. 48

செந்தூரக் காலமது ஆடிமாதம்
சிவந்திடுமா வணிபுரட் டாசிதன்னில்
அந்தமுடன் புகைநிற்குங் காலமாகும்
அறிவாயக் காலத்திற் செய்துகொள்ளு

வந்ததொரு காலத்தில் வண்மையாகும்
வகைகண்டு சரக்குமுதல் சிவந்துநிற்கும்
முந்துவினை காலத்திற் செந்தூரத்தை
முனிவாக வுண்டிடவே சித்தியாமே. 49

புடம்போடுந் திட்டங்கள் பேசக்கேளு
பேரான யெருவொன்று காடையாகும்
நடம்போடுங் கவுதாரிப் புடமும்நல்ல
நாடியே யெருமூன்று ஞானிக்குத்தான்
விடம்போடு பத்தெருவிற் புடமுமாகும்
விராட்டிதான் ஏனத்தின் செயலுக்குத்தான்
கடம்போடு அறைதோறு மழுக்கிநல்ல
கனமாகப் போவது கணக்குமாமே. 50

திட்டமா யெருநூறு கனபுடந்தான்
திடமான கெசபுடமும் ஆயிரந்தான்
வட்டமா யடுக்கிப்புடம் போட்டெடுத்தால்
வதையாமற் சாரவரும் பரிவுமெத்த
விட்டகுறை வந்தாலோ கிட்டும்பாரு
விடுபடா திருந்தாக்கா லெல்லாம்பாழாம்
சட்டமதா யாராய்ந்து நூல்கள்பார்த்துத்
தாக்கினார் யாகோபு தன்மைதானே. 51

சுண்ணமது செய்யவென்றால் துருத்தியொன்று
துடியாக ரெண்டானால் உருக்கலாகும்
நன்னயமாய்ச் சத்துயென்ற செம்புக்குத்தான்
நாட்டிடுநீ நால்துருத்தி நல்லதாகும்
கன்னல்போ லுருகியது சத்துமாகும்
களிம்பறவே யுருக்கிற்பொன் நிறம்போலாகும்
இன்னிலத்திற் பாகமது யியல்புமெத்த
இருந்துரைத்தார் யாகோபு யினியவாக்கே. 52

பதங்கமது வைப்பதற்கு யெரிப்புக்கேளு
பதியவொரு விறகதுதான் தீபமாகும்
விதங்களாம் விறகிரண்டு கமலமாகும்
விறகஞ்சாம் விறகுகாடாக் கினியுமாகும்
அதங்களாம் முட்தீயு மருளிச்செய்தேன்
அருள்பெருகும் பற்பஞ்செந் தூரமெல்லாம்
இதமாக விட்டுவிட்டு யெரிக்கவேண்டாம்
இன்பமாய் யொருவிதமா யெரித்துக்கொள்ளே. 53

சத்துருக்கும் குகையதனைச் சொல்லக்கேளு
சரியான பொருக்குமண் ணீராறாகும்
நத்தியிடும் உமிக்கருக்கு ஆறதாகும்
நலமான கமுதைமலம் ரெண்டதாகும்
முத்திடும்வெண் கற்பொடிமா விரண்டினோடு
முனிவான சீலைசுட்ட சாம்பலரெண்டு
நித்தியமாய் கடுக்காயின் கஷாயத்தாலே
நிலைக்கவிடு வுரலிலிட்டு மூசைபண்ணே. 54

பண்ணிடுநீ குகைபண்ணி யதிலேவைத்துப்
பதிவாக உபரசங்கள் உருக்கிப்பாரு,
தண்ணீர்போ லுருகுமது குகையும்போகா
தாக்கியெடு கிழியாது உறந்துநிற்கும்
விண்ணிலிடி விழுந்தாலு முடையாதப்பா
விரும்பியிந்தக் குகையிலிட வலுவுமெத்த
உன்னமது உபரசங்கள் சத்துமாகும்
உத்துணர யாகோபு உரைசெய்தாரே. 55

சொல்லாய்ந்த பெரியோர்கள் சொன்னசொல்லைத்
துறந்தார்கை பாகமாய்ப் பார்த்துத்தேறி
நல்லாய்ந்து நூல்வளமை கண்டுதேறி
நாட்டினேன் யெழுநூற்றுச் சொட்சமாக
வல்லவர்கள் காண்பார்கள் சாஸ்திரத்தை
வகையில்லார் காணவுமே மாட்டாரென்று
உல்லாச மாகவேதான் வாழ்வீரென்று
உறுதிபெற்ற யாகோபு உண்மைதானே. 56

ஒருதரத்துக் கிருதரமாய்ப் பார்த்துப்பாகம்
உறுதியொடு பாகம்வரும் மெழுகுமாகும்
பெருகுமது பாகம்வந்தா லனேக லாபம்
பெற்றிடுங்காண் ரசவாத வித்தைதானும்
திருகுவது வாராமற் செய்துதேறு
திட்டமுடன் வயித்தியங்கள் நன்றாய்ப்பாரு
குருவதுதான் நூலாகும் படித்துத்தேறு
கொட்டினேன் யாகோபு குறிப்புத்தானே. 57

யாகோபு சூஸ்திரச் சுருக்கம் 57
முற்றிற்று

தாமரை
நூலகம்